# கோயமுத்தூரிலிருந்து
# ட்ரங்க்கால்

அன்பை மட்டுமே வாங்கவும் கொடுக்கவும் தெரிந்த வாசக நெஞ்சங்களே!

வணக்கம்...!

சென்ற மாதம் நான் ட்ரங்க்காலில் சொல்லியிருந்த வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய - பத்து - கட்டளைகளுக்கு வாசகர்களிடையே மிகப்பெரிய விரவேற்பு. நிறைய வாசகர்கள் போன் செய்து 'அந்த பத்து கட்டளைகளையும் என்னுடைய டயரியின் முதல் பக்கத்தில் குறித்து வைத்துக் கொண்டேன். அதில் குறைந்தது ஐந்தையாவது கடை பிடிக்க வேண்டும் என்று சபதமும் செய்து கொண்டேன்' என்று பேசியபோது என் மனசுக்குள் சந்தோஷம் பொங்கி வழிந்தது. ஆனால் சென்னையிலிருந்து வாசகர் குருவாயூர் கண்ணன் என்னோடு டெலிபோனில் பேசியபோது மனம் லேசாய் வலித்தது.

"ஸார்... நான் குருவாயூர் கண்ணன்...!"

"சொல்லுங்க கண்ணன்..."

"ட்ரங்க்காலில் பத்து கட்டளைகளைச் சொல்லி



வாசகர்களைக் கடை பிடிக்கச் சொல்லியிருந் தீங்க... அப்படி கடை பிடிச்சா வாழ்க்கையில் வெற்றியும் சந்தோஷமும் கிடைப்பது உறுதின்னு சொல்லியிருந்தீங்க...?"

"ஆமா..."

"அது பொய் ஸார்..."

"பொய்யா...?"

"ஆமா... ஸார்...! நீங்க

(தொடர்ச்சி 96 ஆம் பக்கம்)

# க்ரைம் நாவல்

க்ரைம் நாவல் - 186

பிப்ரவரி - 2003



என் இனிய வாசக நெஞ்சமே!

வணக்கம்!

தஞ்சைத் தரணி யெல்லாம் தலை நிமிர்ந்து சாய்ந்தால் நம்மைப் பார்த்து நம்மிடம் ஓடி வாய் பரப்பது போல பச்சைப் பசேல் என இருக்க வேண்டிய நிலங்கள் எத்தியோப்பியா நாட்டு குழந்தை போல் காய்ந்து சருகிவிட்டது.

இங்கு சென்னையில் தை மாதமே முடியவில்லை; ஆனால் தண்ணிக்கு 'தை தை' போடும் காலம் விரைவில் என்பது போல் சூழ்நிலை.

## எடிட்டர் ஏரியா

(2 ஆம் அட்டைத் தொடர்ச்சி) 

சொல்லியிருந்த பத்து கட்டளைகளை நான் பத்து வருஷமா கடைபிடிச்சுட்டு வர்றேன். எந்த விதமான கெட்ட பழக்கமும் என்கிட்ட கிடையாது. ஆனாலும் வாழ்க்கையில் எனக்கு சந்தோஷம் இல்லை. ரெண்டு முதுகலைப் பட்டம் வாங்கியிருக்கேன். இன்னும் ஒரு நல்ல வேலை கிடைக்கலை ஸார்... யாரோட மனசும் கஷ்டப்பட்டுடக்கூடாதுன்னு நான் நினைக்கிறேன் ஸார். ஆனா மத்தவங்க அப்படி நினைக்கிறது இல்லையே! இது நல்லதுக்கான காலம் இல்லை ஸார்..."

"கண்ணன்! உங்களுக்கு என்ன வயசு?"

"முப்பது ஸார்."

"வாழ்க்கையை இப்பத்தான் ஸ்டார்ட் பண்ணியிருக்கீங்க... அதுக்குள்ளே இவ்வளவு விரக்தியா...? ஒரு விஷயத்தை நீங்க நல்லா புரிஞ்சுக்கணும். கடந்த பத்து வருட காலமா அந்த பத்து கட்டளைகளையும் கடைபிடிச்சு ஒழுக்கமாயிருந்ததால் தான் நல்லாப் படிச்சு ரெண்டு முதுகலைப்பட்டங்களை வாங்கியிருக்கீங்க. ஒரு பள்ளியில் ஆசிரியராகவும் வேலை பார்த்துகிட்டு இருக்கீங்க..."

"சம்பளம் குறைச்சலாயிருக்கே ஸார்?"

"பெரியவங்க என்ன சொல்லியிருக்காங்க தெரியுமோ?"

"சொல்லுங்க ஸார்."

" 'உனக்கும் கீழே இருப்பவர் கோடி. நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு...' நல்ல பழக்க வழக்கங்களை கடைபிடிக்கும்போது அதற்குரிய பலன்கள் மெதுவாத்தான் கிடைக்கும்... களைகள் வேகமா வளரும். பயிர்கள் நிதானமா வளர்ந்து பலன் கொடுக்கும். வாழ்க்கையில் செல்வம் சேர்ப்பது சாதனை கிடையாது. செல்வம் என்கிற வார்த்தை பணத்தைக் குறிக்கிற வார்த்தை கிடையாது கண்ணன்."

"பின்னே...?"

"கல்யாணத்தின்போது தம்பதிகளைப் பெரியவங்க பதினாறு செல்வங்களும் பெற்று வாழ்க என்று

- தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்

(96ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்த்துவாங்க... அந்த பதினாறு செல்வங்களும் எதுஎது தெரியுமோ...?"

"சொல்லுங்க ஸார்.. தெரிஞ்சுக்கிறேன்."

"நோட் பண்ணிக்குங்க கண்ணன்! 1. வாழ்க்கையில் நமக்கு வழிகாட்டக்கூடிய கல்வி. 2. நீண்ட ஆயுள். 3. நல்ல நண்பர்கள். 4. வாழ்க்கைக்குத் தேவையான பணம். 5. உண்மையான உழைப்பு. 6. நோயற்ற உடம்பு. 7. எதற்கும் கலங்காத மனவலிமை. 8. அன்பான மனைவி. 9. ஒழுக்கமான குழந்தைகள். 10. மேன்மேலும் வளரக்கூடிய புகழ். 11. மாறாத வார்த்தை. 12. தடங்கல் இல்லாத வாழ்க்கை. 13. சிக்கனமாக செலவழித்து சேமிப்பை அதிகரித்தல். 14. திறமையான குடும்ப நிர்வாகம். 15. பெரியவர்களின் வாழ்த்துக்கள். 16. கடவுள் நம்பிக்கை -

இந்த பதினாறும்தான் உண்மையான செல்வங்கள்."

"சூப்பர் ஸார்..."

"யாரு க்ராஸ்டாக்ல...?"

"ஸார்... நான் A.M.M.F. ஹஸன். ஃபேரம் கண்டி, ஸ்ரீலங்கா...!"

"ஓ...! ஹஸன்... நீங்களா... உங்க நீளமான லெட்டர் கிடைச்சுது. நன்றி. லெட்டர்தான் உடனே போடமுடியலை..."

"பரவாயில்ல ஸார்... க்ராஸ் டாக்ல உங்களைப் பிடிச்சுட்டேனே...! மொதல்ல அடுத்த க்ரைம் நாவலுக்கான தலைப்பை சொல்லுங்க ஸார்... வேற யாராவது க்ராஸ் பண்ணிடப் போறாங்க..."

"இதோ... தலைப்பு... சாவியைப் பிடிங்க."

"சாவியைப் பிடிக்கிறதா..? என்ன ஸார் சொல்றீங்க?"

ஆமாங்க ஹஸன்! அடுத்த க்ரைம் நாவலோட தலைப்பு... **"சொர்க்கத்தின் சாவி."**

"அடேடே...!"

டொக்...!

மிக்க அன்புடன்,
**ராஜேஷ்குமார்.**

# ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்

★ நியூஸிலாந்தில் நம் கிரிக்கெட் அணி வாங்கிய உதை எப்படி?

- ஜி.பிரபுராம், பெங்களூர்.

★★ தோல்வியில் உலக சாதனையை செய்து தலை குனிந்து நிற்கிறது நம் இந்திய கிரிக்கெட் அணி. குறைந்த ரன்களில் தோல்வி மேல் தோல்வி. டெஸ்ட் தொடரில் படுதோல்வி. ஏழு ஒரு நாள் போட்டிகளில் ஐந்தில் மண் கவ்வி தோல்விகளை அள்ளிக் குவித்துவிட்டார்கள் நம் வீரர்கள். அணியின் கேப்டன் தோல்விகளை பெருந்தன்மையாக ஏற்றுக்கொள்ளாமல் 'நியூஸிலாந்தின் சீதோஷ்ணநிலை சரியில்லை. பிட்ச் சரியில்லை. மட்டை சரியில்லை. பௌலிங் சரியில்லை. பந்து சரியில்லை, அம்பயர் மோசம்' என்று மூக்கால் அழுது கொண்டே பேட்டி கொடுப்பது அவர் ஆடுவதைவிட படுமோசம். பங்களாதேஷ் அணியை நல்ல அணி என்று சொல்ல வைத்துவிடுவார்கள் போலிருக்கிறது.

★ ஒரு நடிகையிடம் இருக்க வேண்டியது எது...? இருக்கக்கூடாது எது...?

- பொன்னீலன், கரூர்.

★★ இருக்க வேண்டியது - ரொக்கம்.
இருக்கக்கூடாதது - வெட்கம்.

★ உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்காதபோது மனம் உற்சாகத்தை இழக்கிறதே என்ன செய்ய?

- ஆர்.ஜேஸ்மின்ரமேஷ், கம்பம்.

★★ ஒரு சின்ன பிரிஸ்க்ரிப்ஷன். இதை மூன்று



வேளை சாப்பிடுங்கள், ஸாரி படியுங்கள் ரமேஷ். ப்ரிஸ்க்ரிப்ஷன் இதுதான். பகவான் கீதையில் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமோ? 'நீ உன் கடமையைச் செய். பலனை எதிர்பார்க்காதே!' ஆனால் தேவைப்படும் வேளையில் அந்த பலன் இரண்டு மடங்கு கிடைக்கும்.

★ நான் சாப்பிடும்போது என் மனைவி 'தொண தொண'வென்று பேசிக்கொண்டே இருக்கிறாள். அதை நிறுத்த வழி என்ன ஸார்?

- பி.முருகேஷ், பொள்ளாச்சி.

★★ ஒரு வழியும் கிடையாது. அந்த பேச்சையும் சேர்த்து விழுங்கி ஜீரணம் பண்ணிக்கொள்ள வேண்டியதுதான். எல்லா வீடுகளிலும் இதுதான் நடந்து கொண்டு இருக்கிறது சகோதரா!

★ அன்றைய கே.ஆர்.விஜயா சிரிப்பு. இன்றைய சிநேகா சிரிப்பு - எது டாப்...?

- எஸ்.லட்சுமிகாந்தன், நங்கநல்லூர்.

★★ என்றைக்குமே காந்திஜியின் பொக்கைவாய் சிரிப்புத்தான் டாப்.

★ எந்தவிதமான கவலையும் இல்லாமல் வாழவே முடியாதா ஸார்?

- எம்.அசோக்பாபு, திருச்சி.

★★ அம்மாவின் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தை வாழ்ந்து கொண்டு இருக்கிறதே... ஸார்.

★ ஒரு க்ரைம் ஜோக் சொல்ல முடியுமா...?

- ஈரோடு-அருண், ஈரோடு.

★★ ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தார் ஒருவர். அப்போது நல்ல கோடைகாலம். வெய்யில் கட்டெரித்தது. பயணிக்கு மிகுந்த தாகம் எடுத்தது. உடனே அவர் ரயில்வே ஊழியரை அழைத்து தாகத்தை தணிக்க குளிர்ச்சியான பானம் கொடுக்கும்படி கேட்டார்.

அந்த ரயிலில் குளிர்ப்பெட்டி வசதியில்லை. எனவே அந்த ரயில்வே ஊழியர் ஒரு கோப்பையில் ஐஸ் கட்டிகளை மிதக்கவிட்டு லெமன் ஜூஸ் கொண்டு வந்ததைப் பார்த்ததும் பயணி வியப்பும் சந்தோஷமும் அடைந்தார். பானத்தை சுவைத்தவாறே தன் நன்றியைத் தெரிவித்தார்.

ரயில்வே ஊழியர் ''ஐயா! நீங்கள் உண்மையில் நன்றி தெரிவிக்க வேண்டியது மிஸ்டர் வில்லியம்ஸுக்குத்தான்'' என்றார்.

''வில்லியம்ஸா... எங்கே அவர்...?''

''அவர் இறந்துவிட்டார் ஸார்'' என்றார் ஊழியர்.

பயணி திகைத்தார். ஊழியர் தொடர்ந்தார்.

''அவர் உடல் இந்த ரயிலில்தான் எடுத்துச் செல்லப்படுகிறது. அது கெடாமல் இருப்பதற்காக ஐஸ் கட்டிகளை வைத்திருக்கிறார்கள். அதிலிருந்துதான் தங்களுக்கு இரண்டொரு ஐஸ் கட்டி எடுத்து வந்தேன்.''

## பரிசுக்குரிய கேள்வி

★ ஒரு பெண்ணுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இந்த நான்கும் இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். இதில் 'பயிர்ப்பு' என்றால் என்ன?

- உமாநாகராஜ், திட்டச்சேரி.

★★ பிற ஆடவரின் உடலின் எந்தப் பகுதியாவது தெரிந்தோ தெரியாமலோ தன் மீது பட்டுவிட்டால் ஒரு பெண்ணுக்கு ஏற்படும் நடுக்கமே பயிர்ப்பு என்பது. (என்னுடைய கல்லூரி தமிழ் பேராசிரியர் சொன்னதை அப்படியே சொல்லிவிட்டேன்.)

★ மன நிம்மதிக்காக எந்த ஆன்மீகப் புத்தகம் படிக்கிறீர்கள்?

- எஸ்.மைதீன், சாத்தூர்.

★★ நிம்முடைய மனமே ஒரு ஆன்மீகப்



புத்தகம்தான். அதை மௌனமாக ஒரு பத்து நிமிஷம் புரட்டிப் பார்த்தால் போதும். மனசு 'கப்-சிப்.'

★ பாப்கார்ன் சாப்பிடுவதால் என்ன நன்மை...?

- வி.மகாதேவன், கோவை.

★★ நன்மை சாப்பிடுபவர்க்கு இல்லை! விற்பவர்க்கு.

★ நீங்கள் யார்க்காவது லஞ்சம் கொடுத்தது உண்டா?

- எஸ்.தேவு, மணப்பாறை.

★★ நான் பொய் சொல்ல விரும்பவில்லை.

★ மனைவியை கைக்குள் போட்டுக் கொள்ள என்ன வழி?

- வீரபாண்டியன், மதுரை.

★★ மணிபர்ஸ் கொஞ்சம் பெரிதாக இருந்தால் போதும்.

★ சாத்தான்குளம்...?

- பி.மணிபாரதி, தூத்துக்குடி.

★★ ஜெயிக்கப் போவது யார்... ஆதாமா? ஏவாளா? பொறுத்திருந்து பார்ப்போம்.

★ காதலுக்குத் தேவையானது எது...?

- பாரதிரமேஷ், சென்னை-6.

★★ நான்கு கண்கள்.

'ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்' பகுதிக்குக் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:

**ராஜேஷ்குமாரிடம் கேளுங்கள்,**
க்ரைம் நாவல், ஜீயே பப்ளிகேஷன்ஸ்,
6, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை - 600 005.

# வாசகர் கடிதம்

'ஒரு நதி, ஒரு பௌர்ணமி, ஒரு பெண்' - முற்றிலும் மாறுபட்ட நாவல். கதையின் கதாநாயகி மதுராவே எல்லோரையும் குழப்பியது சூப்பர்.

**- அவெகா, கள்ளக் குறிச்சி.**

R.K.சார் தன்னுடைய ட்ரங்க்கால் பகுதியின் மூலம் வாழ்வில் வெற்றி பெறுவதற்கு சொன்ன பத்து வழிகளும் முத்தான வரிகள்.

**- ஆர். ஆனந்தமுருகன், அந்தணப் பேட்டை**

சீனியர் 'விவேக்'கும் ஜூனியர் 'விஷ்ணு'வும் எங்களை புத்தாண்டின் முதல் நாளே படபடக்க வைத்து விட்டனரே?! அசத்தலான அட்டைப் படத்தை தந்து அச்சமூட்டி விட்டீரே! ஆர்.கே. ஸார். தந்துள்ள ''பத்து'' சிந்தனைகளும் ''முத்து''. அதைக் கடைப்பிடிப்பது எங்கள் ''சொத்து''

**- S.N.ரமேஷ் ராஜ், பெரம்பலூர்.**

கொலைகளே இல்லாமலும் க்ரைம்நாவலை எழுத முடியும் என்பதை அண்ணன் R.K. அவர்கள் நிரூபித்திருக்கிறார்.

**-எம். ஜெயச்சந்திரன், துறையூர்.**

கொலைகளே இல்லாமல் கொலைக்கதை. ரியலி... சூப்பர். ஆர்.கே. சாரை தவிர வேறுயாராலும் முடியாது.

**- ஏ. சேஷாத்ரி சீனிவாசன், செங்கல்பட்டு.**

ட்ரங்க்கால், எடிட்டர் ஏரியா, கேள்வி பதில், அர்த்தமுள்ள அரட்டை எல்லாம் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. விவேக் சாரும் விஷ்ணுவும் அடிக்கும் லூட்டி என்னையும் அறியாமல் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்தது.

**- ஸ்ரீ முருகன், காங்கேய நல்லூர்.**

# அர்த்தமுள்ள அரட்டை

**- ராஜேஷ்குமார்**

டெலிபோனில் பேசிக்கொண்டிருந்த ரூபலா ரிஸீவரை கோபமாய் வைத்துவிட்டு புலம்பினாள்.

''பொய் சொன்னாலும் பொருத்தமா சொல்லணும்... அதுக்காக இப்படியா...?''

காலை ஸ்டார் நியூஸில் கவனமாய் இருந்த விவேக் கவனம் கலைந்து திரும்பினான். ''என்ன ரூபி! போன்ல யாரு...?''

''நம்ம வேலைக்காரி தங்கம்...!''

''என்னது... வேலைக்காரி தங்கமா...?''

''ஆமாங்க... போன் பண்ணி லீவு சொல்றா...''

''இதப் பார்ரா...''

''அவளை என்னான்னு நினைச்சுட்டிருக்கீங்க... அவளோட பையன் எஸ். டி. டி. பூத் வெச்சிருக்கிறதால லீவு சொல்லணும்னா போன்லயே சொல்லிடுவா... லீவு சொல்லட்டும்... நான் வேண்டாம்னு சொல்லலை. ஆனா அதுக்கு காரணம் சொல்றாளே... அதுதான் எரிச்சலாயிருக்கு...''

''என்ன காரணம் சொல்றா...?''

''அவளுக்கு ப்ளட் ப்ரஷராம்... இன்னிக்கு ஒருநாள் பூராவும் ரெஸ்ட் எடுக்கச் சொல்லியிருக்காராம் டாக்டர்...''

''ஏன்... அவளுக்கு ப்ளட் ப்ரஷர் இருக்கக்கூடாதா...?''

''ப்ளட் ப்ரஷர் எல்லாம் பணக்காரங்களுக்குத்தானே வரும்?''

விவேக் சிரித்தான்.

''அதெல்லாம் முந்தி...! இப்போ ப்ளட் ப்ரஷர்ன்னு சொல்லப்படுகிற ரத்த அழுத்தம் ஏழைக்கும் சொந்தம். பணக்காரனுக்கும் சொந்தம்.''

''அப்படியா...?''

''என்ன அப்படியா... மொதல்ல ரத்த அழுத்தம்ன்னா என்னான்னு உனக்குத் தெரியுமா...?''

''எப்பவோ டாக்டர் சொன்னது. இப்போ ஞாபகம் இல்லை...''

''இயல்பான இந்த ரத்த அழுத்தம் ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர் வாழ தேவையான ஒன்று. இந்த ரத்த அழுத்தத்தினால்தான் மனிதனின் உடம்புக்குள் ரத்தம் சீராக பாய்ந்துகொண்டிருக்கிறது. ரத்தம், உடம்பில் இருக்கும் அத்தனை உறுப்புகளுக்கும் போகிறது. உயர் ரத்த அழுத்தம் இருந்தாலோ... குறைந்த ரத்த அழுத்தம் இருந்தாலோ முதலில் பாதிப்புக்கு உள்ளாவது இதயம்தான்.''

ரூபலாவுக்கு ஆர்வம் தொற்றிக்கொண்டது. விவேக் அருகில் உட்கார்ந்து கொண்டாள்.

''அப்படியா...?''

விவேக் தொடர்ந்தான். ''ரத்த அழுத்தத்தை சிஸ்டாலிக் அழுத்தம், டயாஸ்டாலிக் அழுத்தம் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம். சிஸ்டாலிக் என்பது இதயம் சுருங்கும்போது ஏற்படும் நிலை. இது 100லிருந்து 150 வரை இருக்கலாம். டயாஸ்டாலிக் என்பது இதயம் விரியும்போது உள்ள நிலை. இது 60 லிருந்து 90 வரை இருக்கலாம். இவற்றின் அளவு அதிகரித்தாலோ குறைந்தாலோ ரத்த அழுத்த நோய் ஏற்பட்டு இருப்பதை தெரிந்துகொள்ளலாம்.''

''என்னங்க... ஒருத்தர்க்கு ரத்த அழுத்த நோய் இருக்கா இல்லையான்னு தோற்றத்தைப் பார்த்து கண்டுபிடிக்க முடியுமா?''

''முடியாது. ரத்த அழுத்தம் அதிகரிக்கும்போது அவர்களுடைய தோற்றம், இயக்கம், மனப்போக்கு, பேச்சு எல்லாமே இயல்பாக இருப்பதுபோல் தோன்றும். நோய் கடுமையாகும்போதுதான் பொறுத்துக்கொள்ள முடியாத தலைவலி, தலை சுற்றல், களைப்பு, மயக்கம்



ஏற்படும். எந்த நோய்க்காக ஒருத்தர் டாக்டர்கிட்டே போனாலும் சரி, அவர் முதலில் பரிசோதிப்பது அந்த நோயாளியின் ரத்த அழுத்தத்தைத்தான். இந்த ரத்த அழுத்தத்தின் முக்கியத்துவம் முதல் உலகப்போர்க்குப்பின்தான் கண்டறியப்பட்டது. அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளில் திடீர் மரணம் மற்றும் மார்புவலி, மாரடைப்புக்கு இந்த உயர் ரத்த அழுத்தம் காரணமாக இருக்கிறது. மேலும் மூளையின் ரத்தக் குழாய் உயர் ரத்த அழுத்தத்தினால் வெடித்து மூளையில் ரத்தம் கட்டியாகச் சேர்ந்து 'ஸ்ட்ரோக்' வருகிறது.''

''ரத்த அழுத்த விவகாரத்துக்குள்ளே இவ்வளவு விபரீதம் இருக்கா...?''

''உண்மையிலே உயர் ரத்த அழுத்தம் விபரீதம்தான். நம்முடைய இருதயம் இரவும் பகலும் ஓய்வு இல்லாமல் துடித்துக்கொண்டே இருக்கும். இந்த இருதயத்துடிப்பு தாயின் கருப்பையில் கருவளர ஆரம்பித்த மூன்றாவது மாதத்தில் துடிக்க ஆரம்பித்து, அந்த மனிதனின் மரணம் ஏற்படும்போதுதான் நிற்கிறது. அதுவரை ஓயாமல் துடித்து ரத்தத்தை 'பம்ப்' செய்துகொண்டே இருக்கும். ஒவ்வொரு துடிப்புக்கும் 70 லிருந்து 80 சிசி ரத்தம் இதயத்திலிருந்து வெளியே வருகிறது. ஒரு நிமிடத்துக்கு 5 லிட்டர் ரத்தம் இருதயத்திலிருந்து வெளியேறுகிறது.''

''இந்த ரத்த அழுத்தத்தை நாம் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ள முடியாதா...?''

''வைத்துக் கொள்ளலாம். தூங்கும்போதும், யோகா, தியானம் செய்யும்போதும் ரத்த அழுத்தம் குறையும். தினமும் அரைமணி நேரம் நடக்க வேண்டும். தினசரி 1400 கலோரி உணவுக்கு மேல் சாப்பிடக்கூடாது. 3 கிராம் உப்பு மட்டுமே உணவில் சேர்க்கப்பட வேண்டும். மது அருந்தக்கூடாது, புகை பிடிக்கக்கூடாது, வேலை பளுவால் மன உளைச்சல் வரலாம். அதைக் கட்டுப்படுத்த வேண்டும். இது தவிர ரத்த அழுத்தத்தை ஒழுங்குபடுத்தி சீர்படுத்த நமது உடலில் பல பகுதிகள் உள்ளன. அவற்றுள் சிறுநீரகம் அட்ரினலின் என்ற நாளமில்லா சுரப்பி, மூளை சிம்பத்தடிக் என்ற நரம்பு

மண்டலம் முக்கியமானது. சாதாரணமாக ரத்த அழுத்தம் 120/80 மில்லிமீட்டர் பாதரசம் முதல் 160/90 மில்லிமீட்டர் பாதரசம் வரையாகும். தொடர்ந்து ரத்த அழுத்தம் 160/95க்கு மேலிருந்தால் அதிக ரத்த அழுத்தம் என்று கூறலாம். இந்த உயர் ரத்த அழுத்தத்தின் விளைவாக ரத்தக் குழாய்கள் தடித்து விடுகிறது. ரத்தக் குழாய்கள் விரிவடையும் சக்தி குறைந்து இருதயம் பாதிக்கப்படுகிறது. இருதயத்தின் உள்ளே உள்ள இடது அறை தடித்து விடுவதால் மனிதனுக்கு சுவாசக் கோளாறு, மூச்சுத்திணறல், கால் வீக்கம், மார்பு வலி, ரத்தம் உறைவதால் ஸ்ட்ரோக் வரும். இருதய தசைகளுக்கு ரத்தத்தை எடுத்துச்செல்லும் கரோனரி ரத்தக் குழாயின் விட்டம் குறைவதால் ஹார்ட் அட்டாக் வர வாய்ப்பு அதிகம். அதே போல் மூளைக்கு ரத்தத்தை எடுத்துச் செல்லும் செரிபரல் ரத்தக்குழாய் தடித்து அதன் விட்டம் குறைந்து உள்ளே ரத்தம் உறைந்து ஸ்ட்ரோக் ஏற்பட வாய்ப்புள்ளது.''

''ரத்த அழுத்தம் பரம்பரை நோயா...?''

''அப்பா அம்மாவுக்கு இருந்தால் குழந்தைகளுக்கும் வரும். இது தவிர அதிக எடையுள்ளவர்கள், உணவில் அதிக உப்பு சேர்த்துக்கொள்பவர்கள், நான் - வெஜ் அயிட்டங்களை, மசாலா தின்பண்டங்களை இஷ்டத்துக்கு உள்ளே தள்ளுபவர்கள், மது, சிகரட்டுக்கு அடிமையானவர்கள், மன உளைச்சல் உள்ளவர்கள், சர்க்கரை நோய் உள்ளவர்கள் - இவர்களுக்கெல்லாம் உயர் ரத்த அழுத்த வியாதி வர வாய்ப்பு மிகமிக அதிகம்...''



''இதைக் கட்டுப்படுத்த மருந்துகள் இருக்கா?''

''ஏகப்பட்ட மருந்துகள் இருக்கு... ஒருவருக்கு ரத்த அழுத்தம் இருந்து அவர் மாத்திரை சாப்பிட ஆரம்பித்துவிட்டால் அதை தினசரி



சாப்பிட்டுக்கொண்டே இருக்கவேண்டும். நடுவில் நிறுத்தக்கூடாது. நிறுத்தினால் ரத்த அழுத்தம் திடீர் என்று உயர்ந்து சிறுநீரகங்களையும், கண்களையும் தாக்கும். இதனால் சிறுநீரகக் கோளாறும் பார்வைக் கோளாறுகளும் ஏற்படும்.''

''என்னங்க... ஒரு சந்தேகம்...''

''என்ன...?''

''ரத்த அழுத்தத்தை அளக்கிற கருவிக்கு என்ன பெயர்?''

**வாசகர்களே!**

ரூபலா கேட்ட இந்த கேள்விக்கு விவேக் பதில் சொல்வதற்குள் உங்களுக்கு பதில் தெரிந்தால் ஒரு தபால்கார்டை எடுங்கள். பதில் எழுதி கீழ்க்கண்ட முகவரிக்கு 20-2-2003க்குள் அனுப்பி வையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அர்த்தமுள்ள அரட்டை,**

**க்ரைம் நாவல், ஜீயே பப்ளிகேஷன்ஸ்,**
**6, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-5.**

இனி, சென்ற மாதம் கேட்ட கேள்வியும் அதற்கான பதிலும்.

**கேள்வி:** இந்தியாவில் உற்பத்தியாகிற எல்லா நதிகளுமே கடைசியில், கடலில் போய் கலக்கின்றன. ஆனால், ஒரே ஒரு நதி மட்டும் கடலில் போய் கலப்பது இல்லை. அது எந்த நதி...?

**பதில்:** யமுனா.

**சரியான பதில் எழுதிய 5 பேர்:**

1. வி. ஆனந்தன் - கடலூர் - 1
2. எம். வசுந்தரா - பாலிகஞ்ச் (டெல்லி)
3. டி. கஜேந்திரன் - கோவை - 2
4. ம. கண்வாயிரம் - நெற்குப்பை(சென்னை)
5. ஜே. மாசிலாமணியன் - காஞ்சிபுரம்.




# தித்திக்கும் தீ

## ராஜேஷ்குமார்

### 1

**இளம்பெண் தீக்குளித்து தற்கொலை**

கோவை, ஜன. 15 -

கோவை மாவட்டம் உடுமலை அருகேயுள்ள குரல்குட்டையைச் சேர்ந்த பொன்ராஜ் என்பவரின் மகள் சிவகாமி (18). இவர் திருமணமாகாமலே கர்ப்பமடைந்ததால் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார்.

பைகாரா அணையின் படகுத்துறை இல்லம்.

காலை பதினோரு மணி. எல்லாத் திசைகளிலும் பனிப்புகை ஸ்லோமோஷனில் நகர்ந்து கொண்டிருக்க அவைகளுக்கு மத்தியில் யூகலிப்டஸ் மரங்கள் எட்டிப்பார்த்து கிளைகளை அசைத்தன. பைகாரா அணை சமீபத்திய மழையில் நிரம்பி ஒரு கடல் மாதிரி காட்சி அளித்ததை பெருமையோடு பார்த்துக் கொண்டிருந்த சீஃப் என்ஜினியர் ஞானசம்பந்தன் ஒரு சிகரெட்டை பற்ற வைத்துக்கொண்டு தனக்குப்

பக்கத்தில் நின்றிருந்த அஸிஸ்டெண்ட் என்ஜினியர் சிக்கந்தரை ஏறிட்டார்.

''சிக்கந்தர்...''

''ஸார்...''

''கடந்த பத்து வருஷ காலத்துல இந்த தடவைதான் அணை நிரம்பியிருக்கு... இப்படியே நின்னுகிட்டு இருபத்திநாலுமணி நேரமும் பார்த்துகிட்டே இருக்கலாம் போலிருக்கு...''

''ஸார்... அணை நிரம்பி பார்க்க சந்தோஷமாத்தான் இருக்கு... ஆனால்...''

''என்ன ஆனால்...?''

''டூரிஸ்ட் கூட்டத்தையே காணோம் ஸார். ஊட்டிக்கு வர்ற டூரிஸ்ட்ஸ் நேரா முதுமலைக்கு போயிடறாங்களே தவிர பைகாரா டேமைப் பார்க்கணும், போட்டிங் போகணும்ன்னு யாரும் நினைக்கிறதில்லை... இது சீஸன் டைம். போட் ஹவுஸ்ல கூட்டத்தைப் பார்த்தீங்களா ஸார்? ஒண்ணு ரெண்டுன்னு வாய்விட்டு எண்ணிடலாம் போலிருக்கு. அதுவும் இன்னிக்கு சண்டே. ஒரு ஞாயித்துக்கிழமையன்னிக்கே கூட்டம் இவ்வளவு கம்மியா இருந்தா மத்தநாட்கள்ல எப்படி ஸார் இருக்கும்...? போட் ஹவுஸ்ல 79 படகுகள் இருக்கு... இன்னிக்குக் காலையிலிருந்து 11 படகுகள்தான் வாடகைக்குப் போயிருக்கு. பாக்கி 68 -ம் கரையில்தான் இருக்கு...! டூரிஸ்ட்டுகளை வரவழைக்க நாம ஏதாவது பண்ணியாகணும் ஸார்... இல்லேன்னா போட் ஹவுஸை இழுத்துப்பூட்ட வேண்டியதுதான்...''

சீஃப் என்ஜினியர் ஞானசம்பந்தன் தன் கையில் வைத்திருந்த பாதி சிகரெட்டை கீழே போட்டு பூட்ஸ் காலால் அணைத்துவிட்டு சொன்னார். ''நானும் கடந்த ஒரு வருஷ காலத்துல டூரிஸம் சென்ட்டர்க்கு எவ்வளவோ லெட்டர் எழுதிப் பார்த்துட்டேன். அவங்ககிட்டயிருந்து எந்த ரெஸ்பான்ஸூம் கிடையாது. அவங்களைப் பொறுத்தவரைக்கும் இது ஒரு டேம் - அவ்வளவுதான். டூரிஸம் சென்ட்டராவே அவங்க



நினைக்கப் பார்க்கிறது இல்லை.''

''ஸார்... ஒரு யோசனை...'' சொன்ன சிக்கந்தர் குரலைத் தாழ்த்திக் கொண்டு தொடர்ந்தான். ''அடுத்த வாரம் கவர்னர் ஊட்டியில் ஓய்வு எடுக்க வர்றார்... ஒரு வாரம் தங்கியிருக்கப் போறார்... அவரை நேர்லயே பார்த்து ஒரு மனு கொடுத்தா என்ன ஸார்...?''

''இதெல்லாம் கவர்னர்க்கு சில்லறை விஷயம்...! நாம மனுவைக் கொண்டு போனா கவர்னரோட பி.ஏ. அதை வாங்கிட்டு 'போய்ட்டு வாங்க'ன்னு ஒரு கும்பிடு போட்டுடுவார்... நாம வெளியே வர்றதுக்குள்ளே அந்த மனு குப்பைக்கூடைக்குப் போயிடும்...''

''வேற என்ன ஸார்... பண்றது...?''

''இதோ பார் சிக்கந்தர்... நீயும் நானும் இங்கே என்ஜினியர்ஸ்... டேமை பராமரிக்கிற வேலை மட்டும்தான் நமக்கு. 'போட் ஹவு'ஸைப்பத்தி நாம கவலைப்பட வேண்டியது இல்லை...''

''இருந்தாலும்... மனசு கேக்கல்ல ஸார்... டேம்ல பாருங்க ஸார்... நாலைஞ்சு படகுதான் தெரியுது...'' ஆற்றாமையோடு சிக்கந்தர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அட்டெண்டர் பழனிச்சாமி உள்ளே வந்தான்.

''ஸார்...''

இருவரும் திரும்பிப்பார்த்தார்கள்.

''என்ன...?''

''உங்களைப் பார்க்கிறதுக்காக ஒரு பொண்ணு வந்திருக்கு ஸார்.''

''பொண்ணா...?''

''ஆமா ஸார்...''

''என்ன விஷயம்ன்னு கேட்டியா...?''

''ஏதோ ஒரு பத்திரிக்கையிலிருந்து வருதாம். இந்த டேமைப் பத்தி கட்டுரை எழுதணுமாம்... உங்ககிட்டே பேட்டியும் எடுக்கணுமாம்... உள்ளே அனுப்பட்டுமா ஸார்...?''

சிக்கந்தர் ஞானசம்பந்தனைப் பார்த்து

புன்னகைத்தான்.

''ஸார்...! டேமைப் பத்தி நாம பேசிகிட்டிருந்த நேரம் ரொம்ப நல்லநேரம்ன்னு நினைக்கிறேன்... இல்லேன்னா லாட்டரி அடிச்ச மாதிரி கைமேல பலன் கிடைக்குமா...?''

''அந்தப் பொண்ணை வரச்சொல்லு பழனிச்சாமி... அப்படியே மூனு டீ கொண்டாந்துடு...''

பழனிச்சாமி தலையாட்டிவிட்டு அறையைவிட்டு வெளியேறிய அடுத்த நிமிஷம் அந்தப் பெண் உள்ளே நுழைந்தாள்.

ஒரு லைஃப் சைஸ் ஐஸ்க்ரீம் போல் தளதளப்பாய் இருந்த அந்த பெண்ணுக்கு வயது இருபதிலிருந்து இருபத்தைந்துக்குள் இருக்கலாம். நீள்வட்ட முகத்தில் கண்களும் உதடுகளும் முதல்பரிசு வாங்க போட்டி போடுவது தெரிந்தது. சந்தன நிற சுடிதார் அவளுடைய உடம்பின் எலுமிச்சம்பழ நிறத்தோடு ஒத்துப் போயிருந்தது. வலது தோள்பட்டையில் ஒரு நீளமான பை. பையிலிருந்து ஸ்கிரிப் பேடும் பேனாவும் எட்டிப்பார்த்தது.

''குட் மார்னிங் ஸார்... அ'யம் லட்சணா. ப்ரஸ் ரிப்போர்ட்டர்...''

ஞானசம்பந்தன் எதிரில் இருந்த நாற்காலியைக் காட்டிக் கொண்டே கேட்டார்.

''எந்த பத்திரிக்கையம்மா...?''

''அல்லி ஸார்...''

சிக்கந்தர் முகத்தில் கிரிப்பு ஒட்டிக்கொண்டது. 'வாரா வாரம் ஆறு லட்சத்துக்கு மேல் விற்பனையாகிற பத்திரிகையாயிற்றே?'

லட்சணா காலியாய் இருந்த நாற்காலிக்கு சாய்ந்தாள்.

''ஸார்...! அடுத்த வாரம் அல்லி பத்திரிக்கை 'சுற்றுலா சிறப்பித'ழாக வெளிவருது... மக்களுக்கு தெரிந்த சுற்றுலாத் தலங்களைப் பற்றி நாங்க எதுவுமே சொல்லப்போறது இல்லை... பிரபலமடையாத சுற்றுலாத் தலங்களைப் பற்றிச் சொல்றதுக்காகத்தான்



இந்த சிறப்பிதழ்...! பைகாரா அணையைப்பற்றி ஒரு ஆர்ட்டிக்கிள் பண்ணச் சொல்லியிருக்கார் எடிட்டர். அதுக்காகத்தான் நான் வந்திருக்கேன். நான் இந்த நீல்கிரிஸ் ஏரியாவுக்கு ரிப்போர்ட்டர்.''

ஞானசம்பந்தனின் கண்களில் சந்தோஷம் மின்னியது.

''ரொம்ப சந்தோஷம்மா...! இப்பத்தான் நானும் இவரும் இந்த டூரிஸ்ட் ஸ்பாட்டுக்கு மக்கள் பெருமளவில் வராததைப்பத்தி கவலைப்பட்டு பேசிகிட்டு இருந்தோம். எங்க மனக்குறையைப் புரிஞ்சுகிட்ட மாதிரி நீயே வந்துட்டே... இந்த டூரிஸ்ட் ஸ்பாட்டைப்பத்தி 'அல்லி' பத்திரிக்கையில் ஒரு ஆர்ட்டிக்கிள் வந்துட்டா அதுக்கு ஒரு தனி வேல்யூ இருக்கும்...''

லட்சணா புன்னகைத்தாள். ''ஸார்! இந்த அணையைப்பத்தி எனக்கு ஒண்ணும் தெரியாது. நீங்க சொல்லப் போகிற விவரங்களைத்தான் 'நான்' கட்டுரையா எழுதப்போறேன்.''

''கவலையே படாதேம்மா...! இவர் பேர் சிக்கந்தர். இந்த அணைக்கு அஸிஸ்டண்ட் என்ஜினியர். இவரை உங்ககூட அனுப்பிவைக்கிறேன். மொதல்ல அணையை சுற்றிப் பார்த்துட்டு வாங்க... அதுக்கப்புறமா உட்கார்ந்து பேசுவோம்...''

அட்டெண்டர் பழனிச்சாமி டீ கோப்பைகளோடு உள்ளே வந்தான். மேஜையின் மீது பரப்பினான்.

''டீ... எடுத்துக்கோம்மா...''

''வேண்டாம் ஸார்... இப்பத்தான் வர்ற வழியில் குடிச்சுட்டு வந்தேன்.''

''பரவாயில்லேம்மா... எடுத்துக்க...! இந்த 'சில்' க்ளைமேட்டுக்கு எவ்வளவு டீ குடிச்சாலும் தாங்கும்.''

''தேங்க்யூ ஸார்...!'' ஒரு டீ கோப்பையை எடுத்துக் கொண்டாள் லட்சணா. சிக்கந்தர் கேட்டான்.

''இப்போ 'அல்லி' பத்திரிக்கை எவ்வளவு சர்க்குலேஷன்?''

''ஆறு லட்சத்தை க்ராஸ் பண்ணிடுச்சு ஸார்.''

''டூரிஸ்ட் சிறப்பிதழ் என்னிக்கு வருது...?''

''அடுத்த புதன்கிழமை எல்லா கடைகளிலும் இருக்கும்.''

''இந்த நீல்கிரிஸ்ல வேற ஏதாவது டூரிஸ்ட் ஸ்பாட்டை பத்தி எழுதப்போறீங்களா...?''

''இல்லை... இந்த பைகாரா ஒண்ணுதான்.''

''டேமோட போட்டோஸ் வேணுமா?''

''கண்டிப்பா...''

லட்சணா டீ குடித்துவிட்டு எழ, சிக்கந்தரும் எழுந்தான். ''வாங்க... மொதல்ல டேமை சுத்திப் பார்க்கலாம். போட்ல போய் ஒரு ரவுண்ட் அடிச்சா எல்லாத்தையும் பார்த்துடலாம்...''

''எவ்வளவு நேரமாகும்...?''

''எப்படியும் ஒரு மணி நேரமாயிடும்...''

லட்சணா ஞானசம்பந்தனிடம் விடைபெற்று சிக்கந்தரோடு அறையினின்றும் வெளிப்பட்டாள். வெளியே காத்திருந்த ஐஸ் காற்று முகத்தில் மோதியது. கூடவே பதினோரு மணி வெய்யிலும் லேசாய் சுட்டது. இருவரும் மெல்ல நடந்தார்கள். படகுத்துறைக்குப் போகும் வழி சரிவாய் தெரிய இரண்டு பக்கமும் கேரட் விற்கும் சிறுவர்கள் வியாபாரம் இல்லாமல் சோர்வாய் ஸ்வெட்டர்க்குள் உட்கார்ந்திருந்தார்கள். சிக்கந்தர் நடந்து கொண்டே தயக்கக்குரலில் கேட்டான்.

''எக்ஸ்க்யூஸ்மீ... நீங்க மிஸ்ஸா... இல்லை... மிஸஸா...?''

''உங்களுக்கு எப்படி தெரியுது...?''

''மிஸ் மாதிரி...''

''அதேதான்...!''

''நேட்டிவ் ப்ளேஸ்...?''

''கோத்தகிரி...''

படகுத்துறையை சமீபித்தார்கள்.

''மோட்டார் படகில் போலாமா இல்லை துடுப்பு படகில் போலாமா...?''

''ரெண்டும் வேண்டாம். பெடலிங்...''



''ஓ.கே...!''

கரையோரம் கயிற்றில் கட்டப்பட்டிருந்த ஒரு பெடலிங் போட்டை விடுவித்து அதில் ஏறி உட்கார்ந்தார்கள். இருவரும் பக்கம் பக்கமாய் உட்கார்ந்து பெடலிங் செய்ய படகு நீர்ப்பரப்பில் நகர்ந்தது.

''மிஸ்டர் சிக்கந்தர்! இந்த அணைக்கு மொத்தம் எத்தனை என்ஜினியர்ஸ்...?''

''ஏழு பேர்...! ரெண்டு பேர் லீவ்ல இருக்காங்க. மூணு பேர் ஆன் ட்யூட்டியில் ஊட்டி போயிருக்காங்க... இன்னிக்கு டேம் ட்யூட்டியில் நானும் சீஃபும் இருக்கோம்...''

''இந்த டேம் எப்போ கட்டப்பட்டது...?''

''மிஸ் லட்சணா! நீங்க மொதல்ல டேமைச் சுத்திப்பாருங்க. அதுக்கப்புறம் சீஃப் என்ஜினியர்... உங்களுக்கு வேண்டிய டேம் பற்றிய விபரங்களைத் துல்லியமா புள்ளி விபரத்தோடு கொடுப்பார். நான் இந்த ஏரியாவுக்கு புதியவன். ட்யூட்டியில் சேர்ந்து ஆறுமாசம்தான் ஆகுது. இந்த டேமைப் பத்தின விபரங்கள் எனக்கு ஓரளவுக்குத்தான் தெரியும். நான் ஏதாவது சொல்லப்போக அது தப்பான தகவலாய் இருந்துவிடக்கூடாது பாருங்க...! 'அல்லி' பெரிய பத்திரிக்கை. லட்சக்கணக்கான பேர்கள் படிக்கக்கூடிய பத்திரிக்கை. அதில் தப்பாய் ஏதும் வந்துவிடக்கூடாது...''

லட்சணா தோள்களைக் குலுக்கினாள்.

''ஓ.கே... ஓ.கே...! மொதல்ல டேமை சுத்திப் பார்ப்போம். உங்க சீஃப்கிட்டயே எல்லாத்தையும் கேட்டுக்கறேன்...''

படகு இப்போது அணையின் மையப்பகுதிக்கு வந்திருக்க, நான்கு பக்கமும் தண்ணீர் அலைமோதியது. தொலைவில் சின்னச் சின்ன புள்ளிகளாய் வேறு சில படகுகள் தெரிந்தன.

சிக்கந்தர் சொன்னான். ''ரொம்ப வருஷத்துக்குப்

பிறகு இந்த வருஷம்தான் அணை நிரம்பியிருக்கு.''

''இந்த அணை என்னிக்காவது வறண்டு போயிருக்கா...?''

''இல்லை... அணையில் எப்பவுமே முப்பது அடி. ஆழத்துக்கு தண்ணீர் குறையாது.''

''இப்போ எவ்வளவு ஆழம் இருக்கும்?''

''எழுபது அடி...''

''உங்களுக்கு நீச்சல் தெரியுமா?''

''தெரியாது. இனிமேல்தான் பழகிக்கணும்...! உங்களுக்கு?''

''எனக்கும் தெரியாது...'' சொன்ன லட்சணா தன் தோளில் தொங்கிக்கொண்டிருந்த பைக்குள் கையைவிட்டு ஒரு காகிதக் கவரை எடுத்தாள்.

''மிஸ்டர் சிக்கந்தர்! இந்த கவர்க்குள்ளே என்ன இருக்குன்னு பாருங்க...''

சிக்கந்தர் சில விநாடிகள் தயங்கிவிட்டு அந்தக் கவரை வாங்கிப் பிரித்தான்.

உள்ளே -

நான்காய் மடிக்கப்பட்ட ஒரு கடிதம்.

மறுபடியும் சிக்கந்தர் தயங்க - லட்சணா புன்னகைத்தாள்.

''ம்... பிரிச்சுப் படிங்க...''

லெட்டரைப் பிரித்தான்.

அதில் நான்கே வரிகள்.

நான் தற்கொலை செய்து கொள்கிறேன்.
என் மரணத்துக்கு யாரும் காரணமில்லை.
என் உடலை அணையிலிருந்து மீட்டதும் ஏதாவது ஒரு மருத்துவக் கல்லூரிக்கு தானமாய்க் கொடுத்து விடவும் -

இப்படிக்கு
'லட்சணா'.

சிக்கந்தரின் மூளைக்குள் அந்தக் கடிதவரிகள் பதிவாகி அதிர்ச்சியோடு அவன் நிமிர்ந்த விநாடி -



லட்சணா 'போட்'டிலிருந்து எழுந்து கண்ணிமைக்கும் நேரத்துக்குள் நீரில் குதித்தாள்.

# 2

ஊட்டி.

வெலிங்டன். அடர்த்தியான தைல மரங்களுக்கு நடுவில் பச்சை பெயிண்ட் அடிக்கப்பட்ட அந்த ராணுவ பாரக்ஸ் சாயந்தரவேளையின் அரையிருட்டுக்குள் புதைந்து போயிருந்தது. பாரக்ஸின் முன்னறையில் மிலிட்ரி விஜிலன்ஸ் ஸ்க்வாடைச் சேர்ந்த ராணுவ அதிகாரி கர்ஜித்தன்னுடைய ஹாட்லைன் டெலிபோனில் ரகசியம் பேசுகிறமாதிரியான தொனியில் உரையாடிக் கொண்டிருந்தார்.

''புரபசர் அரிஸ்டோ டெல்லியிருந்து கோவை வந்துவிட்டாரா...?''

''வந்துவிட்டார்.''

''அவர் கோவை வந்ததை பத்திரிக்கை நிருபர்கள் யாரும் மோப்பம் பிடித்துவிடவில்லையே...?''

''இல்லை... பயணிகளோடு பயணியாய் கலந்து விமான நிலையத்துக்கு வெளியேவந்து ஒரு டாக்ஸியைப் பிடித்து தற்போது ஊட்டிக்கு வந்து கொண்டிருக்கிறார்.''

''அவர் கோவையிலிருந்து எத்தனை மணிக்கு புறப்பட்டார்?''

''சரியாய் ஐந்து மணிக்கு...''

''அப்படியானால் ஏழு மணிக்கெல்லாம் ராணுவ பாரக்ஸுக்கு வந்துவிடுவாரா...?''

''கண்டிப்பாக வந்துவிடுவார். வெலிங்டனின் எல்லைக்குள் புரபசர் வந்ததுமே டாக்ஸியை கற்பூரச்சோலை அருகே நிறுத்தி இறங்கிக்கொண்டு மெல்ல நடக்க ஆரம்பித்துவிடுவார். அதற்குப் பிறகு அவரை ராணுவ பேரக்ஸுக்கு பத்திரமாய் கூட்டிக்கொண்டு போவது உங்களுடைய பொறுப்பு...''

''அதை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்... வேறு ஏதேனும் தகவல் உண்டா...?''

''உண்டு...''

''என்ன...?''

''புரபசர் அரிஸ்டோ டெல்லியிலிருந்து புறப்பட்ட விமானத்திலேயே சந்தேகத்துக்குரிய ஒரு நபரும் இருந்தான். அவனுடைய பெயர் ஆசிப் உஸ்மான் முல்லா. சந்தேகத்தின் பெயரில் கைது செய்து ஐ.என்.எஸ் அக்ரானிக்கு கொண்டுபோய் விசாரணை நடத்தினோம்.''

''யார் அவன்...? டெரரிஸ்டா?''

''தெரியவில்லை... டார்ச் செல்லில் பனிக்கட்டியின் மேல் படுக்க வைத்து துவைத்து எடுத்தோம்... வாயைத் திறக்கவில்லை...''

சுர்ஜித் உறுமினார்.

''அவன் வாயைத் திறக்கவில்லையென்றால் நிச்சயமாய் ஒரு டெரரிஸ்ட் தான்... அந்த ஆசிப் உஸ்மான் முல்லாவை இந்த ராணுவ பேரக்ஸுக்குக் கொண்டு வந்துவிடுங்கள். உண்மையை வரவழைத்துவிடலாம்.''

''ஸாரி... மிஸ்டர் சுர்ஜித்! இனிமேல் அவனிடமிருந்து உண்மையை வாங்க முடியாது...''

''ஏன்...?''

''இறந்துவிட்டான்.''

''எ... எ... என்னது... இறந்துவிட்டானா...? எப்படி...?''

''அடி வயிற்றுக்கு குறிவைத்து உதைத்த உதை தவறிப்போய் உயிர்நிலையில் பட்டுவிட்டது... சுருண்டு விழுந்து உடனடி மரணம்.''

''அதுபோன்ற நபர்களை ஜாக்கிரதையாய் கையாள வேண்டாமா...? உதைத்தது யார்...?''

''கமாண்டோ சீஃப் தர்ஷன்சிங்...''

''அந்த ஆள் ஒரு முரட்டு காட்டெருமை. இது மாதிரியான விஷயங்களை அவர் மாதிரியான ஆட்கள் கையாளக்கூடாது. நமக்கு ஆயுதம் கோபம் அல்ல...



விவேகம்...! சரி நடந்துவிட்ட ஒன்றைப் பற்றிப் பேசிக்கொண்டு இருப்பதில் எந்தப் பயனும் இல்லை. அந்த ஆசிப் உஸ்மான் முல்லாவிடம் இருந்த லக்கேஜ்களை சோதனை செய்து பார்த்ததில் ஏதாவது தடயங்கள் கிடைத்ததா...?''

''எந்தத் தடயமும் கிடைக்கவில்லை...''

''ஆயுதம் ஏதாவது வைத்து இருந்தானா...?''

''இல்லை...''

''விமான ட்ரிப் ஷீட்டில் அவனுடைய முகவரி இருந்திருக்குமே...?''

''இருந்தது...! அது உண்மையான முகவரியா இல்லை போலி முகவரியா என்று வெரிஃபை செய்வதற்காக டெல்லி போலீஸுக்குத் தகவல் கொடுக்கப்பட்டு இருக்கிறது... அங்கேயிருந்து இன்னமும் தகவல் இல்லை...! தகவல் கிடைத்ததும் உங்களை உடனே தொடர்பு கொள்கிறேன்.''

டெலிபோன் பேச்சு அணைந்தது.

சுர்ஜித் ரிஸீவரை வைத்துவிட்டு தனக்கு எதிரில் விறைப்பாய் நின்றிருந்த அதிகாரி ஒருவரை ஏறிட்டார்.

''ராம்பால்.''

''ஸார்.''

''புரபசர் அரிஸ்டோ கோவையிலிருந்து புறப்பட்டுவிட்டார். சரியாய் ஏழு மணிக்கெல்லாம் வெலிங்டனின் எல்லைக்குள் இருக்கும் கற்பூரச் சோலைக்கு வந்துவிடுவார். அவர் டாக்ஸியைவிட்டு இறங்கி சிறிது தூரம் நடந்ததும் நீ நம்முடைய ராணுவ ஜீப்பில் அவரை பிக்கப் செய்துகொண்டு ராணுவ பேரக்ஸுக்கு வந்துவிடு...''

''எஸ்... ஸார்...''

''ஜாக்கிரதை ராம்பால்! புரபசர் அரிஸ்டோ வெலிங்டனுக்கு வருவது இங்கே இருக்கக்கூடிய சில உயர் ராணுவ அதிகாரிகளுக்கு மட்டுமே தெரியும். மற்றவர்களுக்குத் தெரியாது. நீ என்னுடைய நம்பிக்கைக்குரிய நபராய் இருப்பதால் புரபசரை

அழைத்துவரும் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்கிறேன். அவரை பத்திரமாக ராணுவ பேரக்ஸுக்கு கொண்டு வந்து சேர்ப்பது உன் கடமை...''

''எஸ்... ஸார்...''

''புரபசர் அரிஸ்டோ இந்தியாவுக்கு கிடைத்த கோகினூர் வைரம். அந்த வைரத்தை நாம் தொலைத்துவிடக்கூடாது. நான் சொல்வது உனக்குப் புரிகிறதா...?''

''புரிகிறது ஸார்.''

''புறப்பட்டு கற்பூரச் சோலைக்குப் போய்விடு. ஜீப் ஒரு மரத்துக்குப் பின்னால் இருட்டில் நிற்கட்டும்...!''

தலையசைத்த ராம்பால் விறைத்த உடம்பை மறுபடியும் விறைப்பாக்கி ஒரு சல்யூட் அடித்துவிட்டு அறையினின்றும் வெளியேறினான்.

ராம்பால் வெளியேறிய இரண்டாவது நிமிடம் ஹாட்லைன் டெலிபோன் மறுபடியும் கூப்பிட்டது. சிறிது நேரத்துக்கு முன்னால் பேசிய அதே குரல்.

''ஸார்... கோவையிலிருந்து கமாண்டோ ஸ்க்வாட் ஸ்பீக்கிங். டெல்லி போலீஸிடமிருந்து தகவல் வந்துவிட்டது.''

''அந்த ஆசிப் உஸ்மான் முல்லாவைப் பற்றித்தானே?''

''ஆமாம் ஸார்...''

''என்ன தகவல்...?''

''அவன் தீவிரவாதி கிடையாது ஸார். ஹி ஈஸ் ஏ போலீஸ் மேன். 'சி.பி.ஐ.'ன் உளவுத்துறைப் பிரிவில் ஒரு அதிகாரி. அவருடைய பெயர் சஞ்சய்குமார்.''

''ஈஸிட்...?''

''எஸ்... ஸார்!''

'' 'சி.பி.ஐ.'ன் உளவுத்துறைப் பிரிவில் இருக்கும் ஒரு அதிகாரி எதற்காக ஆசிப் உஸ்மான் முல்லா என்ற பெயரில் விமானப் பயணம் செய்யவேண்டும்...?''

''புரியவில்லை ஸார்.''

''விசாரணையின் போதாவது அவர் 'நான் ஒரு



போலீஸ் அதிகாரி' என்கிற உண்மையைச் சொல்லியிருக்கலாமே?''

''எதுவுமே சொல்லலை ஸார்... எல்லா அடிகளையும் வாங்கிக்கொண்டு ஊமைக்கோட்டான் மாதிரி இருந்தார்.''

''எதற்காக அந்தப் பிடிவாதம்...?''

''ஏதோ காரணம் இருக்கப் போய்த்தான் அந்த முரட்டுப் பிடிவாதம்...''

''இது சாதாரண விஷயமாகத் தெரியவில்லை. கொஞ்சம் கிளறிப் பார்க்கவேண்டும்.''

''கிளற ஆரம்பித்துவிட்டேன் ஸார்...''

## 3

### பெண் விசாரணைக் கைதி தற்கொலை

ராமநாதபுரம், டிச. 3 -

பரமக்குடி போலீஸ் ஸ்டேஷனில் பெண் விசாரணைக் கைதி காட்டு பரமக்குடியைச் சேர்ந்த சோனை மனைவி கருப்பி தற்கொலை செய்துகொண்டார். ஒரு இன்ஸ்பெக்டர் உட்பட 3 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

சிக்கந்தர் பதறிப்போய் லட்சணாவைப் பார்க்க அவள் நீர்க்குள் விழுந்து இரண்டு கைகளையும் உயர்த்தி மூச்சுக்காற்றுக்காகத் திணறி மெல்ல மெல்ல உள்ளே போய்க்கொண்டிருந்தாள்.

படகை வேகவேகமாய் நகர்த்தி அவளுக்குப் பக்கத்தில் கொண்டு போய் நிறுத்திக்கொண்டு அவளுடைய கூந்தலை எட்டிப் பிடிக்க முயன்றான்.

கைக்கு கிடைக்கவில்லை.

லட்சணாவின் உடல் இப்போது வேகமாய் நீருக்குள் இழுபட்டது.

சிக்கந்தர் படகினின்றும் எழுந்து நின்று வீறிட்டான்.

''லட்சணா... ஆ... ஆ... ஆ... ஆ...!''

'அரைகுறையாய் நீச்சல் தெரியும். நீர்க்குள் குதித்து விடலாமா...?'

'வேண்டாம்... இந்த எழுபதடி ஆழத்தில் அது முடியாத காரியம்... நீயும் அவனோடு போய்ச் சேரவேண்டியதுதான்!'

'என்ன செய்யலாம்...?'

சிக்கந்தர் தவிப்பாய் யோசித்துக் கொண்டிருக்கும்போதே பின்னால் அந்த சத்தம் கேட்டது.

''ப்பட்... ப்பட்... ப்பட்... ப்பட்...''

சிக்கந்தர் திரும்பிப் பார்த்தான்.

மோட்டார் படகு ஒன்று நீரைக் கிழித்துக் கொண்டு வேகமாய் வந்து கொண்டிருந்தது. அது போஜனின் மோட்டார் படகு.

நீல நிற ஸ்வெட்டரும் மங்கி குல்லாவும் அணிந்த அந்த போஜன் படகின் என்ஜின் சத்தத்தையும் மீறி குரல் கொடுத்தான்.

''ஸார்... படகில் இருக்கிற டயரை எடுத்து தண்ணியில் போடுங்க.''

சிக்கந்தர் படகின் பின்பக்கத்துக்கு வேகவேகமாய் போய் கயிற்றில் கட்டப்பட்டு இருந்த டயரை விடுவித்து நீரில் எறிந்தான்.

லட்சணாவின் தலை இப்போது தெரியவில்லை.

போஜனின் மோட்டார் படகு பக்கத்தில் வந்து நின்று என்ஜினை அணைத்துக்கொள்ள போஜன் ஸ்வெட்டரையும், மங்க்கி குல்லாவையும் உருவிவிட்டு நீர்க்குள் ஒரு அம்பைப் போல் பாய்ந்தான்.

## 4

வெலிங்டன் எல்லையில் கற்பூரச்சோலை அருகே டாக்ஸியை நிறுத்திக் கொண்டு கீழே இறங்கினார் புரபசர் அரிஸ்டோ. பேசிய பணத்தை ட்ரைவரிடம்



கொடுத்துவிட்டு ஒரு ப்ரீஃப்கேஸோடு மெல்ல நடந்தார்.

அறுபது வயது அரிஸ்டோவுக்கு திடகாத்திரமான உடம்புவாகு. முடிகொட்டிவிட்ட மண்டையில் சில வெள்ளிமுடிகள் மட்டும் எஞ்சியிருக்க அதை ஜாக்கிரதையாய் சீவி வழுக்கையில் ஒட்ட வைத்து இருந்தார். கண்களில் நிஜமாகவே அறிவுஒளி வீசியது. அந்த ஒளிக்குக் காரணம் அமெரிக்காவின் ப்ரூக்ளின் நகரத்தில் உள்ள புகழ்பெற்ற நியூயார்க் ஸ்டேட் யூனிவர்ஸிடியில் பிஸியாலஜியிலும் பார்மாகோலாஜியிலும் மூன்று எம்.எஸ்.பட்டங்கள் பெற்றதுதான். தன்னுடைய முப்பதாவது வயதில் கல்யாணம் செய்து கொண்டார். மனைவி பெயர் பிலோமினா. அழகானவள். கன்னி கழியாமலேயே டைவோர்ஸ் வாங்கிக்கொண்டாள். டைவர்ஸுக்கு காரணம் எப்போதும் ஆராய்ச்சிக்கூடத்திலேயே இருந்த அரிஸ்டோ ஒரு நாள் வீட்டுக்குத் திரும்பி அழைப்பு மணியை அழுத்தியதும் வந்து கதவைத்திறந்த பிலோமினாவைப் பார்த்து ''யார்... நீ.. என்னுடைய வீட்டில் உனக்கென்ன வேலை?'' என்று கேட்டுவிட்டதுதான்...! கோர்ட்டில் அவர் சொன்னது 'இந்த தேசம்தான் எனக்கு முக்கியம். பாரதத்தாய்க்கு பணி செய்வதே என் லட்சியம்!'

''ஸார்...''

ப்ரீஃப்கேஸ் பெட்டியோடு மெல்ல நடந்து கொண்டிருந்த அரிஸ்டோ நின்றார். மரத்தின் மறைவிலிருந்து ராம்பால் வெளிப்பட்டான். அரிஸ்டோ இருட்டில் உன்னிப்பாய் பார்த்துவிட்டு கேட்டார்.

''யார்...?''

''ஸார்... நான் ராம்பால். மிலிட்ரி பாரக்ஸிலிருந்து வருகிறேன்... சுர்ஜித் அனுப்பிவைத்தார்.''

''ஜீப் எங்கே...?''

''அதோ... அந்த மரத்தின் மறைவில்...''

''உன்னுடைய ஐடெண்டிஃபிகேஷன் கார்டை நான்

பார்க்கவேண்டும்...''

''இதோ...!'' எடுத்துக் காட்டினான் ராம்பால். அந்த இருட்டிலும் ஃப்ளோரஸண்ட் எழுத்துக்களில் மினுமினுத்த ஐடெண்டிஃபிகேஷன் கார்டை சரிபார்த்த அரிஸ்டோ புன்னகையுடன் நீட்டினார்.

''வா... போகலாம்...''

''என்னைப்பற்றிய சந்தேகம் தீர்ந்ததா ஸார்?''

''தப்பாக நினைத்துக் கொள்ளாதே ராம்பால். என்னுடைய உயிர்க்கு ஆபத்து என்று உளவுத்துறை சொல்லிக் கொண்டு இருப்பதை நான் அலட்சியம் செய்யமுடியாது. அதற்காக இந்த உயிரின் மீது எனக்கு ஆசை என்று நினைத்துவிடாதே... நான் இன்னும் இருபது ஆண்டுகளாவது உயிர் வாழவேண்டும் என்று நினைக்கிறேன். எதற்காகத் தெரியுமா... என்னுடைய நாட்டுக்காக நான் இன்னமும் உழைக்க வேண்டியிருக்கிறது. என்னுடைய பல ஆராய்ச்சிப் பணிகள் பாதியிலேயே இருக்கின்றன. அந்த ஆராய்ச்சிப் பணிகள் முழுமை பெற்றால் இந்தியா, அமெரிக்காவுக்கு இணையாக ஒரு வல்லரசாக மாறும்... என்னுடைய இந்தக் கனவு மெய்ப்பட வேண்டுமென்றால் நான் என்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் விஷயத்தில் ஜாக்கிரதையாக இருப்பதில் என்ன தப்பு...? இந்தக் காலத்தில்தான் யாரையும் நம்ப முடிவது இல்லையே...?''

இருவரும் பக்கத்து மரத்தின் மறைவில் இருந்த ராணுவ ஜீப்பை நோக்கி நடந்தார்கள்.

ஜீப்பின் பாசிக்கலர் இருட்டில் கரைந்து போயிருந்தது. ராம்பால் பின்பக்கக் கதவைத் திறக்க அரிஸ்டோ ஏறி உட்கார்ந்தார்.

ட்ரைவிங் சீட்டை ஆக்ரமித்த ராம்பால் இக்னிஷியனை உசுப்பி என்ஜினை ஸ்டார்ட் செய்த விநாடி -

அரிஸ்டோ கூப்பிட்டார். குரலில் பதட்டம்.

''ராம்பால்...''

''ஸார்...''



''ஜீப்பைவிட்டு முதலில் இறங்கு...''

''வாட்ஸ் த ப்ராப்ளம் ஸார்...?''

''இறங்கு... சொல்கிறேன்...'' அரிஸ்டோ சொல்லிக்கொண்டே தடுமாற்றமாய் கீழே இறங்கி நிற்க ராம்பால் பக்கத்தில் வந்தான்.

''எ... என்ன... ஸார்...?''

அரிஸ்டோ தன் வலது கை மணிக்கட்டை உயர்த்தி தன்னுடைய வாட்ச்சின் டயலைக் காட்டினார். டயலில் ஒரு சிறிய சிவப்பு வெளிச்சப்புள்ளி வேக வேகமாய் அணைந்து அணைந்து எரிந்தது.

ராம்பாலின் முகம் மாறியது.

''எ... என்ன... ஸார்... இது...?''

''இந்த ஜீப்பில் டைனமைட்டை ஃபிக்ஸ் செய்து இருக்கிறார்கள்.''

''ஸ... ஸார்...''

''பயப்படாதே...! என் கையில் இருக்கிற இந்த வாட்ச் டைனமைட் - டி - ஆக்டிவேட்டர் வாட்ச். இந்த வாட்ச் என்னுடைய கையில் இருக்கிறவரைக்கும் ஜீப்பில் ஃபிக்ஸ் பண்ணப்பட்டு இருக்கிற டைனமைட் வெடிக்காது. இப்படியொரு டி - ஆக்டிவேட்டர் வாட்ச் என் கையில் இருக்கிற விஷயம் என் எதிரிகளுக்கு தெரியாததால் ஒவ்வொரு தடவையும் அவர்கள் ஏமாந்து கொண்டு இருக்கிறார்கள். இது மூன்றாவது தடவை...''

ராம்பாலின் முகம் வெளிறிப் போயிருந்தது. ''ஸார்! இந்த ஜீப் கடந்த பனிரெண்டு மணி நேரமாய் என்னுடைய நேரடி கண்காணிப்பில்தான் இருக்கிறது.''

''இந்த இருட்டில் யாராவது வந்து பொருத்திவிட்டு போயிருக்கலாமே... மேக்னெட் மூலமாக டைனமைட்டை கார்க்கு அடியில் ஒட்ட வைப்பது ஒரு நிமிஷ வேலையாயிற்றே...? உன்னிடம் டார்ச் இருக்கிறதா...?''

''இருக்கிறது ஸார்...''

''கொடு...''

ராம்பால் ஜீப்பின் டேஷ் போர்டிலிருந்த டார்ச்சைக்

கொண்டு வந்து கொடுக்க, அரிஸ்டோ வாங்கிக்கொண்டு ஜீப்புக்கு அடியில் குனிந்து டார்ச் வெளிச்சத்தை உள்ளே அனுப்பினார்.

சக்கரங்களை இணைக்கும் பிஸ்டன் தண்டு குறுக்கே போக அதில் ஒரு மேக்னட் டைனமைட் வயர் சங்கதிகளோடு ஒட்டிக்கொண்டு 'டிக்... டிக்... டிக்... டிக்' என்று நொண்டிக் கொண்டிருந்தது.

# 5

**வீடு புகுந்து பெண்ணுக்கு கத்திக்குத்து**

சென்னை, அக். 12 -

பெருங்களத்தூர் சீனிவாசநகரைச் சேர்ந்த குருமூர்த்தியின் மனைவி வனஜாவை, அவர் இரவு 8 மணிக்கு டி.வி. பார்த்துக் கொண்டிருந்தபோது அடையாளம் தெரியாத நபர் ஒருவர் வீடு புகுந்து கத்தியால் குத்தி அவரது தாலியைப் பறித்துச் சென்றார்.

ஊட்டி ஹோலி ஏஞ்சல் ஹாஸ்பிட்டல்.

ஐ.ஸி. யூனிட்டிலிருந்து வெளிப்பட்ட டாக்டரை சிக்கந்தரும் இன்ஸ்பெக்டர் கௌடாவும் எதிர்கொண்டார்கள்.

''டாக்டர்! அந்தப் பெண் லட்சணாவுக்கு இப்போ எப்படியிருக்கு... அவுட் ஆஃப் டேஞ்சர்தானே...?''

''நத்திங் டு வொரி... உடனடியா கொண்டு வந்து ஹாஸ்பிட்டலைஸ் பண்ணினதால அந்தப் பெண்ணோட உயிரை எங்களால காப்பாத்த முடிஞ்சது.''

''கான்ஷியஸ்...?''

''திரும்பியிருக்கு...''

''போய் பேசலாமா...?''



''தாராளமா...'' டாக்டர் தோள்களைக் குலுக்கிக் கொண்டே போய்விட, சிக்கந்தரும் இன்ஸ்பெக்டர் கௌடாவும் ஐ.ஸி. யூனிட்டுக்குள் நுழைந்தார்கள்.

கட்டிலில் படுத்து, ஜன்னலுக்கு வெளியே எதையோ வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த லட்சணா நடைச்சத்தம் கேட்டு ஸ்லோமோஷனில் தலையைத் திருப்பினாள். கௌடாவைப் பார்த்ததும் கண்களில் லேசாய் கலக்கம். எழுந்து உட்கார்ந்து முழங்கால்களைக் கட்டிக்கொண்டாள்.

கௌடா அவளுக்கு முன்பாய் வந்து நின்றார். சில விநாடிகள் அவளையே மௌனமாய் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு கேட்டார்.

''எதுக்காக இந்த தற்கொலை முயற்சி...?''

''......'' லட்சணா மௌனிக்க கௌடா குரலை உயர்த்தினார்.

''உன்னைத்தாம்மா கேட்கிறேன்... எதுக்காக டேம் தண்ணியில் குதிச்சு தற்கொலை பண்ணிக்க நினைச்சே...?''

லட்சணா நிமிர்ந்தாள்.

''எனக்கு வாழப் பிடிக்கலை...''

''அதான் ஏன்னு கேட்கிறேன்...''

''ஸாரி இன்ஸ்பெக்டர்... என்னோட தற்கொலைக்கான காரணத்தைச் சொல்ல நான் விரும்பலை...''

''என்ன காதலா...?''

''உங்க ஊகத்துக்கெல்லாம் பதில் சொல்ல என்னால முடியாது ஸார். தற்கொலை பண்ணிக்க முயற்சி பண்றது சட்டப்படி குற்றம்ன்னு எனக்குத் தெரியும். சட்டப்படி என்மேல என்ன நடவடிக்கை எடுக்கணுமோ அதை எடுத்துக்குங்க... பட் என்னிக்கு இருந்தாலும் ஒரு நாள் அந்த டேம்ல விழுந்துதான் நான் சாகப்போறேன்... அதை உங்களால தடுக்கமுடியாது...''

சிக்கந்தர்க்கு கோபம் வந்தது.

''அந்த டேம்லதான் விழுந்து சாகணும்ன்னு ஏதாவது

வேண்டுதலா...?''
லட்சணா மௌனமாயிருக்க சிக்கந்தர் தொடர்ந்தான்.
''ப்ரஸ் ரிப்போர்ட்டர்ன்னு எதுக்காக பொய் சொன்னே?''
''படகை வாடகைக்கு எடுக்க என்கிட்ட பணம் கிடையாது. வெச்சிருந்த பர்ஸ் காணாமே போயிடுச்சு... அதனால்தான் அப்படி ஒரு பொய்யைச் சொன்னேன்...''
கௌடா அங்கேயிருந்த ஒரு நாற்காலியை இழுத்து போட்டுக் கொண்டு உட்கார்ந்தார்.
''சரி... உன்னோட தற்கொலைக்கான காரணத்தை சொல்ல வேண்டாம். உன்னோட ஃபேமிலியைப் பத்தி சொல்லு...''
அவள் விரக்தியாய் புன்னகைத்தாள்.
''என்ன சிரிக்கிறே...?''
''எனக்கு ஃபேமிலின்னு ஒண்ணு இருந்தால்தானே அதைப்பத்தி சொல்றதுக்கு...? நான் ஒண்டிக்கட்டை... இன்னும் தெளிவா சொல்லணும்ன்னா அநாதை. அப்பா அம்மா யார்ன்னே தெரியாது. கோத்தகிரியில் இருக்கிற 'பட்ஸ்' அநாதைவிடுதியில் வளர்ந்தேன். பெரியவளானேன். படிச்சேன். கைத் தொழில்கள் கத்துக் கொடுத்தாங்க. விடுதியை விட்டு வெளியே வந்ததும் நானே சுயமா தொழில் பண்ணினேன்.
''வீடு...?''
''கூடலூர்ல... மாரியம்மன் கோயில் வீதியில் கைடசி வீடு... ஐநூறு ரூபாய் வாடகை.''
''உன் கூட வேறயாராவது...?''
''இல்லை...! நான் மட்டுந்தான் அந்த வீட்ல தங்கியிருந்தேன்...''
''சரி... எதுக்காக தற்கொலை...?''
''ஸார்...! அதை மட்டும் கேட்காதீங்க... எனக்கு வாழப் பிடிக்கலை... இதுதான் காரணம்.''
''இதோ பாரம்மா... லட்சணா... தற்கொலைங்கிறது ஒரு கோழைத்தனமான செயல். நீ சின்ன வயசிலிருந்தே வாழ்க்கையோடு போராடியிருக்கே... அப்பெல்லாம்



வராத தற்கொலை எண்ணம் இப்ப மட்டும் வர என்ன காரணம்...?''
''ஸார்...! இந்தக் கேள்வியை நீங்க எத்தனை தடவை கேட்டாலும் சரி, நான் சொல்லக்கூடிய பதில் 'ஸாரி' தான்.''
கௌடா முகம் இறுகிப்போய் எழுந்தார்.
''நீ இங்கிருந்து டிஸ்சார்ஜ் ஆகி போறதுக்குள்ளே காரணத்தை நான் கண்டுபிடிக்கிறேன்...''
லட்சணா கட்டை விரலை உயர்த்தினாள்.
''பெஸ்ட் ஆஃப் லக் ஸார்...''

## 6

இரவு மணி பத்து.
வெலிங்டன் ராணுவ பேரக்ஸின் உள்ளே 'இன் எ நட்ஷெல்' எனப்படும் ரகசிய அறையில் ராணுவ உயர் அதிகாரிகள் மத்தியில் புரபசர் அரிஸ்டோ தனக்கு முன்னால் இருந்த சிறிய மைக்கில் பேசிக்கொண்டிருந்தார். தெளிவான ஆங்கில பிரயோகம்.
''இன்றைக்கு அதிர்ஷ்டவசமாய் வெடி குண்டுக்குத் தப்பி உங்களுக்கு முன்னால் உயிரோடு நின்று பேசிக் கொண்டிருக்கிறேன். எதிரிகள் என்னை எப்படியோ மோப்பம் பிடித்துவிடுகிறார்கள் என்பது கவலைக்குரிய விஷயமாக இருந்தாலும், அந்த விபரீத விநாடிகளை எதிர்கொள்வதில் ஒரு த்ரில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் ஒன்றை மட்டும் உங்களிடத்தில் உறுதியாக சொல்லிக் கொள்வேன்... இந்த இந்திய மண்ணுக்காக என்னுடைய இருதயம் எப்போதும் துடித்துக் கொண்டேயிருக்கும். இந்தியா ஜனநாயக ரீதியாக நல்லரசாகவும் ராணுவரீதியாக வல்லரசாகவும் மாறி உலக அரங்கில் ஒரு உன்னதமான இடத்தைப் பிடிக்கும்வரை என்னுடைய இந்த அறிவியல் உழைப்பு ஓயாது. அண்டைய நாடுகளுக்கெல்லாம் நம்முடைய

ராணுவ பலம் குறித்து இப்போதே அடிவயிற்றில் கலக்கம். இந்த கலக்கத்தை மேலும் அதிகப்படுத்துவதுதான் என்னுடைய பணி. என்னுடைய அறிவியல் மூளை இந்திய ராணுவத்துக்கு பயன்பட்டுவிடக்கூடாது என்கிற தீய எண்ணத்தில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் என்னை ஒழித்துக்கட்ட சதிகள் அரும்பிக் கொண்டு இருக்கின்றன. எத்தனை சதிகள் உருவானாலும் சரி அவைகளுக்கு நடுவில் நான் சாதனைகளைப் படைப்பேன்.''

ராணுவ அதிகாரிகளின் கரவொலி மெதுவாக எழுந்து அடங்கியது. புரபசர் அரிஸ்டோ அந்த கரவொலி ஓய்வதற்குள் தான் கொண்டு போயிருந்த ப்ரீஃப்கேஸைத் திறந்து ஒரு ஸின்தெடிக் ஃபைலை எடுத்துப் பிரித்தார். அதிலிருந்து சில கம்ப்யூட்டர் பிரிண்ட் அவுட் தாள்களை உருவிக் கொண்டு பேச்சைத் தொடர்ந்தார்.

''நான் இன்றைக்கு இங்கே வந்தது நம் ராணுவத்துக்கு பெரிய அளவில் உதவி புரியப்போகும் ஒரு கண்டுபிடிப்பை அறிமுகப்படுத்தத்தான். அந்த கண்டுபிடிப்பின் பெயர் 'ஸ்பை கேட்.' நீங்கள் மாயாஜால திரைப்படங்களில் ஒரு காட்சியைப் பார்த்து இருக்கலாம். மந்திரவாதிகள் தனக்கு வேண்டிய ஒரு நபரை உளவு பார்க்க வேண்டுமென்றால் அந்த நபர் வசிக்கும் அரண்மனைக்கு நேரிடையாக மனிதர்களை அனுப்பமாட்டான். அவ்வாறு அனுப்பினால் மற்றவர்கள் அடையாளம் கண்டுபிடித்துவிடுவார்கள். அதனால் அந்த உளவு பார்க்கும் நபரைப் பூனையாகவோ நாயாகவோ மாற்றி உளவு பார்க்க அனுப்பி வைப்பான். பூனையாக - நாயாக மாற்றப்பட்ட அந்த நபரும் உளவு பார்த்து செய்திகளைச் சேகரித்துக் கொண்டு மந்திரவாதியிடம் வந்து செய்திகளைச் சொல்வார். இது உண்மையாக நடக்கக்கூடியது அல்ல என்று நாம் நினைப்போம். ஆனால் என் அறிவியல் மூளையில் இது சாத்தியமாகப் போகிறது. அதைப்பற்றித்தான் இப்போது உங்களிடம் சொல்லப் போகிறேன்.''



ராணுவ அதிகாரிகளுக்கு மத்தியில் மெலிதாய் ஒரு சலசலப்பு அரும்பிக் கொண்டிருக்க, அரிஸ்டோ அந்த சலசலப்பு அடங்கும்வரை புன்னகையோடு காத்துக் கொண்டு இருந்துவிட்டு பின் பேச்சைத் தொடர்ந்தார்.

''நான் மாயாஜாலம் செய்து மனிதனை பூனையாகவோ நாயாகவோ மாற்றப்போவதில்லை. உண்மையாகவே ஒரு நாயையோ அல்லது பூனையையோதான் எதிரிகளின் ராணுவ முகாம்களுக்கு உளவு பார்க்கவோ அல்லது அதை அனிமல் டைனமைட்டாகவோ உபயோகப்படுத்தப் போகிறேன். இது எப்படி சாத்தியம்...?'' - சொன்ன புரபசர் அரிஸ்டோ பக்கத்தில் இருந்த கரும்பலகைக்கு சென்று சாக்பீஸை உபயோகப்படுத்தி ஒரு பூனையின் படத்தை வரைந்தார்.

''இந்தப் பூனையை ஒரு உயிருள்ள பூனையாக நினைத்துக் கொள்ளுங்கள். இந்தப் பூனையைத்தான் உளவு பார்க்கும் ஒற்றனாகவோ, அனிமல் டைனமைட்டாகவோ எதிரியின் ராணுவ முகாமுக்குள் அனுப்பி வைக்கப் போகிறோம். இதற்காக டெல்லியில் இருக்கும் என்னுடைய அறிவியல் சோதனைச் சாலையில் நூற்றுக் கணக்கில் பூனைகளை வளர்த்து வருகிறேன். இந்தப் பூனையை நான் என்ன செய்யப்போகிறேன் என்பதை கவனியுங்கள். பூனையின் மூளைப்பகுதிக்குள் மூன்று மின்னணு தண்டுகள் அதாவது எலக்ட்ராட்ஸை பொருத்தப் போகிறேன். இந்த எலக்ட்ராட்ஸ் தண்டுகள் மூலமாக நாம் கட்டளைகளை அனுப்பினால் பூனை நாம் விரும்பிய திசையில் செல்லும். இதற்காக பூனையின் உடம்பில் ஒரு சிறிய உலோகப்பை பொருத்தப்படுகிறது. இந்தப் பையில் ஒரு ரேடியோ ரிஸீவர் மற்றும் மின்பாட்டரி இருக்கும். இந்த ரேடியோ ரிஸீவர்க்கு தூரத்திலிருந்து ஒரு லேப்-டாப் மூலம் நம் ராணுவ பாரக்ஸிலிருந்து கட்டளைகளை அனுப்பலாம். அந்தக் கட்டளைகளை ரேடியோ ரிஸீவர் வாங்கி பூனையின் மூளைக்குள் உள்ள

எலக்ட்ராட்ஸ்களுக்கு அனுப்பிவைக்கும்.

லேப் டாப்பிலிருந்து பூனையை அது இருக்கும் இடத்திலிருந்து வலது பக்கமோ அல்லது இடது பக்கமோ திரும்பி ஓடச் சொன்னால் அது ஓடும். எதிரிகள் இருக்கும் இடத்துக்கு பூனை போய் சேர்ந்ததும் அதை நாம் உளவு பார்க்கவோ... அல்லது ரிமோட் கண்ட்ரோலை உபயோகப்படுத்தி அதை ஒரு டைனமைட்டாக வெடிக்கவோ வைக்கலாம். இந்தப் பூனைகள் உயிருள்ள பூனைகள் என்பது முக்கியம். இவை ரோபோட்கள் கிடையாது. ஒரு மனிதன் உளவு பார்க்கும் ஒற்றனாகவோ அல்லது மனித வெடிகுண்டாகவோ அவ்வளவு சுலபத்தில் எதிரிகளின் ராணுவ முகாம்களுக்குள் நுழைந்துவிட முடியாது. ஆனால் பூனைகள் புகை நுழைய முடியாத இடத்தில்கூட புகுந்துவிடும் திறமை கொண்டவை. பிராணிகளிடம் உள்ள திறமையை மனிதர்கள் பலவேலைகளுக்கு பயன்படுத்துகிறார்கள். நாயின் மோப்பசக்தி திறமை போலீஸ் துறைக்கு பயன்படுகிறது. விண்வெளி ஆராய்ச்சிக்கு குரங்குகளை பயன்படுத்துகிறார்கள். ஆனால் ஒரு பிராணியின் மூளையைக் கட்டுப்படுத்தி நமக்கு சாதகமாக பயன்படுத்தும் முயற்சி இதுதான் முதலாகும்.''

ராணுவ அதிகாரிகளின் மத்தியில் மறுபடியும் சலசலப்பு. ஒருவர் எழுந்து கேட்டார்.

''இந்த 'ஸ்பை கேட்' எனப்படும் பூனைகளை உடனடியாய் நம் ராணுவத்துக்கு உபயோகித்துக் கொள்ள முடியுமா...?''

''சோதனை எழுபது சதவீதம் வெற்றி... அதை நூறு சதவீத வெற்றியாக்க இன்னமும் ஒரு மூன்று மாத காலத்துக்கு ஆராய்ச்சிப்பணியில் ஈடுபட வேண்டியுள்ளது. இதற்காக பதினைந்து பூனைகள் தேர்ந்து எடுக்கப்பட்டு அவைகளின் மூளைகளில் எலக்ட்ராட்லை பொருத்தியுள்ளேன்... பூனைகள் முழு ஆற்றலோடு செயல்பட அவைகளுக்கு 'பயோஸீரம்' போட வேண்டியுள்ளது. அந்த பயோ ஸீரம் தயாரிக்க மூன்று மாத காலம் பிடிக்கும்...''



முன்வரிசையில் உட்கார்ந்திருந்த ராணுவ அதிகாரி கர்ஜித் பரவச முகத்தோடு எழுந்தார்.

''வெல்டன் மிஸ்டர் புரபசர்... இது ஒரு அற்புதமான அறிவியல் முயற்சி. மனிதர்களாலும் ஆயுதங்களாலும் தேடித் தர முடியாத வெற்றியை உங்களுடைய 'ஸ்பைகேட்'கள் தேடித்தரும் என்று நம்புகிறேன்.''

அரிஸ்டோ சிரித்தார்.

''இந்த 'ஸ்பை கேட்'பூனைகளை அழிவு வேலைக்கு மட்டுமல்ல, ஆக்க வேலைக்கும் உபயோகப்படுத்தலாம். உதாரணத்துக்கு, ஒரு இடத்தில் ஒரு பெரிய கட்டிடம் இடிந்து விழுந்துவிட்டது என்று வைத்துக் கொள்வோம். கட்டிட இடிபாடுகளில் பலர் சிக்கிக் கொள்ளலாம். அப்படி சிக்கிக் கொண்டவர்கள் உயிருடன் இருக்கிறார்களா என்று பார்க்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆனால் மனிதர்களால் உள்ளே போய் பார்க்க முடியாது. அந்த சமயத்தில் இந்த 'ஸ்பை கேட்'களை பயன்படுத்தலாம். ஒரு சிறிய இடுக்கில் கூட பூனையால் நுழைய முடியும். நுழைந்தால் மட்டும் போதுமா... நாம் சொல்லுகிறபடி குறிப்பிட்ட பக்கம் அது ஓட வேண்டும். அது மட்டுமல்ல. அது நமக்குத் தேவையான செய்திகளை அனுப்பி வைக்க வேண்டும். அதற்காக பூனையோடு ஒரு சிறிய வீடியோ காமிராவையும் இணைத்துவிட்டால் போதும்...''

கர்ஜித் குறுக்கிட்டார்.

''இந்த 'ஸ்பை கேட்' பூனைகளை நம் நாட்டில் ஆக்கவேலைகளுக்கும் எதிரிகளின் நாட்டில் அழிவு வேலைக்கும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம் இல்லையா புரபசர் ஸார்...''

''வெல் செட்...!'' அரிஸ்டோ பெரிய புன்னகையோடு சொல்லிய விநாடி -

அவருடைய கோட் பாக்கெட்டில் இருந்த செல்போன் மெலிதாய் முணுமுணுத்தது.

''எக்ஸ்க்யூஸ்மீ...'' சொன்னவர் செல்போனை எடுத்து இடது காதுக்கு ஒற்றினார்.

''எஸ்...''

''ஸார்... நான் ஷோபியா'' ஒரு பெண் குரல்.

ஷோபியா அரிஸ்டோவின் லேப்ரட்ரியில் பணிபுரியும் பெண். அரிஸ்டோவின் பர்சனல் செக்ரட்ரி.

''சொல்... ஷோபியா...''

''கொஞ்சம் அதிர்ச்சியான செய்தி...''

''என்ன...?''

''நாம் கஷ்டப்பட்டு பழக்கி வைத்திருந்த பதினைந்து 'ஸ்பை கேட்' பூனைகளில் மூன்று...?''

''மூன்று...?''

''இறந்துவிட்டது...''

''என்னாயிற்று...?''

''தெரியவில்லை...''

''மற்ற பனிரெண்டு பூனைகள்...?''

''இப்போதைக்கு... ஆரோக்கியமாக உள்ளன...''

''கவனமாய் பார்த்துக்கொள். நான் ஊட்டியிலிருந்து திரும்ப எப்படியும் நான்கைந்து நாட்களாகும்... ஷோபியா...''

''ஸார்...''

''என்ன...?''

''எனக்கு பயமாய் இருக்கிறது.''

''எதற்கு பயம்...?''

''மற்ற பூனைகளும் இறந்துவிடுமோ என்று.''

''பயப்படாதே...! அதற்குள் பயோஸீரம் தயாரித்து பூனைகளுக்கு இஞ்செக்ஷன் செய்துவிடலாம்...''

# 7

மஃப்டி ட்ரஸ்ஸில் இன்ஸ்பெக்டர் கௌடா பைக்கில் பயணித்து கூடலூர் மாரியம்மன் கோயில் வீதிக்குள் நுழைந்தபோது குளிரையும் மீறிக்கொண்டு மத்தியான வெய்யில் பிடரியில் உறைத்தது. தெருவின்



கோடியில் இருந்த வீட்டுக்கு முன்பாய் பைக்கை நிறுத்தினார். வீடு பூட்டியிருப்பதற்கு அடையாளமாய் ஒரு பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது.

பக்கத்து வீட்டு வாசல் திண்ணையில் உட்கார்ந்து அரட்டையடித்துக் கொண்டிருந்த இரண்டு படுகர் இன பெண்களை நெருங்கினார். கேட்டார்.

''இங்கே லட்சணான்னு...?''

''இந்த வீடுதான்...''

''வீடு பூட்டியிருக்கே...?''

''வெளியே போயிருக்கலாம்...''

''எங்கே போயிருப்பாங்கன்னு சொல்ல முடியுமா?''

''லட்சணாவுக்கு ஒயர் கூடை பின்னி வீட்டுக்கு வீடு கொண்டுபோய் சேல் பண்ற வேலை.''

''எப்ப வருவாங்க...?''

''எப்படியும் சாயந்தரம் ஆறுமணியாயிடும்...''

''இந்த வீட்டுக்கு ஒனர் யாரு...?''

''இந்த அம்மாதான்...'' ஒரு பெண் இன்னொரு பெண்ணைக் காட்டினாள்.

கௌடா அந்தப் பெண்ணை ஏறிட்டார்.

''லட்சணா இந்த வீட்டில் எத்தனை வருஷமா குடியிருக்காங்க?''

''ரெண்டு வருஷமா...''

''வீட்ல லட்சணா மட்டும்தானா... இல்லை... வேற யாராவது இருக்காங்களா...?''

''லட்சணா மட்டுந்தான்! ஆமா நீங்க யாரு? ஏதோ போலீஸ் மாதிரி விசாரணை பண்ணிகிட்டு இருக்கீங்க...?''

''போலீஸ்தான்...!''

அந்த அம்மாள் மிரண்டாள். திக்கித்த சில விநாடி பார்வைக்குப்பின் கேட்டாள்.

''எதுக்காக லட்சணாவைத் தேடிக்கிட்டி வந்திருக்கீங்க? அவ ஏதாவது தப்பு பண்ணிட்டாளா...?''

''தற்கொலை பண்ணிகிட்டு செத்துப் போக

இருந்தா. இப்போ ஹாஸ்பிட்டல்ல இருக்கா...! தற்கொலைக்கான காரணத்தைக் கேட்டா சொல்லமாட்டேன்னு ஒரே பிடிவாதம். அதான் அக்கம் பக்கத்து வீடுகள்ல விசாரிச்சுட்டு போக வந்தேன்...'' இன்ஸ்பெக்டர் கெளடா சொல்லவும் அந்தப் பெண்கள் இருவரும் திடுக்கிட்டுப் போய் ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

''லட்சணா தற்கொலை பண்ணிக்க முயற்சி செஞ்சாளா?''

''ம்... பைகாரா டேம்ல குதிச்சு...''

''நீங்க சொல்றது ஆச்சர்யமாயிருக்கு... லட்சணா ரொம்பவும் தைரியசாலியான பொண்ணு... தற்கொலை பண்ணிக்கிற அளவுக்கு கோழை கிடையாது.''

கெளடா கையமர்த்தினார். ''இதோ பாருங்கம்மா! இந்தக் காலத்துல யார்க்கு தற்கொலை எண்ணம் வரும்... யார்க்கு வராதுன்னு சொல்லமுடியாது. இந்த வீட்டுக்கு சாவி இருக்கா...?''

''சாவி லட்சணாகிட்டதான் இருக்கும்.''

''அவகிட்ட சாவியில்லை... காணாமே போயிடுச்சுன்னு சொன்னா.''

''இந்த பூட்டுக்கு ட்யூப்ளிகேட் சாவி என்கிட்ட இல்லையே?''

''பரவாயில்லை...'' சொன்ன கெளடா தன் பேண்ட் பாக்கெட்டுக்குள் கையை நுழைத்து 'மாஸ்டர் கீ பன்ச்' ஒன்றை எடுத்துக் கொண்டு பூட்டை நோக்கிப் போனார். பூட்டுக்கு ஒவ்வொரு சாவியாகக் கொடுத்து நெம்பினார். ஒரு ஐந்து நிமிஷ போராட்டத்துக்குப்பின் ஒரு சாவியின் நெம்பலுக்கு பூட்டு கழன்று கொள்ள கெளடா கதவைத் தள்ளினார். உள்ளே நுழைந்தார்.

பெரிது பெரிதாய் இரண்டு அறைகள் கொண்ட வீடு அது. சுத்தமாய் இருந்தது. சுவரோரமாய் ஒரு சிறிய காட்ரேஜ் பீரோ. பூட்டியிருக்குமோ என்கிற சந்தேகத்தில் இழுத்துப் பார்த்தார். திறந்து கொண்டது.



லேசாய் கலைத்துப் பார்த்தார். வித்தியாசமாய் பார்வைக்கு எதுவும் தட்டுப்படவில்லை பீரோவை பழையபடி சாத்திவிட்டு பக்கத்து அறையை எட்டிப் பார்த்தார்.

பின்னப்பட்ட பிளாஸ்டிக் கூடைகள் சைஸ் வாரியாய் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. கெளடா வெளியே நின்றிருந்த வீட்டுக்கார பெண்ணைக் கூப்பிட்டார்.

''உள்ளே வாம்மா...''

அவள் வந்தாள்.

''உன் பேர் என்னம்மா...?''

''வடிவு...''

''லட்சணா உன்கிட்டே நல்லா பழகுவாளா...?''

''நல்லா பேசும்ங்க... கோயிலுக்குக்கூட நாங்க ரெண்டு பேரும் ஒண்ணாத்தான் போவோம். நேத்துகூட மாரியம்மன் கோயிலுக்கு போய் பொங்கல் வெச்சுட்டு வந்தோம்...''

''நேத்து லட்சணா சந்தோஷமாயிருந்தாளா...?''

''ம்... சந்தோஷமாத்தான் இருந்தா... முகத்துல கொஞ்சம்கூட வாட்டம் கிடையாது...''

''பின்னே ஏன் தற்கொலை பண்ணிக்க முயற்சி செய்யணும்...?''

''ஒண்ணும் புரியலையே...?''

''ஏதாவது காதல் விவகாரமாய் இருக்குமா?''

''அப்படிப்பட்ட பொண்ணு கிடையாதுங்க... எந்த ஒரு ஆண்கிட்டேயும் அநாவசியமா சிரிச்சுப் பேசி நான் பார்த்தது இல்லை.''

''லட்சணாவைத் தேடி யாராவது வர்றதுண்டா...?''

''அந்த அநாதைப் பெண்ணைத் தேடி யார்ங்க வரப்போறாங்க?''

கெளடா அந்த அறையைச் சுற்றி வந்தார். வலதுபக்க சுவரில் சின்னதாய் அலமாரி ஒன்று தெரிய, திறந்து பார்த்தார். பழைய விகடன் குமுதம் இதழ்கள், ஒரு டெட்டால் பாட்டில், கந்தர் சஷ்டி புத்தகம், ரேஷன் கார்டு, காலி அமிர்தாஞ்சன் பாட்டில், 'மதமற்ற

மனிதர்கள்' என்னும் தலைப்பில் ஒரு கவிதை புத்தகம், மளிகை சாமான் வாங்கிய பில்கள் - எல்லாவற்றையும் பார்வையால் வாங்கிக் கொண்டே வந்த கௌடா 'BUDS' என்ற எழுத்துக்கள் மின்னிய அந்த செவ்வக புத்தகத்தை எடுத்தார்.

அது ஒரு நன்கொடை ரசீது புத்தகம்.

அட்ரஸைப் பார்த்தார்.

பட்ஸ்.

(ஆர்பனேஜ்)

வாழ வழி காட்டும் காப்பகம்,

சர்ச் ரோடு,

கோத்தகிரி.

கௌடா அந்த ரசீது புத்தகத்தை பத்திரப்படுத்திக் கொண்டு ஒரு தீவிரமான யோசனையோடு அந்த அறையினின்றும் வெளிப்பட்டார்.

# 8

ராணுவ அதிகாரி சுர்ஜித், புரபசர் அரிஸ்டோ தங்கியிருந்த குவார்ட்டர்ஸ்க்குப் போய் அவரைப் பார்த்தபோது சாயந்தர மணி ஆறு.

ப்ளாக் டீயை சர்க்கரை கலக்காமல் உறிஞ்சிக் கொண்டிருந்த அரிஸ்டோ எழுந்து கை குலக்கினார்.

''ப்ளீஸ் கம்...''

சுர்ஜித் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்ததும் அரிஸ்டோ கேட்டார்.

''ஹேவ் சம்... டீ...''

''நோ... தேங்க்ஸ்... சாயந்தரம் ஆறு மணிக்கு மேல் டீ குடிக்கிறதைவிட்டுவிட்டேன். காரணம் டீ சாப்பிட்டால் ராத்திரியில் தூக்கம் பிடிப்பது இல்லை.''

அரிஸ்டோ டீயை சாப்பிட்டு முடித்து கோப்பையை கீழே வைத்தார். ''உங்களுக்கு போன் செய்து இந்த நேரத்துக்கு வரச் சொன்னதற்காக முதலில் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்.''



சுர்ஜித் புன்னகைத்தார். ''விஷயம் முக்கியமானதாக இருக்கப்போய்த்தான் என்னை வரச் சொல்லியிருக்கிறீர்கள். என்ன விஷயம் சொல்லுங்கள்...?''

''இன்றைக்கு வந்த மாலை பேப்பர்களை படித்தீர்களா?''

''இல்லை...''

''இந்த பேப்பரில் வந்த செய்தியைப் பாருங்கள்.''

டீ பாயின் மேல் இருந்த அந்த நாளிதழை எடுத்து சுர்ஜித்திடம் கொடுத்தார் அரிஸ்டோ. ''இரண்டாவது பக்கத்தை திருப்புங்கள்.''

திருப்பினார்.

செய்தி பளிச்சென்று கண்களுக்குள் பாய்ந்தது.

பைகாரா அணைக்கட்டில் குதித்து இளம்பெண் தற்கொலை முயற்சி.

இதுபற்றி கூறப்படுவதாவது: லட்சணா (23 வயது). தான் ஒரு பத்திரிகையாளர் என்று சொல்லிக்கொண்டு பைகாரா அணைக்கட்டுக்கு வந்த இந்தப் பெண், பொறியாளர் சிக்கந்தர் என்பவரோடு அணையில் படகில் பயணம் செய்யும்போது திடீரென்று தண்ணீரில் குதித்துவிட்டார். நல்லவேளையாக மோட்டார் படகில் அந்தப் பக்கமாக வந்த போஜன் என்கிற ஊழியர் நீரில் குதித்து லட்சணாவைக் காப்பாற்றிவிட்டார். லட்சணா இப்போது அரசினர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். தற்கொலைக்கான காரணம் தெரியவில்லை. போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை செய்து வருகிறார்கள்.

சுர்ஜித் அந்த செய்தியைப் படித்துவிட்டு வியப்போடு அரிஸ்டோவை ஏறிட்டார்.

''இந்த செய்தியில் என்ன முக்கியத்துவம் இருக்கிறது? லட்சணா என்கிற பெண் உங்களுக்குத் தெரிந்தவளா?''

''இல்லை...''

''பின்னே...?''

''மிஸ்டர் சுர்ஜித்...! இந்த செய்தியை பேப்பரில் படித்த உடனேயே நான் அரசினர் மருத்துவமனைக்கு போன் செய்து தலைமை டாக்டர் பசவராஜோடு பேசினேன். அந்தப் பெண் தற்கொலைக்கு முயன்றதற்கு என்ன காரணம் என்று கேட்டேன். காரணத்தை அந்தப் பெண் லட்சணா சொல்லவில்லை என்று சொன்னார். மேலும் டாக்டர் எனக்குக் கொடுத்த தகவல்களின்படி லட்சணா ஒரு அநாதைப் பெண். கோத்தகிரியில் உள்ள 'பட்ஸ்' அநாதை விடுதியில் வளர்ந்தவள். இதில் எனக்குள்ள ஒரு ஆச்சர்யம் என்னவென்றால் சின்ன வயதிலிருந்தே வாழ்க்கையோடு போராடிய ஒரு பெண் இப்போது தற்கொலை செய்து கொள்ளவேண்டிய அவசியம் என்ன...? அவள் தற்கொலைக்கு முயல என்ன காரணம்...?''

சுர்ஜித் புன்னகைத்தார்.

''மன்னிக்க வேண்டும் புரபசர் ஸார். ஒரு இளம்பெண் தற்கொலை செய்து கொள்ள எத்தனையோ காரணங்கள் இருக்கிறது. முக்கியமாய் காதல் தோல்வி...! நாட்டில் எத்தனையோ இளம் பெண்கள் எத்தனையோ காரணங்களுக்காகத் தற்கொலை செய்து கொள்கிறார்கள். அதைப்பற்றியெல்லாம் தெரிந்து நமக்கு என்ன ஆகப்போகிறது...?''

''மிஸ்டர் சுர்ஜித்...! இந்த மாதிரியான தற்கொலை விஷயங்கள் உங்கள் மனசுக்குள் எந்த ஒரு பாதிப்பையும் ஏற்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் எனக்குள் சலனங்கள் ஏற்படும். தற்கொலைக்கு முயன்று இறந்து போனவர்களைவிட பிழைத்துக் கொண்டவர்கள் என் மனசுக்குள் பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்துவார்கள். அந்தப் பெண் லட்சணா தன் தற்கொலைக்கான காரணத்தை போலீஸாரிடமும் டாக்டரிடமும் சொல்ல மறுத்துவிட்டாள். அது மட்டுமில்லை, 'இன்றைக்கு என்னைக்



காப்பாற்றிவிட்டீர்கள். ஆனால் என்றைக்காவது ஒரு நாள் அதே பைகாரா அணையில் குதித்து தற்கொலை செய்து கொள்ளத்தான் போகிறேன். அதை யாராலும் தடுக்க முடியாது' என்று சொல்லியிருக்கிறாள்...''

''ஓ.கே... மிஸ்டர் புரபசர் ஸார். இப்போது இந்த விஷயத்தில் நான் என்ன செய்யவேண்டும்...?''

''அந்தப் பெண்ணை நான் சந்தித்துப் பேச விரும்புகிறேன்... இதே குவார்ட்டர்ஸுக்கு கூட்டி வரமுடியுமா...?''

சுர்ஜித் அரிஸ்டோவையே பார்க்க, அவர் புன்னகைத்தார்.

''இது எனக்குத் தேவையா என்று நீங்கள் யோசிப்பது எனக்குப் புரிகிறது... ஆனால் எனக்குத் தேவையான ஒன்றுதான்... வில் யூ ஹெல்ப் மீ?''

''சர்ட்டன்லி...! நீங்கள் ரெக்வெஸ்ட் செய்து கேட்கிற அளவுக்கு இது ஒன்றும் பெரிய உதவி கிடையாது. அந்தப் பெண் லட்சணாவை உடனே பார்க்க விரும்புகிறீர்களா...?''

''இல்லை... நாளை காலை.''

''எந்த நேரம்...?''

''எந்த நேரமாக இருந்தாலும் பரவாயில்லை...''

''ஐ... வில் மேக் நெசசரி அரேஞ்ச்மெண்ட்ஸ்.''

''தேங்க்யூ...''

## 9

கோத்தகிரி.

'பட்ஸ் ஆர்பனேஜ்' என்று ஆங்கிலத்திலும் 'திக்கற்றோர் காப்பகம்' என்று தமிழிலும் எழுதப்பட்ட பெயர்ப் பலகை பெயிண்ட் உதிர்ந்து ஒரு பக்கம் சாய்ந்து தெரிய, எந்தக் காலத்திலோ கட்டப்பட்ட அந்த விடுதி அஸ்பெஸ்டாஸ் கூரைகளோடு அரத பழசாய் இருந்தது. ஜன்னல்களில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடிகள் உடைந்து போயிருக்க, உடைந்த [illegible]ரங்களில் குளிர்

நுழைந்துவிடாமல் இருக்க பழைய துணிகளை உருண்டையாய் கசக்கி திணித்து வைத்து இருந்தார்கள். சுவர்களில் வெடிப்புக்கள். சிமெண்ட் உதிர்ந்து போய் செங்கற்கள் பற்களைக் காட்டின.

இன்ஸ்பெக்டர் கௌடா கண்களால் விடுதியை எக்ஸ்ரே எடுத்துக் கொண்டே நடந்தார்.

'இந்த குற்றுச் சுவர்களுக்கு பெயரா விடுதி?'

குப்பை பக்கெட்டோடு ஒரு பெண் எதிர்பட்டாள். கேட்டான்.

''யார்ங்க... வேணும்...?''

''இந்த விடுதிக்கு யார் இன்சார்ஜ்...?''

''மரகதம்மாள்...''

''பார்க்கணும். எங்கே இருக்காங்க...?''

''அதோ...! அந்த மொத ரூம்ல...! டொனேஷன் கொடுக்க வந்தீங்களா...?''

ஒரு கணம் திகைத்த கௌடா மறுகணம் இயல்புக்கு வந்து ''ஆமா'' என்று தலையாட்டிவிட்டு அந்தப் பெண் காட்டிய முதல் ரூமை நோக்கி நடந்தார். தரை குண்டும் குழியுமாய் - நடக்கும்போது கால்களை இடறிவிட்டது. நினைத்த இடமெல்லாம் களைகள் முளைத்து இருந்தன.

அஸ்பெஸ்டாஸ் ஷீட் ஒன்று அபாயகரமான நிலையில் தொங்கிக் கொண்டிருந்த அந்த முதல் அறைக்கு முன்பாய் நின்று உள்ளே எட்டிப் பார்த்தார்.

சக்கர நாற்காலியில் அந்த அம்மாள் தெரிந்தாள். அறுபது வயது இருக்கலாம். நீல நிற கதர்சேலைக்குள் மெலிந்த தேகம் சிறைப்பட்டு இருந்தது. தீட்சண்யமான கண்கள். இரண்டு புருவங்களுக்கும் நடுவில் ஒரு குங்குமப் பொட்டு பிசிறில்லாமல் இடம் பிடித்து இருந்தது.

கௌடா குரல் கொடுத்தார்.

''வணக்கம்மா...''

மரகதம்மாள் நிமிர்ந்தாள். பார்வையில் குழப்பம் பரவ கைகளைக் குவித்தாள்.

''வணக்கம்... ஸார்...''



உள்ளே வந்தார் கௌடா. தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டதும் மரகதம்மாள் திகைப்போடு தனக்கு முன்பாய் இருந்த நாற்காலியைக் காட்டினாள்.

''உட்காருங்க... என்ன விஷயம்...?''

கௌடா உட்கார்ந்து கொண்டு பேச்சை ஆரம்பித்தார்.

''லட்சணாவைப் பத்தி கொஞ்சம் பேசணும்.''

''லட்சணா...?''

''ம்... இந்த விடுதியில் வளர்ந்த பொண்ணுதானே அது?''

''ஆமா... அந்த பொண்ணுக்கு என்ன?''

''தற்கொலைப் பண்ணிக்க பைகாரா டேமுக்குள்ளே குதிச்சுட்டா... நல்லவேளையா போட்மேன் ஒருத்தர் பார்த்து காப்பாத்திட்டார். இப்போ அவ ஹாஸ்பிட்டல்ல இருக்கா...''

மரகதம்மாளின் முகம் அதிர்ச்சிக்குள்ளாகி உடம்பு ஒரு நடுக்கத்துக்கு உட்பட்டது.

''லட்சணா தற்கொலை பண்ணிக்க இருந்தாளா...? தற்கொலை பண்ணிக்கிற அளவுக்கு என்ன மனக்கஷ்டம் அவளுக்கு...?''

''காரணத்தை அவ சொல்லலை...! எப்படி கேட்டும் சொல்லலை...! உங்களுக்கு ஏதாவது காரணம் தெரியுமான்னு கேட்டுட்டுப் போகத்தான் வந்தேன்...''

''எனக்கு எப்படித் தெரியும்...! லட்சணா இப்போ இந்த விடுதியில் இல்லை... அவ தனியா கூடலூர்ல வீடு எடுத்து தங்கி, வயர்கூடை பின்னி வாழ்க்கையை நடத்திகிட்டு இருக்கா... மாசத்துல ஒரு நாள் கோத்தகிரிக்கு வந்து என்னைப் பார்த்துட்டு போவா. ஃப்ரூட்ஸூம் ஸ்வீட்ஸூம் வாங்கிட்டு வந்து எல்லாக் குழந்தைகளுக்கும் கொடுப்பா.''

''கடைசியா லட்சணா எப்போ இங்கே வந்தா...?''

''பதினஞ்சு நாளைக்கு முன்னாடி...''

''வரும்போது சந்தோஷமா இருந்தாளா...?''

''இல்லை...''

''ஏன்...?''

அவகிட்டே நான் ஒரு நன்கொடை ரசீது புக் கொடுத்து பணம் வசூல் பண்ணச் சொல்லியிருந்தேன். ஒரு ரூபாய்கூட வசூலாகலைன்னு புலம்பிட்டு இருந்தா. பரவாயில்லை விடுன்னு நான்தான் ஆறுதல் சொல்லி அனுப்பி வெச்சேன்...''

''எதுக்காக நன்கொடை வசூல்...?''

''அரதப்பழசான இந்த விடுதி கட்டிடத்தை இடிச்சுட்டு புதுசா ஒரு விடுதியைக் கட்டத்தான்... மொத்தம் பத்து லட்ச ரூபாய் எஸ்டிமேஷன். இதுவரைக்கும் ஒரு லட்ச ரூபாய்கூட வசூலாகலை. போற இடத்துல எல்லாமே தயவு தாட்சண்யம் பார்க்காமே இல்லேன்னு சொல்லி ரெண்டு கையையும் விரிச்சுடறாங்க. இதுல லட்சணா ரொம்பவே அப்செட். இனிமே மனிதாபிமானத்தைக் கையில் லென்ஸ் வெச்சுகிட்டுத்தான் தேடணும்ன்னு புலம்பிட்டு இருந்தா...''

''இந்த ரசீது புத்தகம்தானே...?''

கௌடா, லட்சணா வீட்டில் எடுத்த நன்கொடை புத்தகத்தை எடுத்துக் காட்டினார்.

''ஆமா...! இதுதான்...''

''பணம் வசூல் பண்ண முடியலைங்கிற காரணத்துக்காக லட்சணா மனம் வெறுத்துப் போய் தற்கொலை என்கிற முடிவுக்குப் போயிருப்பாளோ?''

''அது ஒரு சரியான காரணமாய் என்னோட மனசுக்குப் படலை... அவ அந்த விபரீத முடிவுக்குப் போக வேற ஏதோ காரணம் இருக்கு. நீங்க கொஞ்சம் இதமா கேட்டுப் பாருங்களேன்.''

''கேட்டுப் பார்த்துட்டோம்... எல்லா வகையிலேயும் கேட்டுப் பார்த்துட்டோம். லட்சணா சொல்ற ஒரே பதில் 'எனக்கு இந்த உலகத்துல வாழப் பிடிக்கலை' என்கிற வாக்கியம்தான்...''

''சரி...! லட்சணாவை என்கூட டெலிபோன்ல பேசச் சொல்லுங்க... நான் அவகிட்டே கேட்டுப்



''ரொம்ப நன்றிங்கம்மா...!'' சொன்ன கௌடா மெல்லிய குரலில் கேட்டார்.

''இந்த 'பட்ஸ்' விடுதியில் மொத்தம் எத்தனை பேர் இருக்காங்கம்மா...?''

''ரெண்டு வருஷத்துக்கு முந்தியெல்லாம் முந்நூறு பேர்வரைக்கும் இருந்தாங்க... இப்போ நிதி வசதி இல்லாததினால பாதி பேரை வேற விடுதிகளுக்கு அனுப்பிட்டோம்... விடுதி கட்டிடம் வேற மோசமாயிருக்கு. ரெண்டு பெரிய மழை தொடர்ந்த மாதிரி அடிச்சா கட்டிடம் நிக்குமாங்கிறது சந்தேகம்தான்.''

''கட்டிடத்தோட நிலைமையைப்பத்தி கவர்ன்மெண்ட்டுக்கு எழுதிப் போட்டீங்களா...?''

''வார்டு கவுன்ஸிலரிலிருந்து ஜனாதிபதிவரைக்கும் கோரிக்கை மனு கொடுத்துப் பார்த்துட்டேன். ஒரு பதிலும் கிடையாது. களைச்சுப் போயிட்டேன்... நான் உயிரோடு இருக்கிறவரைக்கும்தான் இந்த விடுதி இருக்கும். அதுக்கப்புறம் இது வெறும் குட்டிச்சுவர்தான்...''

''கவலைப்படாதீங்கம்மா...! உங்க நல்ல மனசுக்கு எல்லாமே நல்லபடியா நடக்கும்... நான் லட்சணாவை டெலிபோன்ல பேசச் சொல்றேன். நீங்க காரணத்தைக் கேளுங்க...''

மரகதம்மாளிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியே வந்தார் கௌடா. இருபதடி தூரம் நடந்திருப்பார். பின்பக்கம் அந்தக் குரல் கேட்டது. பெண் குரல்.

''ஸார்...''

திரும்பினார்.

மரத்துக்குப் பின்னால் அந்த இளம்பெண் தெரிந்தாள்.

விடுதியைச் சேர்ந்த பெண் என்பது கட்டியிருந்த நீல நிற கதர் சேலையிலேயே தெரிந்தது. கௌடா அவளை நோக்கிப் போனார்.

''என்னம்மா...''

''ஸார்... என் பேர் புனிதா! இந்த விடுதியில்தான்

இருக்கேன். நீங்க லட்சணா பத்தி அம்மாகிட்டே பேசிகிட்டு இருந்ததைக் கேட்டேன். 'லட்சணா எதுக்காக தற்கொலை பண்ணிக்க முயற்சி செஞ்சா...?' இதுதானே உங்க சந்தேகம்!''

''ஆமா...''

''உங்க சந்தேகத்துக்கான விடை என்கிட்டே இருக்கு ஸார்.''

## 10

செல்போன் கனைத்ததுமே படித்துக் கொண்டிருந்த என்சைக்ளோபிடியாவை மூடி வைத்துவிட்டு ஹெண்ட்செட்டை எடுத்து காதுக்குப் பொருத்தினார் அரிஸ்டோ.

''ஹலோ...''

மறுமுனையில் கர்ஜித் கேட்டார்.

''இப்போது நீங்கள் ஃப்ரீயா மிஸ்டர் புரபசர்...?''

''ஃப்ரீதான்...! என்...?''

''அந்தப் பெண் லட்சணாவோடு பேசவேண்டும் என்று சொன்னீர்களே... இப்போது கூட்டிக்கொண்டு வரலாமா...?''

''தாராளமாய்...''

''இன்னும் அரைமணி நேரத்துக்குள் அங்கே இருப்போம்.''

''வாருங்கள்'' புரபசர் அரிஸ்டோ செல்போனை அணைத்து டீபாயின் மேல் வைத்துவிட்டு என்சைக்ளோபீடியாவை புரட்டியபடி காத்திருக்க, அடுத்த இருபத்தைந்தாவது நிமிடம் கர்ஜித், லட்சணாவோடு வந்து சேர்ந்தார்.

''புரபசர்! ஷி ஈஸ் லட்சணா...''

அரிஸ்டோ அவளைப் பார்த்தார். சிரிப்பில்லாத முகம். கண்களில் உறைந்துவிட்ட துக்கம்.

''உட்காரும்மா...''

சாவி கொடுத்த பொம்மை மாதிரி உட்கார்ந்தாள்.



சுவாரஸ்யம் இல்லாமல் அவள் புரபசரைப் பார்க்க அவர் கர்ஜித்தை ஏறிட்டார்.

''நான் லட்சணாவிடம் கொஞ்சம் தனியாக பேச வேண்டும்...''

''மை ஆல் மீன்ஸ்...! நீங்கள் லட்சணாவிடம் பேசுங்கள். நான் ஒரு மணி நேரம் கழித்து வருகிறேன்'' கர்ஜித் சொல்லி நகர்ந்து வெளியேறிவிட, அரிஸ்டோ எழுந்துபோய் கதவை சாத்திவிட்டு வந்தார். லட்சணாவிற்கு எதிரில் உட்கார்ந்தார். கேட்டார்.

''என்னைப்பத்தி நீ கேள்வி பட்டிருக்கியாம்மா...?''

''கொஞ்சம்!'' என்றாள் லட்சணா.

''கொஞ்சம்ன்னா... எந்த அளவுக்கு...?''

''பேப்பர்ல... புக்ல... உங்க பேரை பார்த்திருக்கேன். போன வருஷம் உங்களுக்கு 'பத்மவிபூஷண்' விருது கொடுத்தப்ப டி.வி.யில் காட்டினாங்க.''

''பார்க்க அழகாயிருக்கே...! கொஞ்சம் புத்திசாலித்தனமாவும் தெரியறே... உன்னோட மனசுல எதுக்காக அந்த தற்கொலை எண்ணம்...?''

''இதுக்காகத்தான் என்னைக் கூப்பிட்டீங்களா புரபசர் ஸார்? 'ஆமாம்'ங்கிறது உங்க பதிலாக இருந்தால் இன்னிக்கு முழுவதும் நீங்க கேட்டுகிட்டு இருந்தாலும் என்கிட்டயிருந்து பதில் கிடைக்காது...''

''உனக்கு பிரியம் இல்லைன்னா சொல்ல வேண்டாம். அதுக்காக நான் உன்னை கம்பெல் பண்ணப் போறதும் இல்லை... நான் உன்கிட்ட பேச விரும்பினது வேற ஒரு விஷயத்துக்காக...''

என்ன என்பது போல் பார்த்தாள் லட்சணா. அரிஸ்டோ தொடர்ந்தார்.

''நீ பைகாரா டேம்ல விழுந்து தற்கொலை பண்ணிக்கப் போனே. ஆனா... தண்ணியில விழுந்த உன்னைக் காப்பாத்திட்டாங்க. நீ... ஹாஸ்பிட்டல்லயிருந்து டிஸ்சார்ஜாகி வெளியே போனதும் மறுபடியும் அதே பைகாரா டேம்ல விழுந்து தற்கொலை பண்ணிக்கப் போறதா சொல்லியிருக்கே...

"நீ போலீஸ்கிட்ட அப்படி சொன்னது உண்மையா...?"

"உண்மைதான்...! என்னோட மரணம் நிச்சயிக்கப்பட்ட ஒண்ணு. அதை போலீஸ் இப்போதைக்கு நிறுத்தி வைக்கலாம். பட் எப்பவுமே நிறுத்தி வைக்கமுடியாது..."

"ஸோ...! நீ செத்துப் போறது உறுதி...!"

"கண்டிப்பா..."

"மனசை மாத்திக்கிற எண்ணமே கிடையாது...?"

"நிச்சயமா கிடையாது..."

"டேங்க்ல விழுந்து விடப்போகிற உயிரை ஒரு பயனுள்ள விஷயத்துக்காக நீ விட்டா என்ன...?"

"பயனுள்ள விஷயத்துக்காகவா?"

"ஆமா...! நான் ஒரு புரபசர், ஆராய்ச்சியாளன் என்கிற விஷயம் உனக்குத் தெரியும். என்னோட டெல்லி சோதனைச்சாலையில் எத்தனையோ ஆராய்ச்சிகள் நடந்துகிட்டிருக்கு. அந்த ஆராய்ச்சிகளுக்கெல்லாம் முயல்களையும் எலிகளையும் மட்டுமே பயன்படுத்தி வந்திருக்கேன். என்னோட ஒரு முக்கியமான ஆராய்ச்சிக்கு மனித உயிர் ஒண்ணு வேண்டியிருக்கு. அந்த ஆராய்ச்சி மட்டும் வெற்றியடைஞ்சுட்டா நம்முடைய இந்திய ராணுவத்துக்கு எவ்வளவோ உதவியாய் இருக்கும்."

லட்சணாவின் விழிகள் விரிந்தன. "இந்திய ராணுவத்துக்கு உதவியாய் இருக்குமா... அப்படியென்ன ஆராய்ச்சி...?"

"அதை உன்கிட்டே இப்போ சொல்ல முடியாது. நீ உன்னோட உயிரை என்னோட ஆராய்ச்சிக்கு உதவியாய் கொடுக்க சம்மதிச்சா மட்டுமே அதைப்பத்தி உன்கிட்ட சொல்லமுடியும்..."

லட்சணா வெறுமையாய் புன்னகைத்தாள். "எப்படியோ போகப் போகிற உயிர், உங்க ஆராய்ச்சிக்கு உதவியாய் இருக்கும்ன்னா அது எனக்கு சந்தோஷம்தான்... என்னோட உயிரை உங்க ஆராய்ச்சிக்கு தாராளமா உபயோகப்படுத்திக்கலாம்



புரபசர் ஸார்..."

"நல்லா யோசனை பண்ணிச் சொல்லு...! இந்த ஆராய்ச்சி ஒரு நெருப்பு வளையம் மாதிரி. உயிர் பிரியறதுக்குள்ள உடம்பு நிறைய இம்சைகளை அனுபவிக்க வேண்டியிருக்கும்..."

"புரபசர் ஸார்! உங்க ஆராய்ச்சியை நெருப்புன்னு சொன்னீங்க... எத்தனையோ இம்சைகளைத் தாங்கிய உடம்பு இது. எந்த ஒரு நெருப்புக்கும் பயப்படாது. என்னைப் பொறுத்தவரைக்கும் உங்க ஆராய்ச்சி எனக்கும் தித்திக்கும் தீ. நான் இன்னிக்கே உங்ககூட டெல்லி புறப்பட்டு வரத் தயார்..."

"அப்புறம்... பேச்சு மாறமாட்டியே...?"

"ஒரு ஸ்டாம்ப் பேப்பர்ல எழுதிக் கொடுக்கட்டுமா?"

புரபசர் சிரித்தார். "லட்சணா! உன்கிட்டயிருந்து இப்படியொரு ஒத்துழைப்பு கிடைக்கும்ன்னு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கலை. ஐ மஸ்ட் தேங்க்யூ...!"

"நன்றி சொல்றதெல்லாம் இருக்கட்டும் புரபசர் ஸார். போலீஸ் என்மேல தற்கொலை வழக்கு பதிவு பண்ணியிருக்காங்க... இந்த நிலைமையில் நீங்க எப்படி என்னை டெல்லிக்கு கூட்டிட்டு போவீங்க..."

"அதைப்பத்தின கவலை உனக்கு வேண்டாம். உன்மேல எந்த வழக்கும் பதிவாகாதபடி பார்த்துக்க வேண்டியது என்னோட பொறுப்பு. அதுக்கு முன்னாடி எல்லார்கிட்டேயும் ஒரு பொய் சொல்லவேண்டியிருக்கு..."

"எல்லாரும்ன்னா... யாரு..."

"போலீஸ்ஸும் ப்ரஸ் பீப்பிளும்தான்..."

"என்ன பொய்...?"

"உன் மனசுக்குள்ளே இருக்கிற தற்கொலை எண்ணத்தை நான் மாத்திட்டதாகவும்... உனக்கு டெல்லியில் இருக்கிற என்னுடைய சோதனைச் சாலையில் ஒரு வேலை கொடுக்கப்போறதாகவும் சொல்லப்போறேன்."

"நல்ல பொய்...! நாம என்னிக்கு டெல்லி

புறப்படறோம் புரபசர் ஸார்...?''

''நான்கு நாட்கள் கழிச்சு...''

''என்ன ஆராய்ச்சிக்கு நான் உபயோகப்படப்போறேன்னு இப்பவாவது நீங்க சொல்லலாம் இல்லையா...?''

''எல்லாம் டெல்லிக்குப் போய்...!''

''சரி... பேரம் பேசிக்கலாமா?''

''பேரமா...?''

''ம்... பேரம்தான்...! உங்க ஆராய்ச்சிக்காக நான் உயிரையே தர்றேன்... நீங்க எனக்கு என்ன தருவீங்க...?''

அரிஸ்டோ சிரித்தார். ''நீதான் உயிரோடு இருக்கப்போறது கிடையாதே... உனக்கு எதை கொடுத்து என்ன பிரயோஜனம்?''

''எனக்கு நீங்க கொடுக்கவேண்டியதில்லை... நான் யாரைக் கை காட்றேனோ அவங்களுக்கு கொடுத்தா போதும்...''

''நீ என்ன சொல்றே...?''

''புரபசர் ஸார்...! என்னோட உயிர்க்கு நீங்க ஒரு விலை தரணும்... அந்த விலைக்குரிய பணத்தை கோத்தகிரியில் இருக்கிற அநாதை விடுதிக்கு கொடுத்துடணும். அந்த விடுதியோட பேர் 'பட்ஸ்'. அதை நிர்வாகம் பண்ணிட்டு வர்ற அம்மாவோட பேர் மரகதம்மாள்.''

''இப்படியொரு பேரத்தை நான் எதிர்பார்க்கலை...! பரவாயில்லை. அந்த விடுதிக்கு எவ்வளவு பணம் தரணும்...?''

லட்சணா இரண்டு கைகளையும் விரித்துக் காட்டினாள். அரிஸ்டோ நெற்றியைச் சொறிந்தார்.

''எனக்குப் புரியலை...''

''புரியலையா...? ஒரு விரலுக்கு ஒரு லட்சம்...''

''அப்போ பத்து லட்சம்...?''

''ஆமா...''

''அதிகம்...''

''இந்திய ராணுவத்துக்கு பெரிய அளவில்



உபயோகப்படப் போகிற ஒரு ஆராய்ச்சிக்கு என்னோட உயிரை எடுத்துக்கப் போறீங்க... என்னைப் பொறுத்தவரைக்கும் இது சிறிய தொகை...''

''பணம் கொடுக்கலைன்னா நீ வரமாட்டியா...?''

''நான் அப்படி சொல்லலையே...!''

அரிஸ்டோ சில விநாடிகள் யோசித்தார்...பின் அவளிடம் நிமிர்ந்தார். ''எதுக்கு அவ்வளவு பணம் தரணும்?''

''விடுதியோட கட்டிடம் ரொம்பவும் சிதிலமான நிலைமையில் இருக்கு. ஒரு பெரிய மழையடிச்சா கண்டிப்பா தாங்காது... விடுதியை புதுசா கட்டறதுக்காக நிதி வசூல் பண்ணிப் பார்த்தோம்... அம்பதாயிரம் ரூபாய்கூட சேர்க்கமுடியலை...''

''கட்டிடம் கட்ட பத்து லட்சம் வேணும்...?''

''ஆமா...''

''சரி... நான் ஏற்பாடு பண்றேன்.''

''அந்தப் பணம் நான் கொடுத்ததாக யார்க்குமே தெரியக்கூடாது. மரகதம்மாளோட பேர்க்கு டிராஃப்ட் எடுத்து, ஒரு பொது நல விரும்பி என்கிற பேர்ல தபாலில் அனுப்பி வெச்சிடுங்க...''

''டெல்லி போய் அனுப்பினா போதும் இல்லையா?''

''போதும்.''

## 11

இன்ஸ்பெக்டர் கௌடா போலீஸ் ஜீப்பை ஹாஸ்பிட்டலின் போர்டிகோவில் நிறுத்திவிட்டு, படிகள் ஏறி வராந்தாவுக்குள் நுழைந்தபோது எதிரில் டாக்டர் வந்து கொண்டிருந்தார். நெருங்கி கைகளை குலுக்கிக் கொண்டார்கள்.

''ஹலோ... டாக்டர்... என்ன வீட்டுக்கு கிளம்பிட்டீங்களா?''

''இல்லை... ஓ.பி. வார்டுக்கு... வாங்க... பேசிட்டே போலாம்.'' நடந்தார்கள் மெல்ல.

''லட்சணா எப்படியிருக்கா...?'' கௌடா கேட்டார்.
''நவ்... ஷி... ஈஸ் ஆல்ரைட்...! நேத்திக்கு கோத்தகிரி போயிருந்தீங்க போலிருக்கு...?''
''எஸ்...''
''எனி... யூஸ்ஃபுல் க்ளு...?''
''ம்... லட்சணாவோட தற்கொலை முயற்சிக்கான காரணம் தெரிஞ்சுது...''
நடந்து கொண்டிருந்த டாக்டர் நின்றார். வியப்பில் புருவங்கள் மெல்ல உயர்ந்தன. ''என்ன காரணம்...?''
''நீங்களும் நானும் எதை கெஸ் பண்ணினோம்?''
''காதல்...''
''அதேதான்...!''
''காதல் தோல்வியா...?''
''அது இன்னும் தெரியலை! 'பட்ஸ்' அநாதை விடுதிக்கு போய் அந்த விடுதி நிர்வாகியைச் சந்தித்து பேசிவிட்டு வெளியே வரும்போது அதே விடுதியில் தங்கியிருந்த ஒரு பெண் கொடுத்த தகவல் இது. லட்சணாவுக்கும் கோயமுத்தூரைச் சேர்ந்த ஒரு பணக்காரப் பையனுக்கும் காதல். பையன் பேர் பரணி. ஒரு மில் ஓனரோட பையன். எந்த மில் என்கிற விபரம் அந்த விடுதிப் பெண்ணுக்குத் தெரியலை.''
டாக்டர் புன்னகைத்தார். ''சந்தேகமே வேண்டாம். இது காதல் தோல்விதான். பையன் பணக்கார இடம். லட்சணா அநாதை. எப்படி காதல் ஜெயிக்கும்...? அந்த பரணி இவளைத் தொட்டுட்டு கைவிட்டுட்டான் போலிருக்கு...''
''எனக்கும் அதே கெஸ்தான்...!''
''அந்தப் பையன் பரணியை மீட் பண்ணீங்களா?''
''இல்லை...! அவன் எந்த மில் ஓனரோட பையன்னு தெரியலை! விபரம் கலெக்ட் பண்ணச் சொல்லி கோயமுத்தூர் பி-1. போலீஸ் ஸ்டேஷனில் இருக்கிற இன்ஸ்பெக்டர் ராஜேந்திரனுக்கு தகவல் கொடுத்து இருக்கேன். விபரம் கிடைச்சதும் நானே கோயமுத்தூருக்குப் போய் அந்தப் பையன் பரணியைப்



பார்த்து பேசலாம்ன்னு இருக்கேன்.''
''யூனிஃபார்ம்ல போயிடாதீங்க...''
''அது எனக்குத் தெரியாதா... டாக்டர்...? மஃப்டியில் போய்ப்பார்த்து, இதமா பேசி காதலை கல்யாணத்தில் கொண்டு போய் முடிக்க முயற்சி எடுத்துக்குவேன்...''
''கோயமுத்தூர்க்குப் போய் பரணியைப் பார்க்கிறதுக்கு முந்தி லட்சணாவைப் பார்த்து பேசினா என்ன...?''
''வேண்டாம் டாக்டர்...! லட்சணா பரணியைக் காட்டிக் கொடுக்க விரும்பலை. அவகிட்ட பேசறதால எந்த பிரயோஜனமும் கிடையாது. முதல்ல பரணிகிட்டே பேசிட்டு அப்புறமா லட்சணாகிட்டே வரணும்...''
கௌடா சொல்லிக் கொண்டிருக்கும்போதே பின்பக்கம் அந்த கனமான பூட்ஸ் சத்தம் கேட்டது.
டாக்டரும் கௌடாவும் திரும்பினார்கள்.
ராணுவத்தைச் சேர்ந்த அதிகாரி கர்ஜித் வந்து கொண்டிருந்தார். நெருங்கியதும் சொன்னார்.
''குட்மார்னிங்... போத் ஆஃப் யூ...''
''குட்மார்னிங் மிஸ்டர் கர்ஜித்...''
''ஹௌ ஈஸ் லட்சணா...?''
''ஷி ஈஸ் ஃபைன்...! புரபசர் அரிஸ்டோவைச் சந்தித்துவிட்டு வந்ததிலிருந்து கொஞ்சம் சந்தோஷமாய்த் தெரிகிறாள்...''
''சந்தோஷத்துக்கான காரணத்தைச் சொன்னாளா?''
''இல்லை... நானும் கேட்கவில்லை...''
''காரணத்தை நான் சொல்லட்டுமா?''
''சொல்லுங்கள்...''
''லட்சணா தற்கொலை செய்யும் எண்ணத்தை கைவிட்டுவிட்டு புரபசரோடு டெல்லிக்குப் போகப் போகிறாள்.''
''டெல்லிக்கா...?''
''எஸ்...! புரபசர் அவருடைய ஆராய்ச்சிக் கூடத்தில் லட்சணாவுக்கு வேலை தரப்போகிறார். புரபசரின் ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட பணிகளில் லட்சணா உதவி

செய்வதின் மூலம் அவளுடைய மனசில் இருக்கிற தற்கொலை எண்ணம் காணாமல் போகலாம் என்பது புரபசரின் எதிர்பார்ப்பு.''

கௌடா கேட்டார்.

''லட்சணா இதற்கு ஒப்புக் கொண்டாளா...?''

''ஒப்புக்கொண்டுவிட்டாள்... இன்னும் நான்கைந்து நாட்களுக்குள் டெல்லி பயணம்...''

''லட்சணாவின்மேல் தற்கொலை வழக்கு பதிவாகியிருக்கும்போது அவளால் எப்படி டெல்லிக்கு போகமுடியும்...?''

''அதைப்பற்றிப் பேசத்தான் உங்களைத் தேடி வந்தேன் இன்ஸ்பெக்டர்...! லட்சணா தற்கொலை செய்துகொள்ள முயற்சித்தது சட்டப்படி தப்புத்தான். ஏதோ ஒரு உணர்ச்சி வேகத்தில் எடுத்த முடிவு அது. அதை ஒரு பெரிய குற்றமாக எடுத்துக் கொள்ளாமல் தற்கொலை வழக்கை தண்ணீரில் தவறி விழுந்த வழக்காக மாற்றவேண்டும். வழக்கு, கோர்ட்டு என்று போனால் லட்சணாவின் எதிர்கால வாழ்க்கை கண்டிப்பாக பாதிக்கப்படும்...''

கௌடா யோசனையாய் நெற்றியைத் தேய்த்தார்.

சுர்ஜித் தொடர்ந்தார். ''இதில் யோசிக்க ஒன்றுமேயில்லை மிஸ்டர் கௌடா. சட்டம் ஒரு பெண்ணின் வாழ்க்கைக்குப் பாதுகாப்பாக இருக்க வேண்டுமே தவிர பாதிப்பாக அமைந்துவிடக்கூடாது... லட்சணாவுக்கு புரபசர் அரிஸ்டோ மூலமாக ஒரு நல்ல வாழ்க்கை கிடைக்க இருக்கிறது. அதை உங்கள் சட்டம் தடுக்கக்கூடாது. அவள்மீது இருக்கும் தற்கொலை வழக்கை கைவிடுங்கள்.''

கௌடா புன்னகைத்தார்.

''ஓ.கே மிஸ்டர் சுர்ஜித்...! லட்சணா வயதில் எனக்கும் வீட்டில் ஒரு பெண் இருக்கிறாள். லட்சணா தற்கொலை எண்ணத்தைக் கைவிட்டு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொண்டால் எனக்கும் அதில் சந்தோஷம்...! தற்கொலை வழக்கை இன்றைக்கே தண்ணீரில் தவறி



விழுந்ததாக மாற்றி ஃபைலை செய்துவிடுகிறேன்.''

''தேங்க்யூ மிஸ்டர் கௌடா...''

''இன்னொரு முக்கியமான விஷயம்...''

''சொல்லுங்கள்.''

''லட்சணாவின் தற்கொலைக்கான காரணத்தைத் தோண்டி எடுத்துவிட்டோம்.''

''ரியலி...! என்ன காரணம்...?''

''காதல் தோல்விதான்...!''

''அப்படியெல்லாம் இல்லை என்று சொன்னாளே...?''

''காரணத்தை அவள் மறைக்கிறாள். அவளுடைய காதலனின் பெயர் பரணி. கோயமுத்தூரில் இருக்கும் மில் ஓனரின் பையன்.''

''மிஸ்டர் கௌடா...! லட்சணாவுக்கு ஒரு புதிய வாழ்க்கை கிடைக்க இருக்கிற இந்த நேரத்தில் அவளுடைய பழைய வாழ்க்கையை கிளறிப் பார்க்க வேண்டாம்... விசாரணையை விரிவுபடுத்திக் கொண்டே போனால் புதிது புதிதாய் ஏதாவது பிரச்னைகள் முளைக்கும். அந்தப் பிரச்னைகள் லட்சணாவின் டெல்லிப் பயணத்துக்கு தடையாகவும் அமையலாம்...''

''பரணியைப் பற்றி விசாரிக்க வேண்டாம் என்று சொல்கிறீர்கள்...?''

''ஆமாம்...''

''சரி...'' என்றார் கௌடா.

## 12

ஐந்தாவது நாள் இரவு.

டெல்லி விமான நிலையம். இரவு பதினோரு மணி. விமானத்திலிருந்து இறங்கிய அரிஸ்டோவும் லட்சணாவும் பயணிகளோடு கலந்து லௌஞ்சை நோக்கி நடந்தார்கள். குளிர் எலும்பை ஊடுருவியது.

லட்சணா நடந்து கொண்டே ''ஸார்'' என்றாள்.

''சொல்லு...''

''அந்த பத்து லட்சம்...?''

''கண்டிப்பா கிடைக்கும்.''

''நாளைக்கு ட்ராப்ட் எடுத்து அனுப்பிடலாமா?''

''ஷ்யூர்... ஷ்யூர்...'' தலையாட்டி சிரித்த அரிஸ்டோ தொடர்ந்தார். ''இதோ பார் லட்சணா...! அந்த பத்து லட்சம் எனக்கு ஒரு பெரிய தொகையே கிடையாது. இந்திய அரசாங்கம் என்னோட ஆராய்ச்சிக்காக வருஷம் ஒரு கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்து இருக்கு. அந்தப் பணத்தை என்னோட ஆராய்ச்சிக்காக எப்படி வேணும்ன்னாலும் செலவழிக்கலாம். நீ கேட்ட பத்து லட்சம் நாளைக்குக் காலையில் பதினோரு மணிக்கு உன்னோட கையில் ட்ராஃப்ட்டாக இருக்கும். நீயே அதை... ஒரு கவர்ல போட்டு தபால் மூலமா கோத்தகிரியில் இருக்கிற 'பட்ஸ்' அநாதை விடுதிக்கு அனுப்பி வெச்சுடலாம்... ஓ.கே...! இனி ஒரு தடவை பணம் கிடைக்குமான்னு கேட்காதே...!''

''ஸாரி ஸார்...!''

இருவரும் லௌன்ஞ்சுக்கு வந்தார்கள்.

குளிர்க்கு ஓவர்கோட் அணிந்திருந்த அந்த இளம்பெண் பக்கத்தில் வந்தாள்.

''வெல்கம் ஸார்...''

அரிஸ்டோ லட்சணாவிடம் திரும்பினார்.

''லட்சணா! ஷி... மிஸ் ஷோபியா. ஆராய்ச்சிக் கூடத்தில் என்னுடைய பர்சனல் செக்ரட்ரி... பயோ டெக்னாலஜியில் ஏகப்பட்ட ஐ.க்யூ... நான் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பயணங்கள் மேற்கொள்கிறபோது லேப்ரட்ரியின் மொத்த இன்சார்ஜும் ஷோபியாதான்...!'' சொன்னவர் ஷோபியாவிடம் திரும்பினார்.

''ஷோபியா...! நான் டெலிபோனில் சொன்ன லட்சணா இந்தப் பெண்தான்... நம்முடைய ஆராய்ச்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு கொடுக்கப்



போகிறவள்.''

''ஹலோ... ப்ளீஸ்ட் டு மீட் யூ...'' ஷோபியாவும் லட்சணாவும் மெலிதாய் கைவிரல்களைப் பற்றி குலுக்கிக் கொண்டார்கள். பின் மூன்று பேரும் நடந்தார்கள்.

''எந்த காரை எடுத்துகிட்டு வந்தே ஷோபியா?''

''லான்ஸர்...''

''டிரைவிங்...? நீயா... ட்ரைவரா...?''

''நான்தான்...! நீங்கள் ஊட்டியிலிருந்து டெல்லி திரும்புகிற விஷயம் வெளியே யார்க்கும் தெரியக்கூடாது என்பதற்காகத்தான் டிரைவரை வீட்டுக்கு அனுப்பிவிட்டேன்.''

''சரியான காரியம்...''

கஸ்டம்ஸை முடித்துக் கொண்டு ஏர்போர்ட்டுக்கு வெளியே வந்தார்கள். பனி பெய்து பார்க்கிங்கில் இருந்த நூற்றுக்கணக்கான கார்களின் மண்டைகள் நனைந்து கொண்டிருந்தன.

ஷோபியா கேட்டாள்.

''என்ன லட்சணா...! இதுக்கு முன்னாடி நீ டெல்லிக்கு வந்து இருக்கியா...?''

''இல்லை... இதுதான் முதல் தடவை.''

''டெல்லி குளிர் கொஞ்சம் பயமுறுத்தும்... ஓவர் கோட்டோ ஸ்வெட்டரோ உடம்புக்கு கொடுத்துட்டா என்ஜாய் பண்ணலாம். ஃபைன் வெதர்.''

ஷோபியா பேசிக்கொண்டே முன்னால் போய் அந்த காரட் நிற லான்ஸர்க்கு பக்கத்தில் நின்றாள். கதவைத் திறந்துவிட அரிஸ்டோவும் பின்பக்கக் கதவைத் திறந்துவிட அரிஸ்டோவும் லட்சணாவும் உள்ளே போய் அமிழ்ந்தார்கள். ஷோபியா காரை நகர்த்தினாள். பனி கொட்டி நனைந்து போயிருந்த ரோட்டில் கார் ஒரு ஐஸ் துண்டமாய் வழுக்கிக் கொண்டு போயிற்று.

ஷோபியா காரை ஓட்டிக் கொண்டே கேட்டாள்.

''லட்சணாகிட்டே எல்லாத்தையும் சொல்லிட்டீங்களா ஸார்...?''

''ம்... ஊளவுக்கு சொல்லிட்டேன்... நம்முடைய ஆராய்ச்சிகள் எல்லாமே இந்திய ராணுவத்துக்கு உபயோகப்படப் போகிறது என்கிற கான்செப்ட் லட்சணாவுக்கு சந்தோஷத்தைக் கொடுத்திருக்கு... லட்சணா தன்னோட உயிரை ஆராய்ச்சிக்காக கொடுக்க முன்வந்ததுக்குக் காரணமே அந்த கான்செப்ட்தான்.''

ஷோபியா பின்னால் உட்கார்ந்திருந்த லட்சணாவை திரும்பிப் பார்த்தாள். ''லட்சணா! இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை. நீ தற்கொலை பண்ணிக்க இருந்தே என்கிற ஒரே ஒரு காரணத்துக்காகத்தான் புரபசர் இந்த உதவியை உன்கிட்டே கேட்டிருக்கார். இப்போது உன் மனதில் இருக்கிற தற்கொலை எண்ணம் மாறியிருக்கலாம். வாழணும் என்கிற ஆசை பிறந்து இருக்கலாம். அப்படிப்பட்ட எண்ணம் இருந்தா சொல்லிடு. அடுத்த ஃப்ளைட்டிலேயே நீ ஊட்டி போயிடலாம்.''

லட்சணா விரக்தியாய் புன்னகைத்தாள்.

''நான் உயிரோடு இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு விஷத்தை விழுங்கிற மாதிரி இருக்கு... என்னோட மரணம் முடிவாகிவிட்ட ஒண்ணு. அதுல எந்த மாற்றமும் இல்லை...''

ஷோபியா ஏதோ பதில் சொல்ல வாயெடுத்த விநாடி அவளிடம் இருந்த செல்போன் மெல்லிய குரல் கொடுத்தது.

செல்லை எடுத்து காதுக்கு ஒற்றினாள்.

''எஸ்...''

''புரபசர் அரிஸ்டோவின் பி.ஏ. ஷோபியா...?''

''ஹோல்டிங்...''

''இது ராணுவத்தின் உளவுத்துறை பிரிவு.''

''சொல்லுங்கள்...''

''புரபசர் இப்போது டெல்லி ஏர்போர்ட்டிலிருந்து தன்னுடைய இருப்பிடத்துக்கு காரில் போய்க் கொண்டிருக்கிறார். இல்லையா...?''

''ஆமாம்...''



''காரை ஓட்டிக்கொண்டிருப்பது யார்?''

''நான்தான்...!''

''உங்களோடு ஒரு பெண் பயணம் செய்கிறாளா?''

''ஆமாம்...''

''யாரவள்...?''

''பெயர் லட்சணா... ஊட்டியைச் சேர்ந்த பெண். புரபசரின் ஆராய்ச்சியில் பங்கு பெறுவதற்காக வந்து இருக்கிறாள்...''

''நம்பிக்கைக்கு உரியவள்தானா...?''

''ஏன் அப்படி கேட்கிறீர்கள்...?''

''இல்லை... புரபசரின் உயிரைக் குறிவைத்து பல்வேறு தீவிரவாத அமைப்புகள் இருபத்திநான்கு மணி நேரமும் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. எந்த உருவத்தில் எப்படி தாக்குதல் இருக்கும் என்பதை எங்களால் கணிக்கவோ அனுமானிக்கவோ முடியவில்லை. புதிய நபர்களிடம் புரபசர் அரிஸ்டோ எச்சரிக்கையாய் இருப்பது நல்லது அல்லவா...?''

ஷோபியா சிரித்தாள். ''புரபசர்க்கு ஆபத்து இருப்பது உண்மைதான்... கடவுளின் கருணையும், பாரத மாதாவின் அருளும் இருக்கும்போது அவரை யாரும் எதுவும் செய்துவிட முடியாது...''

''மன்னிக்கவும் மிஸ் ஷோபியா... புரபசரின் பாதுகாப்பு விஷயத்தில் எந்த அலட்சியமும் வேண்டாம். அவர் டெல்லியிலிருந்து ஊட்டிக்கு புறப்பட்டபோது அதே விமானத்தில் சி.பி.ஐ. பிரிவைச் சேர்ந்த சஞ்சய்குமார் என்கிற ஒரு அதிகாரி 'ஆசிப் உஸ்மான் முல்லா' என்று பெயரை மாற்றிக் கொண்டு பயணம் செய்திருக்கிறார். கோவை விமான நிலையத்தில் பிடிபட்டதும் எந்த உண்மையையும் சொல்லாமல் பிடிவாதம் பிடித்து - போலீஸிடம் அடி வாங்கியே இறந்து போய்விட்டார். அது மட்டுமல்ல - புரபசர் ஊட்டி போய்ச் சேர்ந்ததும் ராணுவத்துக்கு சொந்தமான ஜீப்பில் பயணம் செய்ய முயன்றபோது ஜீப்பின் அடியில் ஒரு மேக்னட் டைனமைட்

பொருத்தப்பட்டு இருப்பது புரபசரின் டி-ஆக்டிவ்
வாட்ச் மூலமாக கண்டுபிடிக்கப்பட்டது. இப்படி
சம்பவங்கள் அடுக்கடுக்காய் நடந்து
கொண்டிருக்கும்போது புரபசரின் பாதுகாப்பு
விஷயத்தில் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டியது
அவசியம் அல்லவா...?''

''ஒப்புக்கொள்கிறேன்...! புரபசரின் பாதுகாப்பு
விஷயத்தில் உளவுத்துறை காட்டும் அக்கறைக்கு
நன்றி... சோதனைச் சாலையில் சில முக்கியமான
ஆராய்ச்சிகளை நடத்த வேண்டியிருப்பதால் புரபசர்
இனி ஒரு மாத காலத்துக்கு வெளியே எங்கேயும்
வரமாட்டார்.''

''இது நல்ல செய்தி... நன்றி...!''

செல்போன் பேச்சு அணைந்தது.

அரிஸ்டோ கேட்டார்.

''என்ன ஷோபியா... உளவுத்துறையா?''

''ஆமா...''

''என்ன சொல்றாங்க...?''

''வழக்கம்போல் உங்கள் பாதுகாப்பு விஷயத்தில்
புலம்பல்.''

''லட்சணாவைப் பத்தி ஏதோ பேச்சு வந்ததே...?''

''அவர்களுக்கு லட்சணா மேல சந்தேகம். யாரு
என்னான்னு கேட்டு ஒரே என்கொய்ரி...''

''அது அவங்க ட்யூட்டி...! தப்பு சொல்ல முடியாது.''

லட்சணா புரபசரை கொஞ்சம் கவலையாய்
பார்த்தாள்.

''உங்க உயிர்க்கு அவ்வளவு ஆபத்தா...?''

''ம்... என்ன செய்யறது...! இந்திய ராணுவத்துக்கு
ஏதோ என்னாலான உதவிகளை விஞ்ஞான பூர்வமா
பண்றது அண்டை நாடுகளுக்குப் பிடிக்கலை... என்னை
ஏப்படியாவது சாய்ச்சுடணும்ன்னு பார்க்கிறாங்க...
ஒவ்வொரு தடவையும் கடவுள் புண்ணியத்தால
தப்பிச்சுட்டு வர்றேன்...''

லட்சணா புரபசரை ஏறிட்டாள். கண்களில் லேசாய்



நீர். ''ஸார்! நாட்டுக்கு நல்லது செய்ய நினைக்கிற
உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது ஸார்...!''

''என்மேல நிஜமாவே உனக்கு அக்கறையாம்மா?''

''என்ன ஸார் இது கேள்வி...! நான் உங்க பொண்ணு
மாதிரி...''

''உனக்கு அப்படி ஒரு எண்ணம் இருந்தா... நான்
இப்போ கேட்கப் போகிற கேள்விக்கு பதில்
சொல்லணும்...''

''என்ன கேள்வி...?''

''உன்னோட தற்கொலை முயற்சிக்கு என்ன
காரணம்...?''

''ஷோபியா...! காரை அப்படி ஓரமா ஒரு நிமிஷம்
நிறுத்தறீங்களா... நான் இறங்கிக்கறேன்...!''

அரிஸ்டோ பதட்டமானார்.

''ஸாரி... லட்சணா! நான் இனிமே இந்தக்
கேள்வியைக் கேட்க மாட்டேன்...!''

## 13

இன்ஸ்பெக்டர் கௌடா ஸ்டேஷனுக்குள் நுழைய
டெலிபோன் கூவிக் கொண்டிருந்தது. போய் ரிஸீவரை
தொட்டார்.

''ஹலோ...''

''கோயம்புத்தூரிலிருந்து நான் இன்ஸ்பெக்டர்
ராஜேந்திரன் பேசறேன். மிஸ்டர் கௌடா ப்ளீஸ்...''

''நான் கௌடாதான்! சொல்லுங்க ராஜேந்திரன்...!''

''நீங்க ஒரு விபரம் கேட்டிருந்தீங்களே...?''

''பரணி?''

''எஸ்... அந்த பரணி சக்ரா மில்ஸ் ஓனரோட பையன்.
பையனோட அப்பா பேரு சக்கரபாணி. கோயம்புத்தூர்ல
பிக் ஷாட். ஊட்டியில் எஸ்டேட்ஸ{ம் இருக்கு... ஒரே
பையன்.''

''பரணியை நீங்க பார்த்தீங்களா?''

''பார்க்கலை... நீங்க பார்த்து பேசச் சொன்னா

பேசிடறேன்... அந்த தற்கொலை கேஸ்" லட்சணா விவகாரம்தானே...?''

''அதேதான்!''

''பார்த்து பேசிடவா...?''

''வேண்டாம்... ராஜேந்திரன்...! இன்னிக்கு சாயந்தரம் நானே கோயம்புத்தூர்ல அந்த பரணியை மீட் பண்ணி பேசிக்கறேன். பையன் பெரிய இடம். பார்த்து டீல் பண்ணனும்... இல்லேன்னா மேலிடத்திலிருந்து மெமோ வந்துடும். பரணியோட வீட்டு அட்ரஸையும் மில் அட்ரஸையும் கொடுங்க. நான் மீட் பண்ணிக்கறேன்...''

''அந்த லட்சணா அநாதைப் பொண்ணுதானே...?''

''ஆமா...''

''பரணிகிட்டே பேசும்போது ஏதாவது பிரச்னை வர்ற மாதிரியிருந்தா விவகாரத்தை அத்தோடு விட்டுடுங்க கௌடா... ரொம்பவும் டீப் என்கொய்ரி வேண்டாம். ஏன்னா இந்த பணக்கார வீட்டுப் பசங்களுக்கு காதல்ங்கிறது ஒரு பீர் சாப்பிடற மாதிரி.''

''எனக்குத் தெரியாதா என்ன...? சரி அட்ரஸை சொல்லுங்க...''

ராஜேந்திரன் சொல்ல கௌடா தன்னுடைய சிறிய டைரியில் குறித்துக் கொண்டார்.

## 14

டெல்லி.

காலை பதினோரு மணி.

அந்த நிசப்தமான சோதனைச்சாலைக்குள் ஷோபியாவை பின் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தாள் லட்சணா.

''லேப் எப்படியிருக்கு லட்சணா?''

''ஏதோ ஒரு பெரிய தொழிற்சாலை மாதிரி பிரம்மாண்டமா இருக்கு...''

''எல்லாமே புரபசரோட உழைப்பு...''



''பைகாரா டேம்ல விழுந்து வீணாக போக இருந்த என்னோட உயிர் அவரோட ஆராய்ச்சிக்கு உதவறதுல எனக்கு ரொம்பவும் சந்தோஷம்.''

''உனக்கு பயமாயில்லையா லட்சணா?''

''எதுக்கு பயம்...?''

''சாகறதுக்குத்தான்...''

''சரியா போச்சு... என்னோட மரணம் எந்த நிமிஷம் வரும்ன்னு எதிர்பார்த்து காத்திட்டிருக்கேன்.''

''உனக்கு வாழ்க்கை மேல அப்படியென்ன வெறுப்பு?''

''வேற விஷயம் பேசலாமா...?''

''உன்னை மாதிரி அழுத்தமான பெண்ணை நான் இதுவரைக்கும் பார்த்ததேயில்லை...''

''பாராட்டுக்கு நன்றி.''

புரபசர் அரிஸ்டோவின் அறைக்குள் நுழைந்தார்கள். ஒரு பூனையை மயக்கமாக்கி, மல்லாக்கப் படுக்க வைத்து அதன் வயிற்றுப் பகுதியை ஒரு ஃபோர்சிப்பால் சுரண்டிப் பார்த்துக் கொண்டிருந்த அரிஸ்டோ திரும்பினார்.

''வாம்மா லட்சணா...''

''குட் மார்னிங் ஸார்...!''

''இந்த மரியாதையெல்லாம் வேண்டாம். ராத்திரி நல்லாத் தூங்கினியா... உனக்கு ஒதுக்கிக் குடுத்த அறை வசதியா இருந்ததா?''

''இதுவே அதிகம் ஸார்... ராத்திரி நல்லாத் தூங்கினேன்.''

''சரி... அந்த ஃப்ளவர் வாஷ்க்கு கீழே ஒரு கவர் இருக்கு. தெரியுதா...?''

''ம்...''

''அதை எடுத்து பாரு.''

லட்சணா எடுத்துப் பார்த்தாள். கவர்க்குள் அந்த பேங்க் ட்ராஃப்ட் இருந்தது. ரூபாய் பத்து லட்சத்துக்கான ட்ராஃப்ட்.

அரிஸ்டோ தொடர்ந்தார்.

''நீ கேட்ட பத்து லட்சம். ட்ராஃப்ட் 'பட்ஸ்' அநாதை விடுதி பெயர்க்கு எடுக்கப்பட்டிருக்கு... நீ இன்னிக்கே உன்னோட கையாலேயே தபால்ல அனுப்பி வெச்சுடலாம்...''

''தேங்க்யூ ஸார்...''

''நான்தாம்மா உனக்கு நன்றி சொல்லணும். ஒரு முக்கியமான ஆராய்ச்சிக்கு உன்னோட உயிர் உபயோகப்படப் போகுதே...?''

''எந்த வகையான ஆராய்ச்சிக்கு என்னோட உயிர் உபயோகப்படப் போகுதுன்னு நான் தெரிஞ்சுக்கலாமா ஸார்.''

''அவசியம் இப்பவே தெரிஞ்சுக்கணுமா?''

''ஒரு ஆர்வம்தான்...!''

அரிஸ்டோ சில விநாடிகள் தயங்கிவிட்டு தொடர்ந்தார். தமிழும் ஆங்கிலமும் கலந்து பேசினார்.

''பூனை, நாய் மாதிரியான ஐந்தறிவு பிராணிகள் சில சமயம் மனிதர்களைக் காட்டிலும் புத்திசாலித்தனமாய் செயல்படும். ஆனால் மனிதர்கள் அளவுக்கு அவை புத்திசாலிகள் கிடையாது. அதற்கு எத்தனையோ பயாலாஜிகல் காரணங்கள் உண்டு. மனிதனின் பயாலாஜிகல் ஃபேக்டர்களையும் பூனை, நாய் மாதிரியான பிராணிகளின் பயாலாஜிகல் ஃபேக்டர்களையும் சரியானபடி பாலன்ஸ் செய்து 'பயோ ஸீரம்' என்கிற ஒரு இஞ்செக்‌ஷன் திரவத்தை தயார் செய்வதுதான் என்னுடைய தற்போதைய ஆராய்ச்சியின் குறிக்கோள். இந்த ஆராய்ச்சிக்கு ஒரு ஆரோக்கியமான பெண்ணின் உடம்போ அல்லது ஆணின் உடம்போ மிகவும் அவசியம். அதிர்ஷ்டவசமாய் நீ கிடைத்து இருக்கிறாய். இந்த ஆராய்ச்சிக்காக சுமார் ஒரு வார காலம் வரைக்கும் பிராணிகளின் பயாலாஜிகல் ஃபேக்டர்கள் அடங்கிய திரவத்தை இஞ்செக்‌ஷன் மூலமாக உன்னுடைய உடம்பில் செலுத்துவேன். ஒரு வாரம் முடிந்ததும் உன்னுடைய உடம்பில் இருக்கும் ரத்தத்தை எடுத்து பிராணிகளுக்கு செலுத்துவேன்.



அதற்குப் பிறகு அந்தப் பிராணிகளின் ரத்தத்தை எடுத்து உனக்கு செலுத்துவேன். இதன் காரணமாக உன்னுடைய உடம்பில் எதிர்விளைவுகள் ஏற்படும். அந்த எதிர் விளைவுகள் உன்னுடைய உடம்புக்குள் நடந்து கொண்டிருக்கும்போதே உன்னுடைய உடம்பின் செல்களையும் திசுக்களையும் உபயோகப்படுத்தி பயோ ஸீரம் தயாரிப்பேன். இந்த பயோ ஸீரத்தில் மனிதப் பண்புகள் அதிகம் இருப்பதால் இந்த பயோ ஸீரம் செலுத்தப்படும் ஐந்தறிவு பிராணிகளுக்கு ஆயுளும் அதிகம். புத்திசாலித் தனமும் அதிகம்...''

அரிஸ்டோ சொல்லச் சொல்ல லட்சணாவின் முகம் நிறமிழந்து மெல்ல மாறியது.

அவர் புன்னகைத்தார்.

''பார்த்தியா... பயந்துட்டே!''

''பயப்படலை ஸார்... என்னோட உயிர் உடம்பிலிருந்து பிரிய நிறைய நாளாகும் போலிருக்கே...?''

''நிறைய நாளாகாது... ஒரு வாரத்திலிருந்து பத்து நாள். மீறிப்போனால் பதினைந்து நாள்.''

''உடம்பில் வலி இருக்குமா?''

''உடம்பில் எதிர்விளைவுகள் நிகழும்போது வலி இல்லாமே இருக்குமா...? இருக்கும்...! பட் அந்த வலியைத் தாங்கிக்க பெயின் கில்லர் மாத்திரைகள் இருக்கும்போது என்ன பயம்...?''

லட்சணா மௌனமாய் இருக்க, அரிஸ்டோ பக்கத்தில் வந்து அவளுடைய தோளின் மேல் கையை வைத்தார்.

''இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை... அந்த பத்து லட்ச ரூபாய் ட்ராஃப்ட்டைக் கொடுத்துட்டு நீ ஊட்டிக்கு உடனடியாய் கிளம்பிப் போகலாம்...''

லட்சணா நிமிர்ந்தாள். ''எனக்கு மரண பயம் கிடையாது ஸார்... 'பட்ஸ்' அநாதை விடுதிக்கு கிடைக்கப் போகிற இந்த பத்து லட்ச ரூபாய்க்காக நான் எல்லா வலிகளையும் தாங்கிக்கத் தயாராயிருக்கேன்...''

''குட்...! இனிமே உனக்கு எந்த தயக்கமும் வராதே?''

''வராது... இந்த நிமிஷத்திலிருந்து என்னுடைய இந்த உடம்பும், உடம்புக்குள்ளே இருக்கிற உயிரும் உங்க ஆராய்ச்சிக்கு சொந்தம்.''

## 15

கோவை.

அந்த மத்தியான வெய்யிலிலும் குளிர் லேசாய் உறைத்தது. பஸ்ஸைவிட்டுக் கீழே இறங்கிய இன்ஸ்பெக்டர் கௌடா, யூனிஃபார்மை தவிர்த்துவிட்டு பளீரென்ற வெள்ளைசர்ட்டிலும் வேஷ்டியிலும் தன்னை வித்தியாசப்படுத்திக் கொண்டு ஆட்டோ ஸ்டாண்டை நெருங்கினார்.

சினிமாபோஸ்டரில் இருந்த ஒரு நடிகையின் கற்புக்கு விலை பேசிக் கொண்டிருந்த இரண்டு ஆட்டோ ட்ரைவர்கள் கௌடாவைப் பார்த்ததும் அந்த நடிகையை மறந்துவிட்டு எழுந்து வந்தனர்.

''ஆட்டோ வேணுமா ஸார்...?''

''பீளமேடு போகணும்...''

''போலாம் ஸார். பீளமேட்ல எந்த ஏரியா ஸார்?''

''ஆர்.ஜி. நகர்...''

''ஃபிப்டி ருபீஸ் ஆகும் ஸார்.''

''மீட்டர் போடமாட்டியா?''

''மீட்டர் போட்டாலும் அம்பது ரூபாதான் வரும் ஸார்.''

''மீட்டரைப் போட்டே ஓட்டு.''

கௌடா ஏறி உட்கார்ந்தார்.

மீட்டரைத் தட்டிவிட்ட டிரைவர் ஆட்டோவை கிளப்பிக் கொண்டு பறந்தார். காந்திபுரம் சிக்னலில் நின்ற ஆட்டோ, பின் வேகம் எடுத்து பாரதியார் ரோட்டில் புகுந்தது. இரண்டு நிமிஷ மௌனமான பயணத்துக்குப்பின் -

டிரைவர் கேட்டார்.

''ஸார்... நான் கேக்கறேன்னு தப்பா நினைக்காதீங்க.



ஆர்.ஜி. நகர்ல யார் வீட்டுக்கு போகப் போறீங்க...?
என்னா நானும் அதே ஆர்.ஜி. நகர்லதான்
குடியிருக்கேன்... பத்து வருஷமா குடியிருக்கிறதுனால
அந்த ஏரியாவில் இருக்கிற எல்லாரையும் எனக்குத்
தெரியும்...''

''மில் ஓனர் சக்ரபாணி வீட்டுக்கு...''

''ஓ... அவர் வீட்டுக்கா...?''

''அவரை உனக்குத் தெரியுமா...?''
''என்ன கேள்வி ஸார் இது... அவர் எவ்வளவு பெரிய
ஆளு... அவர் அந்த ஏரியாவுக்கு வந்து கடல் மாதிரி
பங்களா கட்டின பிறகுதான் ஆர்.ஜி. நகர்க்கே ஒரு மவுசு
வந்தது. நீங்க அவர்க்கு ரிலேட்டிவா ஸார்...?''

''ஆமா...''

''அதுதான் அவரோட மகன் பரணியைப் பத்தி
விசாரிச்சுட்டு போலாம்னு வந்தீங்களா...?''
கௌடா திடுக்கிட்டார். அந்த திடுக்கிடலை வெளியே
காட்டிக் கொள்ளாமல் கேட்டார்.
''அ... அவரோட பை... பையன் பரணிக்கு என்ன?''
''என்ன ஸார் இது... ரிலேட்டிவ்னு சொல்றீங்க.
அவரோட பையனுக்கு என்ன நடந்ததுன்னு
தெரியாதா...? அவர்தான் போன வாரம் ஒரு
ஆக்ஸிடெண்ட்ல மாட்டிகிட்டு இப்போ உயிர்க்கு
ஆபத்தான நிலையில் ஹாஸ்பிட்டல்ல
அட்மிட்டாகியிருக்காரே...?''

''அ... அப்படியா...?''

''உங்களுக்கு விஷயம் தெரியலை போலிருக்கு...''
''நான் வெளியூரு... சொல்ல மறந்துட்டாங்க
போலிருக்கு... பரணி இப்போ எந்த ஹாஸ்பிட்டல்ல
அட்மிட்டாகியிருக்கார்னு தெரியுமா...?''

''க்ளாஸிக் நர்ஸிங் ஹோம்ல ஸார்''

''அது எங்கே இருக்கு...?''

''பிரஸிடெண்ட் ஹாலுக்குப் பக்கத்துல..''

''ஆட்டோவை ஹாஸ்பிட்டலுக்கே விடு...''

''வீட்டுக்கு வேண்டாமா ஸார்...?''

''வேண்டாம்...''

ஆட்டோ அரை நிமிஷ அவகாசத்தில் திசையை மாற்றிக் கொண்டு பறந்தது.

## 16

நீளமான மேஜையின் மேல் லட்சணா படுக்க வைக்கப்பட்டிருக்க, அவளுக்கு இருபுறமும் அரிஸ்டோவும் ஷோபியாவும் நின்றிருந்தார்கள்.

பக்கத்து மேஜையில் ஒரு பயோ கம்ப்யூட்டர் தன்னுடைய மானிட்டர் திரையில் லட்சணாவின் ஹெல்த் சார்ட்டை போட்டுக்காட்டியது. ரத்த அழுத்தம், ரத்தத்தில் சர்க்கரையின் அளவு, நுரையீரல்களின் சுவாச இயக்கம், இரைப்பையின் ஜீரணிக்கும் தன்மை, கண்களின் பார்வைத்திறன், காதுகளின் கேட்கும் திறன், சிறுநீரகங்களின் செயல்பாடு - எல்லாவற்றையும் பயோ கம்ப்யூட்டர் விநாடி நேரத்துக்குள் விசாரித்து 'நார்மல்' என்று சொல்லி பச்சை நிறத்தில் ரைட் மார்க் போட்டது.

அரிஸ்டோ லட்சணாவிடம் குனிந்தார்.

''இந்த நிமிஷத்திலிருந்து நீ என்னுடைய ஆராய்ச்சிப் பொருள். இன்னிக்கு உனக்கு முதலாவது இஞ்செக்ஷன். இந்த இஞ்செக்ஷன் திரவம் உன்னுடைய உடம்புக்குள் போனதும் தலை லேசாய் கிறுகிறுக்கும். தூக்கம் வர்ற மாதிரி இருக்கும். இந்த உணர்வுகள் எல்லாம் பத்து நிமிஷ நேரத்துக்குத்தான்... அதுக்கப்புறம் உன்னோட உடல் உறுப்புகள் எல்லாமே நார்மலுக்கு வந்துடும்... ஆனால் உன்னோட பார்வையில் மட்டும் சில வித்தியாசங்கள் தெரியும்...''

லட்சணா புரபசரை குழப்பமாய்ப் பார்த்தாள்.

அவர் சிரித்தார். ''என்ன லட்சணா... புரியலையா...?'' சொன்னவர், மேலே இருந்த சீலிங் ஃபேனைக் காட்டினார்.

''இந்த ஃபேன் என்ன நிறம்...?''

''செர்ரி ரெட்'' என்றாள் லட்சணா



''இது செர்ரி ரெட்தானே... சந்தேகம் இல்லையே?''

''இல்லை...''

''சரி... இஞ்செக்ஷன் போட்டு பத்து நிமிஷம் கழிச்சு நீ நார்மலுக்கு வந்ததும் இதே சீலிங் ஃபேனைக் காட்டி என்ன நிறம்ன்னு கேட்பேன். அப்போ நீ சொல்லப்போகிற நிறம் வேற நிறமாயிருக்கும்.''

''......''

''என்ன லட்சணா... பயமாயிருக்கா...?''

''இல்லை...''

''அப்படியே கண்களை மூடிக்க...''

மூடிக் கொண்டாள்.

''ஷோபியா... கெட் மீ த இஞ்செக்ஷன்...''

ஷோபியா கண்ணாடி ஷெல்ஃபுக்குப் போய் இளம் மஞ்சள் நிறத்தோடு கூடிய இஞ்செக்ஷன் மருந்தோடு வந்தாள். அதை வாங்கிக் கொண்ட அரிஸ்டோ லட்சணாவின் இடது கை தோள்பட்டையைப் பற்றி ஊசியைக் குத்தினார்.

எறும்பு கடித்த மாதிரியான உணர்ச்சி. மருந்து தோள்பட்டை வழியே வெப்பமாய் நகர்ந்து ரத்த ஓட்டத்தில் கலந்தது. அடுத்த விநாடி உடம்புக்குள் ஒரு சில நடுக்கம் ஏற்பட தலை கிறுகிறுத்தது. கண்ணிமைகளில் ஒரு பாரம் வந்து ஏறிக் கொண்டது. லட்சணா இமைகளை திறக்க முயன்றாள். முடியவில்லை.

ஏதோ ஒரு ஆற்றுச் சுழலுக்குள் சிக்கிக் கொண்ட உணர்வில் பத்து நிமிஷம் கரைந்தது. பதினோராவது நிமிஷம் அவளுடைய உடம்பை புரபசர் உசுப்பினார்.

''லட்சணா...''

அவள் கண் விழித்தாள்.

உடம்புக்குள் எல்லா கலாட்டாவும் ஓய்ந்து இருந்தது.

''லட்சணா... ஆர்... யூ... ஆல்ரைட்...?''

''ம்...''

''இப்ப சீலிங் ஃபேனைப் பாரு...''

லட்சணா பார்த்தாள்.

ஃபேன் இப்போது வெள்ளை நிறத்தில் தெரிந்தது.

# 17

க்ளாஸிக் நர்ஸிங்ஹோம் உண்மையிலேயே க்ளாஸிக்காக இருந்தது. திரும்பின பக்கமெல்லாம் க்ரானைட் முகம் பார்க்கும் கண்ணாடியாய் பளபளத்து.

கௌடா ஏதோ ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலுக்குள் நுழைந்த உணர்வோடு நர்ஸிங்ஹோமின் என்கொய்ரி கௌண்ட்டரை நோக்கிப் போனார். கௌண்ட்டர்க்குள் டெலிபோனில் பேசிக் கொண்டிருந்த அந்தப் பெண் பேச்சை நிறுத்தி ''எஸ்'' என்றாள்.

''பேஷண்ட் பரணி...?''

''ஆக்ஸிடெண்ட் கேஸ்தானே...?''

''ஆமா...''

''ஐ.ஸி.யூனிட்டில் இருக்கார்...''

''ஐ.ஸி. எந்தப் பக்கம்...?''

''நேரா போய் ரைட்ல திரும்புங்க...'' சொல்லிவிட்டு அவள் மறுபடியும் ரிஸீவர்க்கு உதட்டைக் கொடுக்க, கௌடா ''எக்ஸ்க்யூஸ் மீ'' என்றார்.

''என்ன...?''

''பேஷண்ட் பரணியோட நிலைமை இப்போ எப்படியிருக்குன்னு சொல்ல முடியுமா...?''

''ஸாரி... நாங்க எதையும் சொல்லக்கூடாது. நீங்க டாக்டர்ஸ்கிட்டே கேளுங்க... ஹி வில் டெல்யூ எவ்ரி திங்க்...''

கௌடா தலையை ஆட்டிவிட்டு திரும்பி நடந்தார். நேராய் ஒரு நிமிஷம். வலது பக்கம் திரும்பி இரண்டு நிமிஷம்.

ஐ.ஸி. யூனிட் வந்தது.

யூனிட்டுக்கு வெளியே சுவரோரமாய் பாலிவினைல் நாற்காலிகள் வரிசையாய் போடப்பட்டிருக்க அதில் பார்வையாளர்கள் கவலை முகங்களாய் தெரிந்தார்கள். கௌடா குழப்பமாய் பார்த்துக் கொண்டு நின்றார்.



'இதில் பரணி குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் யார்?'

யோசிப்பில் சில நிமிஷங்கள் கரைந்திருந்தபோது ஐ.ஸி. யூனிட்டின் கதவைத் திறந்து கொண்டு, அந்த டாக்டர் வெளிப்பட்டார். கைக்குட்டையால் முகம் துடைத்து வேகமாய் நடந்தவரை கௌடா எதிர்கொண்டார்.

''எக்ஸ்க்யூஸ்மீ டாக்டர்...''

அவர் நின்றார்.

''என்ன...?''

''பேஷண்ட் பரணியோட கண்டிஷன் இப்போ எப்படியிருக்கு...?''

அந்த டாக்டர் கௌடாவை ஏற இறங்கப் பார்த்தார்.

''பேஷண்ட்டுக்கு நீங்க என்ன உறவு...?''

''தாய்மாமன்...''

''பரணியோட கண்டிஷன் ரொம்பவும் க்ரிட்டிக்கலாத்தான் இருக்கு... இப்போதைக்கு எதுவுமே சொல்ல முடியாத நிலைமை. ஆக்ஸிடெண்ட்ல தண்டுவடம் சரியான அடி வாங்கியிருக்கு. ஹண்ட்ரட் பர்ஸண்ட் கோமா ஸ்டேஜ். நாலு நாளா அப்ஸர்வ் பண்றோம். எந்த ஒரு பாஸிடிவ் ரிசல்ட்டும் கிடைக்கலை. பார்க்கலாம்... லெட் அஸ் வெயிட் அண்ட் ஸீ...''

டாக்டர் சொல்லிக் கொண்டே நகர்ந்துவிட, கௌடா யோசனையாய் அப்படியே நின்றார்.

'பரணிக்கு இப்படியொரு ஆக்ஸிடெண்ட் நடந்து உயிர்க்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டதால்தான் லட்சணா தற்கொலை செய்து கொள்ள முடிவு எடுத்து இருப்பாளோ...?'

கௌடா யோசிக்க யோசிக்கவே -

அவருடைய தோளில் ஒரு கை கனமாய் விழுந்தது. திரும்பினார்.

அந்த இளைஞன் நின்றிருந்தான். முகத்திலும் கண்களிலும் கோபச் சிவப்பு. கேட்டான்.

''நீ பரணியோட தாய் மாமனா...?''

''அது... வந்து...''

''எதுக்காக இந்த பொய்...? பரணிக்கு தாய்மாமனே கிடையாது...''

''ஸாரி...! பரணியோட உடல் நிலையைப்பத்தி உண்மையான நிலைமையைத் தெரிஞ்சுக்கத்தான் டாக்டர்கிட்டே அப்படியொரு பொய் சொன்னேன்.''

''உண்மையிலேயே நீங்க யாரு...?''

கௌடா சில விநாடி யோசனைக்குப்பின் தன் உத்யோக கார்டை எடுத்து நீட்ட, அதை வாங்கிப்பார்த்த இளைஞன் முகம் மாறினான்.

''நீங்க போலீஸ்...?''

''எஸ்...''

''ஊட்டியிலிருந்து இங்கே வந்து எதுக்காக பரணியைப்பத்தி என்கொய்ரி பண்ணிட்டிருக்கீங்க...?''

''வாங்க... அப்படி ஒதுக்குப்புறமா போய் பேசுவோம். உங்கபேர் என்ன?''

''மது.''

இருவரும் அந்த கிரானைட் வராந்தாவில் நடந்து ஒதுக்குப்புறமாய் நின்றார்கள்.

''சொல்லுங்க... எதுக்காக இந்த என்கொய்ரி?''

''நீங்க பரணிக்கு உறவா... இல்லை ஃப்ரண்டா?''

''ஃப்ரண்ட்...''

''எத்தனை வருஷமா ஃப்ரண்ட்...?''

''காலேஜ் டேஸ்லயிருந்தே ஃப்ரண்ட்தான்.''

''அதாவது ஒரு அஞ்சு வருஷ காலமா ஃப்ரண்ட்?''

''ஆமா...''

''சரி...! லட்சணாங்கிற பெண்ணைப்பத்தி உங்களுக்குத் தெரியுமா மிஸ்டர் மது...?''

''லட்சணா...?''

''ம்...''

''தெரியாது...! யார் அந்தப் பெண்...?''

''உண்மையிலேயே அந்தப் பெண்ணைப்பத்தி உங்களுக்குத் தெரியாதா...?''

''தெரியாது...''



கௌடா தான் கொண்டு போயிருந்த ப்ரீப்கேஸைப் பிரித்து அந்த நாளிதழை எடுத்து லட்சணாவின் தற்கொலைச் செய்தியை சுட்டிக்காட்டினார்.

''இந்த நியூஸை முழுசுமா படிங்க... மது...''

அந்த மது படித்துவிட்டு நிமிர்ந்தான். கௌடா தன் கையில் வைத்து இருந்த லட்சணாவின் போட்டோவை மதுவின் முகத்துக்கு நேராக பிடித்தார். ''தற்கொலை பண்ணிகிட்டு சாக இருந்த லட்சணா இவதான். இந்தப் பெண்ணை எந்த சந்தர்ப்பத்திலாவது பார்த்த ஞாபகம் உங்களுக்கு வருதா?''

''இல்லை...''

''அப்படின்னா பரணிக்கும் இந்தப் பெண் லட்சணாவுக்கும் இருந்த காதல் விவகாரம் உங்களுக்கு இதுவரையிலும் தெரியாமலேயே இருந்திருக்கு.''

மது திகைத்தான்.

''ஸார்..! நீங்க என்ன சொல்றீங்க...? பரணிக்கும் லட்சணாவுக்கும் காதலா...?''

''எஸ்...''

''உங்களுக்கு யார் சொன்னது...?''

''கோத்தகிரி 'பட்ஸ்' அநாதை விடுதியில் இருக்கிற புனிதா என்கிற பெண். அந்தப் பெண் பரணியையும் லட்சணாவையும் பல தடவை கோத்தகிரியிலும் ஊட்டியிலும் ஒண்ணா பார்த்து இருக்கா...''

''ஸார்...! நீங்க சொல்றதை என்னால நம்பமுடியலை. பரணி ஏற்கெனவே ஒரு பெண்ணை லவ் பண்ணிகிட்டு இருக்கான். அந்தப் பெண் பேர் ஊர்மிளா. ஊர்மிளா ஒரு பெரிய இடத்துப் பெண். இப்போ ஃபாரின்ல அவ ஃபேமிலி இருக்கு... அந்த ஃபேமிலி வர்ற ஆகஸ்ட்ல இந்தியா திரும்பியதும் பரணிக்கும் ஊர்மிளாவுக்கும் கல்யாணம். அதுக்குள்ளே பரணிக்கு இப்படியொரு ஆக்ஸிடெண்ட்...''

கௌடா கேட்டார்:

''பரணியோட அப்பா சக்கரபாணியை நான்

''ஒரு பத்து நிமிஷம் முன்னாடிவரைக்கும் இங்கேதான் இருந்தார். இப்பத்தான் வீட்டுக்குப் புறப்பட்டுப் போனார்.''

''நான் பார்க்கணுமே...''

''வாங்க... போலாம்...''

கௌடாவும் மதுவும் கிளம்பினார்கள்.

## 18

புது டெல்லி.

புரபசர் அரிஸ்டோவின் லாபரட்ரி. இரவு மணி ஒன்பது.

'பயோ-மெக்கானிஸம்'என்று ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட அறைக்குள் அரிஸ்டோவும் ஷோபியாவும் கம்ப்யூட்டரின் மானிட்டரில் சார்ட் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''ஷோபியா...!''

''ஸார்...''

''சார்ட் என்ன சொல்லுது பார்த்தியா...?''

''அப்ஸர்வ் பண்ணிட்டேன் ஸார்... பயோ ஸீரம் தயாரிப்பதற்கான சக்சஸ் ரேட் நாற்பது சதவீதத்திலிருந்து அறுபது சதவீதம் வரைக்கும் 'ரெய்ஸ்' ஆகியிருக்கு...''

''காரணம் என்ன தெரியுமா...?''

''லட்சணா கொடுக்கிற ஒத்துழைப்புதான்... நாய்களுக்கும் பூனைகளுக்கும் நிறங்கள் தெரியாது... எல்லாப் பொருள்களுமே கறுப்பு வெள்ளையாகத்தான் தெரியும் என்கிற கான்செப்ட் நூறு சதவீதம் உண்மையாயிடுச்சு... பிராணியின் பயோ ஃபேக்டர்ஸ் அடங்கிய இஞ்செக்ஷனை லட்சணாவுக்கு செலுத்தின பத்து நிமிஷத்துக்குள்ளே செர்ரி ரெட் கலர்ல இருந்த ஃபேன் அவளுக்கு வெள்ளை நிறமா தெரிஞ்சிருக்கு... ஃபேக்டர்ஸோட பவர் உடம்புல குறைஞ்சதும் மறுபடியும் அவளுக்கு செர்ரி ரெட் கலர்ல தெரிஞ்சிருக்கு...



இது நமக்கு கிடைச்ச மிகப் பெரிய வெற்றி ஸார்...''

''இனி லட்சணாவோட உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட ரத்தத்திலிருந்து பயோ ஃபேக்டர்ஸைப் பிரிச்சு அதை இஞ்செக்ஷன் மூலமா 'ஸ்பை கேட்' பூனைகளுக்கு செலுத்திப் பார்க்கணும்... பத்து நிமிஷம் கழிச்சு அந்தப் பூனைகள் மிரண்டால் அறையில் இருக்கும் பொருள்கள் அதுக்கு நிறம் நிறமா தெரிய ஆரம்பிச்சிருக்குன்னு அர்த்தம்...''

''ஸார்... லட்சணா ஒரு அழகான பெண். கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாய் வாழவேண்டிய ஒரு பெண்ணை ஆராய்ச்சி என்கிற பேரில் அவளை இம்சைப் படுத்தும்போது மனசுக்கு ரொம்பவும் கஷ்டமாயிருக்கு...''

''எனக்கு மட்டும் சந்தோஷமா என்ன...? 'நான் கண்டிப்பா தற்கொலை பண்ணிகிட்டு செத்துப் போகத்தான் போறேன். என்னோட மரணத்தை யாராலேயும் தடுக்க முடியாது'ன்னு சொன்னதாலத்தான் அவளை டெல்லிக்கு கூட்டிட்டு வந்து நம்ம ஆராய்ச்சிக்கு உபயோகப்படுத்திக்கிட்டேன். இந்த தேசத்துக்காக யார் யாரோ எப்படியெல்லாமோ தியாகம் பண்ணியிருக்காங்க. அதுல பல தியாகங்கள் வெளியுலகத்துக்கு தெரியாமலே போயிருக்கு... அது மாதிரியான தியாகங்களில் லட்சணாவோடதும் ஒண்ணு. இதெல்லாம் வெளியே தெரியாத வேர்கள் மாதிரி...''

அரிஸ்டோவின் செல்போன் கணைத்தது.

''ஷோபியா...! எடுத்து யார்ன்னு பாரு...?''

ஷோபியா செல்லை எடுத்து காதில் வைத்தாள். செவிமடுத்துவிட்டு அரிஸ்டோவை ஏறிட்டாள்.

''ஸார்... நமக்கு ஸ்பெசிமென்ஸ் சப்ளை பண்ணுகிற அமர்நாத்... நம்ம ஆர்டர்படி ஸ்பெசிமென்ஸை கலெக்ட் பண்ணிட்டானாம். வேன்ல கொண்டு வந்துகிட்டு இருக்கானாம்... உங்ககிட்டே பேசணுமாம்.''

அரிஸ்டோ செல்போனை வாங்கி காதுக்குக் கொடுத்தார்.

''என்ன அமர்நாத்...?''

''ஸ்பெசிமென்ஸ் ரெடியாயிடுச்சு ஸார். உங்க லேபுக்குத்தான் கொண்டு வந்துகிட்டு இருக்கேன்...''

''ஆர்டர்படி எல்லாத்தையும் கலெக்ட் பண்ணிட்டியா?''

''பண்ணிட்டேன் ஸார்...''

''லிஸ்ட்டை கையில் வெச்சிருக்கியா?''

''வெச்சிருக்கேன்.''

''படி...!''

''பத்து வெள்ளை முயல். பதினஞ்சு ஆண் பூனைகள், ஏழு பெண் பூனைகள், ரெண்டு டெய்ல்லெஸ் குரங்கு, சாதாரண தெருநாய்கள் மூணு. நூறு சீமை எலிகள், ஐம்பது வீட்டு எலிகள்.''

''எல்லாமே ஹெல்த்தி ஸ்பெஸிமென்ஸ்தானே...?''

''என்ன ஸார்... இப்படி கேட்டுட்டீங்க... எல்லாமே பார்த்துப் பார்த்து செலக்ட் பண்ணியிருக்கேன்.''

''சரி... இப்ப மணி ஒன்பதேகால். எத்தனை மணிக்கு லேபுக்கு வருவே...?''

''இப்போ நிஜாமுதீன்ல இருக்கேன் ஸார். லேபுக்கு வந்து சேர எப்படியும் அரைமணி நேரமாயிடும்...''

''சரி... வா... நான் லேப்லதான் இருப்பேன்...''

அரிஸ்டோ செல்போனை அணைத்துவிட்டு ஷோபியாவை ஏறிட்டார்.

''ஷோபியா...! அமர்நாத் ஸ்பெசிமென்ஸ் கொண்டுவர எப்படியும் லேட்டாயிடும்... நீ வீட்டுக்கு கிளம்பு. நான் பார்த்துக்கிறேன்.''

''வேணும்ன்னா இருந்து ஹெல்ப் பண்றேன் ஸார்.''

''வேண்டாம்... இதுவே லேட்...! நாளைக்கு காலையில் ஆறு மணிக்கு நீ லேப்ல இருக்கணும்... லட்சணாவோட சிறுநீரக செல்களை எடுத்து, ஸ்பைகேட் நம்பர் த்ரீயின் உடம்புக்குள்ளே க்ராஃப்ட் பண்ணணும்... அது சம்பந்தமான ப்ரிலிமினரி ஏற்பாடுகளை நான் இப்ப பண்ணிடறேன். கிளம்பு... நீ.''



தன்னுடைய ஹேண்ட் பேக்கை எடுத்து தோளில் மாட்டிக் கொண்டவள் 'குட்நைட்' சொல்லிவிட்டு கிளம்பினாள்.

அரிஸ்டோ அறைக் கதவைச் சாத்திக் கொண்டு மறுபடியும் கம்ப்யூட்டர்க்கு முன்பாய் வந்து உட்கார்ந்தார். கீ போர்டில் பட்டன்களைத் தட்டி சார்ட்களை மாற்றி மாற்றி போட்டுப் பார்த்தார்.

பதினைந்து நிமிஷம் கரைந்து இருந்தபோது -

மேஜையின் மேல் இருந்த இண்டர்காம் முணுமுணுப்பாய் கூப்பிட்டது. ரிஸீவரை எடுத்தார். லாப்ரட்ரியை ஒட்டியிருந்த பங்களாவிலிருந்து லட்சணா பேசினாள்.

''ஸார்...''

''என்னம்மா... லட்சணா...! இன்னுமா நீ தூங்கலை...?''

''தூக்கம் வரலை ஸார்...''

''மாத்திரை போட்டுகிட்டியா...?''

''போட்டுகிட்டேன். போட்டும் தூக்கம் வரலை...''

''படுக்கும்போது கண்டதையும் நினைக்கக்கூடாது. நீ சீக்கிரமா படுத்து தூங்கு. காலையில் அஞ்சு மணிக்கெல்லாம் எழுந்து குளிச்சு ரெடியாயிடணும்... நாளைக்கு லேப்ல உனக்கு ஒரு முக்கியமான எக்ஸ்பரிமெண்ட் இருக்கு... உனக்குத் தூக்கம் வரலைன்னா இன்னொரு மாத்திரையையும் போட்டுக்க.''

''ஸ... ஸார்...''

''என்னம்மா...''

''ஒரு வாரத்துக்குள்ளே என்னோட உயிர் போயிடணும் ஸார். நான் உயிர் வாழுற ஒவ்வொரு நிமிஷமும் எனக்கு வெறுப்பாயிருக்கு... நான் ரொம்ப நாள் உயிர் வாழ விரும்பலை. ஒரு வாரத்துக்குள்ளேயே எல்லா சோதனைகளையும் முடிச்சுக்குங்க ஸார்... நீங்க லேட் பண்ணினா... நான் என்னோட உயிரை வேற விதத்துல முடிச்சுக்க வேண்டியிருக்கும்...''

லட்சணா படபடவென்று பொரிந்துவிட்டு பெரிய சத்தத்தோடு ரிஸீவரை வைத்துவிட அரிஸ்டோ இறுகிய முகத்தோடு கண்களை மூடிக்கொண்டார்.

# 19

இன்ஸ்பெக்டர் கௌடாவும் மதுவும் பரணியின் அப்பா சக்கரபாணியை அவருடைய பங்களாவில் போய் பார்த்தபோது அவர் இடிந்து போய் உட்கார்ந்திருந்தார். கையில் கவலையை மறப்பதற்காக விஸ்கி நிரம்பிய டம்ளர். மது, கௌடாவை சக்கரபாணிக்கு அறிமுகப்படுத்தினான்.

''அங்கிள்...! இவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் கௌடா. ஊட்டியிலிருந்து வந்திருக்கார்...''

சக்கரபாணி டம்ளரில் இருந்த விஸ்கியை ஒரே மூச்சில் காலி செய்துவிட்டு கௌடாவை ஏறிட்டார். நாற்காலியைக் காட்டினார்.

''உட்காருங்க...''

கௌடா உட்கார்ந்ததும் கேட்டார்.

''என்ன விஷயம்...?''

லட்சணா விவகாரத்தை ஒரே நிமிஷத்தில் சொல்லி கையில் இருந்த லட்சணாவின் போட்டோவையும் காட்டினார் கௌடா. சக்கரபாணி போட்டோவை பார்த்துவிட்டு கௌடாவிடம் நிமிர்ந்தார்.

''என் பையன் பரணிக்கும் இந்தப் பொண்ணு லட்சணாவுக்கும் தொடர்பு இருக்கும்னு சொல்ல வர்றீங்களா?''

''ஸாரி... அது தொடர்பு இல்லை. காதல்...''

''என்னைப் பொறுத்தவரைக்கும் அது ரெண்டும் ஒண்ணுதான்! இதோ பாருங்க மிஸ்டர் கௌடா... என்னோட பையன் பரணி இப்போ ஐ.ஸி. யூனிட்ல உயிர்க்கு போராடிகிட்டு இருக்கான். நாலு நாளா சுய நினைவு திரும்பலை. கோமா ஸ்டேஜ். எல்லா பெரிய டாக்டர்களையும் வரவழைச்சு பார்த்துட்டேன். யாரும்



பாஸிட்டிவா பதில் சொல்லலை... அவன் உயிர் பிழைக்கணும்னு நான் வேண்டாத தெய்வம் இல்லை... உள்ளுக்குள்ளே உருக்குலைஞ்சு போயிட்டிருக்கேன். இப்போ வெந்த புண்ணில் வேல் மாதிரி இந்த லட்சணா விஷயம்...! அநாதை விடுதியில் இருந்த ஒரு பெண் சொன்னதை வேத வாக்கா எடுத்துக்கிட்டு நீங்க நேரிடையா விசாரிக்க வந்தது எந்த விதத்துல நியாயம் இன்ஸ்பெக்டர்...?''

''மிஸ்டர் சக்கரபாணி! உங்க சன் பரணி ஒரு விபத்துல சிக்கி ஐ.ஸி. யூனிட்டில் இருக்கிற விஷயம் இங்கே வந்த பிறகுதான் எனக்குத் தெரியும்... இது ஒரு மாமூலான என்கொய்ரிதான். லட்சணா தன்னோட தற்கொலை முயற்சிக்கான காரணத்தை சொல்லாததால்தான் இந்தப் பிரச்னை... லட்சணாவை உங்களுக்கும் தெரியாதுன்னு சொல்லிட்டீங்க. ஸோ... இந்தப் பிரச்னையை நான் இதோடு விட்டுடறேன்... ப்ளீஸ் பி... கம்பர்டபிள்...''

கௌடா சொல்லிக்கொண்டே எழ முயன்ற விநாடி டீபாயின் மேலிருந்த டெலிபோன் அவசர கதியில் கூப்பிட்டது.

மது ரிஸீவரை எடுத்தான். ''ஹலோ'' என்று சொல்லி பேச்சை செவிமடுத்தவன் ரிஸீவரை சக்கரபாணியிடம் நீட்டினான்.

''அங்கிள்! டாக்டர் லைன்ல இருக்கார்.''

வாங்கி பேசினார்.

''ஹலோ டாக்டர்...''

''மிஸ்டர் சக்கரபாணி! உங்களுக்கு ஒரு சந்தோஷமான செய்தி. உங்க சன் பரணிக்கு லேசா கான்ஷியஸ் வந்திருக்கு.''

குபீரென்ற ஒரு சந்தோஷத்துக்குப் போனார் சக்கரபாணி.

''ரியலி...?''

''எஸ்... இது மெடிக்கல் மிர்ராக்கிள்னுதான் சொல்லணும்... ஒரு அஞ்சு நிமிஷத்துக்கு முன்னாடி

லேசா கண் திறந்து பார்த்தார்.''

''பரணி ஏதாவது பேசினானா... டாக்டர்...?''

''பேசலை... பட் ஒரு பேரைச் சொல்லி முனகினார்.''

''பே... பேரா... என்ன பேர்...?''

''லட்சணா...!''

# 20

காம்பௌண்ட் கேட் அருகே ஹார்ன் சத்தம் கேட்டு அரிஸ்டோ கம்ப்யூட்டரிலிருந்து கலைந்தார்.

'அமர்நாத் வந்துவிட்டான்!'

சுவர் கடிகாரத்தில் நேரம் பார்த்தார்.

நேரம் 10.05.

லேப் கதவை சாத்திக் கொண்டு வெளியே வந்தவர் இருட்டான வராந்தாவில் சற்று வேகமாய் நடந்து காம்பௌண்ட் பகுதிக்கு வந்து கேட்டைத் திறந்துவிட்டார். அந்த கண்ட்டெய்னர் வேன் உள்ளே வந்தது. ஒரு மரத்துக்குக் கீழே போய் நின்று இயக்கங்களை நிறுத்திக்கொள்ள அமர்நாத் டிரைவிங் சீட்டிலிருந்து கீழே குதித்தான். அரிஸ்டோ பக்கத்தில் போய் அவனுடைய கைகளைப் பற்றிக் கொண்டார்.

அமர்நாத் கிட்டத்தட்ட ஆறடி உயரம் இருந்தான். நல்ல சிவப்பு. தலை கொள்ளாத முடி. அழுக்கான வெள்ளை குர்தாவில் பான் மெல்லும் வாயோடு தெரிந்தான். அரிஸ்டோவிடம் கேட்டான்.

''லேபில் யாரும் இல்லையே?''

''இல்லை...''

''ஷோபியா?''

''அவ வீட்டுக்கு கிளம்பிப் போய் ஒரு மணி நேரமாச்சு...''

''அந்த லட்சணா...?''

''பங்களா அறையில் தூங்கிட்டிருக்கா...''

''அப்புறமென்ன பயம்...! உங்க தோள் மேல்



கையைப் போட்டுக்கிறேன்...'' சொன்ன அமர்நாத் புரபசரின் தோளில் கையைப் போட்டு இறுக்கிக் கொண்டான்.

அரிஸ்டோ சிரித்தார். ''மொதல்ல எல்லா ஸ்பெசிமென்ஸையும் கொண்டுபோய் உள்ளே வைப்போம். அப்புறமா டின்னர் சாப்ட்டுகிட்டே பேசுவோம்...''

''அதுவும் சரிதான்...!'' அமர்நாத் வேனின் கண்ட்டெய்னர் பகுதியை ஓப்பன் செய்து பிராணிகள் அடைபட்டிருந்த கூண்டுகளைத் தூக்கிக் கொண்டு உள்ளே போனான்.

இருபது நிமிட நேரத்தில் எல்லா ஸ்பெசிமென்களும் உள்ளே போய்விட, அரிஸ்டோவும் அமர்நாத்தும் கதவைச் சாத்திக் கொண்டு உள் அறை ஒன்றுக்குப் போனார்கள். நாற்காலிகளில் சாய்ந்து கொண்டார்கள்.

''புரபசர் ஸார்... உங்களுக்கு மொதல்ல ஒரு சந்தோஷமான செய்தி...''

''என்ன...?''

''ஸ்விஸ் பேங்கில் உங்க அக்கௌண்ட்ல போனவாரம் ஒரு கோடி டாலர் கட்டியிருக்கு...''

''எதுக்கு அவ்வளவு பணம்...?''

''உங்க கண்டு பிடிப்பான 'ஸ்பை கேட்'டுக்கு 'ட்ரிபிள் எஸ்' தீவிரவாத அமைப்பு கொடுத்த சன்மானம்... இன்னும் இருபது பூனைகள் அவங்களுக்கு தேவைப்படுது...''

''இருபது பூனைகளா...! ஒரு மாச காலம் தேவைப்படுமே...''

''ரெண்டு மாசம் எடுத்துகிட்டாலும் பரவாயில்லை. போன தடவை அனுப்பின மாதிரியே ஸ்பெசிமென்ஸ் இருக்கணும்.''

''கொடுத்துடலாம்...''

''புரபசர் ஸார்... இந்திய ராணுவத்துக்கு இன்னும் ஸ்பை கேட் சப்ளை பண்ணலையே...?''

அளவு சப்ளை பண்ணின பிறகுதான் இந்திய ராணுவத்துக்கு...! நான் இதுவரைக்கும் கண்டுபிடிச்ச எல்லா விஞ்ஞான சங்கதிகளையும் அப்படித்தானே சப்ளை பண்ணியிருக்கேன்... 'ஸ்பை கேட்' தயாரிப்பில் சில குறைபாடுகள் இருக்கிற மாதிரி பாவ்லா பண்ணி நாட்களைக் கடத்திகிட்டு இருக்கேன். இந்த அவகாசத்துக்குள்ளே எல்லா தீவிரவாத அமைப்புகளும் 'ஸ்பை கேட்'களோடு இந்தியாவுக்குள் ஊடுருவி விடவேண்டும்...''

''சரி... புரபசர் ஸார்... இப்போ லாப்ரட்ரியில் எவ்வளவு 'ஸ்பை கேட்'கள் ரெடியாயிருக்கு.''

''பத்து.''

''நான் இன்னிக்கே கொண்டு போயிடலாமா?''

''ம்... கொண்டு போயிடு...''

''ஷோபியாவுக்கு உங்க மேல் எந்த சந்தேகமும் இல்லையே?''

''ஒரு சந்தேகமும் கிடையாது... இந்திய ராணுவத்துக்காக நான் அல்லும் பகலும் உழைக்கிறதா... நினைச்சு பெருமைப்பட்டுகிட்டு இருக்கா... லேப்ல நான் சொன்ன வேலையை செஞ்சுட்டு மாசமானா கவர்மெண்ட்ல சம்பளத்தை வாங்கிக்குவா...''

''அப்புறம் இன்னொரு விஷயம் பேப்பர்ல பார்த்தேன் புரபசர் ஸார்! நீங்க ஊட்டிக்கு பயணம் பண்ணின ஃப்ளைட்டில் சி.பி.ஐ.யைச் சேர்ந்த சஞ்சய்குமார் என்கிற ஒரு அதிகாரி, 'ஆசிப் உஸ்மான் முல்லா'ன்னு பேரை மாத்திகிட்டு மாறு வேஷத்தில் ட்ராவல் பண்ணியிருக்கார். அது உங்களை கண் காணிக்கவா...?''

''இல்லை... அது ஃப்ளைட்டில் வந்த இன்னொரு தீவிரவாதியை கண்காணிக்க அந்த அதிகாரி வந்திருக்கார். ஆனா துரதிர்ஷ்டவசமா அவரே கோவை ஏர்போர்ட்டில் போலீஸ் அதிகாரிகளிடம் மாட்டிகிட்டார். உண்மையைச் சொல்லி புரிய வைக்கிறதுக்குள்ளே நர்ஷஸிங் என்கிற போலீஸ்



அதிகாரி சஞ்சய்குமாரைத் தாக்க, அடி படக்கூடாத இடத்தில் பட்டு ஆள் உடனடி மரணம்...''

''உங்களை கண்காணிக்க வந்த அதிகாரியோன்னு நான் நினைச்சுட்டேன்...''

''அமர்நாத்! ஒரு விஷயத்தை நீ புரிஞ்சுக்கணும். எனக்கு தீவிரவாதிகளினால் ஏதோ ஆபத்து இருக்கிற மாதிரி ஒரு மாயையை உருவாக்கிவிட்டிருக்கோம். ஊட்டி வெலிங்டனில் நான் டாக்ஸியில் போய் இறங்கியபோது ராம்பால் என்கிற ராணுவ அதிகாரி என்னைக் கூட்டிகிட்டு போறதுக்காக ராணுவ ஜீப்பில் வந்திருந்தார். அந்த ராணுவ ஜீப்புக்கு அடியில் மேக்னட் டைனமைட்டை ஒட்ட வெச்சது யாரு...?''

''நான்தான்...!''

''ஆனா வெளியே என்ன பேச்சு...? புரபசர் அரிஸ்டோவைக் கொல்ல தீவிரவாத இயக்கங்கள் மும்முரம். ஹிட்லிஸ்ட்டில் இருக்கிற முதல் நபர் அரிஸ்டோ... இந்த ரீதியில்தான் பேப்பர்களும் நியூஸ் போட்டுகிட்டு இருக்காங்க! டி.வி. சேனல்களும் நியூஸை ப்ளாஷ் பண்ணிகிட்டு இருக்காங்க...! இதனால் பொது மக்கள் மத்தியில் எனக்கு நிறையவே அனுதாபம்.''

''புரபசர் ஸார்... இந்தியாவின் எந்த மாநிலத்தில் நீங்க தேர்தலுக்கு நின்னாலும் ஜெயிப்பீங்க... அந்த அளவுக்கு ஜனங்க மத்தியில் உங்களுக்கு பாப்புலாரிடி இருக்கு...''

''அமர்நாத்...! உன்கிட்டே இன்னொரு விஷயத்தை சொன்னா நீ விசில் அடிப்பே...''

''அப்படியா...! என்ன விஷயம்...?''

''இந்த வருஷம் எனக்கு 'பாரத ரத்னா' விருது கொடுக்கிறதுக்காக இந்திய அரசாங்கம் முடிவு பண்ணியிருக்காம்...''

''ஆஹா...! இதுவல்லவா நியூஸ்...!'' சொன்ன அமர்நாத் சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக் கொண்டான். முதல் புகையை வெளியே விட்டதும் கேட்டான்.

'புரபசர் ஸார்... அந்த லட்சணாவை இப்போ எந்த

ஆராய்ச்சிக்காக உபயோகப்படுத்திகிட்டு இருக்கீங்க...?''

''ஷோபியாகிட்டே 'பயோஸீரம் பிரிப்ரேஷனுக்காக'ன்னு சொல்லிட்டு நான் 'ஹார்ட் க்ளோனிங்'குக்கு அவளை உபயோகப் படுத்திக்கப் போறேன்.''

''ஹார்ட் க்ளோனிங்கா...! அப்படீன்னா...?''

''க்ளோனிங் குழந்தைகள் மாதிரி உயிருள்ள ஒரு நபரின் இருதய செல்களை எடுத்து அதை பன்றியோட இருதய செல்களில் சேர்த்து இணைய வைத்து, பதியம் போட்டு நூற்றுக் கணக்கில் மனித இதயங்களை உருவாக்குவது... இந்த இதயங்கள் மாற்று இருதய ஆபரேஷன்களுக்கு உதவும். லட்சணா மாதிரியான ஒரு ஆரோக்கியமான பெண்ணின் இருதய செல்கள் இந்த ஆராய்ச்சிக்கு ரொம்பவும் தேவை.''

''அதாவது லட்சணாவின் இருதயத்தை கொஞ்சம் கொஞ்சமாய் சுரண்டி எடுத்து இந்த 'ஹார்ட் க்ளோனிங்' ஆராய்ச்சியை பண்ணப் போறீங்க...?''

''ஆமா...''

''அப்படீன்னா லட்சணாவோட மரணம் இப்போ இல்லை?''

''ஆமா... இன்னும் ஒரு வருஷத்துக்காவது லட்சணா உயிரோடு இருந்து, தன்னோட இருதய செல்களை எனக்கு கொஞ்சம் கொஞ்சமாய் கொடுத்து என்னோட ஆராய்ச்சிக்கு உதவி பண்ணிட்டே இருக்கணும்.''

''புரபசர் ஸார்...! அந்தப் பெண் லட்சணாவை நான் பார்க்கணும்...''

''அவ தூங்கிட்டிருப்பா...''

''பரவாயில்லை... வாங்க போய்ப் பார்க்கலாம். போட்டோவில் அவ ரொம்பவும் அழகாய் இருந்ததாய் ஞாபகம்...''

அமர்நாத் தன் விரலிடுக்கில் புகைந்து கொண்டிருந்த சிகரெட்டை சுண்டி எறிந்துவிட்டு எழுந்தான்.

# 21

சக்கரபாணியின் முகம் அதிர்ச்சி அலைகளில் புரண்டது.

''என்ன... பேர் சொன்னீங்க டாக்டர்...?''

''லட்சணா...!''

''வேற எதுவுமே பரணி பேசலையா டாக்டர்?''

''பேசலை...! யார் அந்த லட்சணா...''

''அது... வந்து டாக்டர்...''

''காதலியா...?''

''இல்ல டாக்டர்...''

''பின்னே...?''

சக்கரபாணி மௌனமாய் இருக்க டாக்டர் மறுமுனையில் தொடர்ந்தார். ''இதோ பாருங்க மிஸ்டர் சக்கரபாணி! உங்க சன் பரணிக்கு கான்ஷியஸ் திரும்பியது... தெய்வச்செயல்னுதான் சொல்லணும். கான்ஷியஸ் திரும்பியது மட்டும் இல்லை... லட்சணாங்கிற பேரைச் சொல்லியும் முனகுகிறார். அந்தப் பெண் லட்சணா யாராக இருந்தாலும் பரவாயில்லை... உடனே அவளை இங்கே வரவழைக்க ஏற்பாடு பண்ணுங்க... அந்தப் பெண் வந்து பரணிக்கு பக்கத்துல உட்கார்ந்து ஒரு அஞ்சு நிமிஷம் பேசினா போதும், பரணிக்கு முழு கான்ஷியஸ்ம் பேச்சும் வந்துடும். அதுக்கப்புறம் எங்கள் மெடிக்கல் ட்ரீட்மெண்டை ஆரம்பித்தால் ஒரு வாரத்துக்குள்ளே ஹி வில் பி ஆல்ரைட்... நீங்க உடனே புறப்பட்டு ஹாஸ்பிட்டலுக்கு வாங்க... மத்ததையெல்லாம் நேர்ல பேசிக்கலாம்...''

டாக்டர் மறுமுனையில் ரிஸீவரை வைத்துவிட சக்கரபாணி வியர்வை முகமாய் கௌடாவை ஏறிட்டுப் பார்க்க அவர் கேட்டார்.

''என்ன விஷயம் ஸார்... லட்சணாங்கிற பேர் காதுல விழுந்தது...?''

''அது... வந்து... அது... வந்து... ஒண்ணும் இல்லை...''

''மிஸ்டர் சக்கரபாணி! டாக்டர் பேசியது என்னோட காதிலும் ஓரளவுக்கு விழுந்தது. பரணிக்கு கான்ஷியஸ் வந்து 'லட்சணா லட்சணா'ன்னு முனகியிருக்கார்... டாக்டர் இப்போ அந்த லட்சணாவை கூட்டிகிட்டு வரும்படி சொல்றார். இனிமேலும் உண்மையை மறைச்சு என்ன பிரயோஜனம்? லட்சணா பரணியோட காதலிதானே...?''

சக்கரபாணி அவசர அவசரமாய் மறுத்தார்.

''இல்ல... லட்சணா பரணியோட காதலி கிடையாது.''

''பின்னே...?''

''தங்கச்சி...''

கௌடா உறைந்தார்.

''என்ன... சொன்னீங்க... லட்சணா பரணியோட சிஸ்டரா...?''

''ஆமா... இருபத்தி மூணு வருஷத்துக்கு முன்னாடி கோத்தகிரியில் நான் தங்கியிருந்து எஸ்டேட் வேலைகளைப் பார்த்துகிட்டு இருந்தபோது, எனக்கும் தேயிலைத் தோட்டத்தில் கூலிவேலை பார்த்த மாரம்மா என்கிற பெண்ணுக்கும் தொடர்பு ஏற்பட்டது. மாரம்மா கர்ப்பமானபோது நான் வெளிநாட்டுக்கு போய்ட்டேன். மாரம்மா என்னைக் காட்டிக் கொடுக்காமலேயே ஒரு பெண் குழந்தையைப் பெத்துட்டு பிரசவ மயக்கம் தெளியாமலே இறந்து போய்ட்டா. அந்தக் குழந்தையை கோத்தகிரியில் இருந்த 'பட்ஸ்' அநாதை விடுதியில் சேர்த்துட்டு மாரம்மாவோட அப்பா ஊரைவிட்டே போய்ட்டதா கேள்விப்பட்டேன். நான் வெளிநாட்டிலிருந்து வந்ததும் எதேச்சையாய் ஒரு தடவை 'பட்ஸ்' அநாதை விடுதிக்கு போகிற மாதிரி போய் அந்தக் குழந்தையைப் பார்த்துட்டு வந்தேன். அந்தக் குழந்தை அங்கேயே வளர்ந்து வந்தது. கடந்த 23 வருஷ காலமாய் நான் மறைச்சு வச்சிருந்த இந்த



உண்மை, போன வருஷம் ஒரு நர்ஸ் மூலமா பரணிக்கு தெரிஞ்சு என்கிட்டே வந்து கேட்டான். நான் மொதல்ல உண்மையை சொல்ல மறுத்து அப்புறம் ஒத்துகிட்டேன். 'லட்சணா என்னோட தங்கை. அவளை இந்த வீட்டுக்கு முறைப்படி கூட்டிட்டு வந்து அவளுக்கு கல்யாணத்தை சீரும் சிறப்புமா பண்ணி வைக்கணும்'ன்னு பரணி என்கூட சண்டை போட ஆரம்பிச்சான். நான் ஒத்துக்கலை. ஆனா பரணி அடிக்கடி கோத்தகிரி அநாதை விடுதிக்குப் போய் லட்சணாவைப் பார்த்து பேச ஆரம்பிச்சான். வீட்டுக்குக் கூப்பிட்டான். ஆனா லட்சணா வர விருப்பப்படலை... எனக்கும் பரணிக்கும் நடுவில் தான் ஒரு பிரச்னையா இருக்க விரும்பாத லட்சணா தற்கொலை முடிவுக்கு போய்ட்டா...''

சக்கரபாணி பேசி முடித்ததும் - கௌடா சிலவிநாடி இடைவெளிக்குப் பின் பேச்சைத் தொடர்ந்தார்.

''மிஸ்டர் சக்கரபாணி! நீங்க சின்ன வயதில் பண்ணிய தப்பை இப்போ ரெக்டிஃபை பண்ணியிருக்கலாம். பட் அந்தஸ்து காரணமா அதை தவிர்த்துட்டீங்க. இப்பவும் ஒண்ணும் கெட்டுப் போயிடலை. லட்சணா இப்போ டெல்லியில் புரபசர் அரிஸ்டோகிட்டே பத்திரமாயிருக்கா. நீங்க சரின்னு சொன்னா உடனடியா டெல்லியில் இருக்கிற என்னோட போலீஸ் நண்பர்க்கு தகவல் கொடுத்து லட்சணாவை அடுத்த ஃப்ளைட்டிலேயே கூட்டிட்டு வரச்சொல்லிடலாம்... என்ன சொல்றீங்க...?''

சக்கரபாணியின் கண்களில் இப்போது நீர்.

''இனிமே சொல்ல என்ன இருக்கு மிஸ்டர் கௌடா. பரணி என்னோட மகன் என்பது எவ்வளவு உண்மையோ அதேபோல் லட்சணாவும் என்னோட மகள்தான்... லட்சணாவை வரவழைக்க ஏற்பாடு பண்ணுங்க...''

''தேங்க்யூ...!'' என்று சொன்ன கௌடா தன்னுடைய செல்போனை எடுத்து டெல்லியில் உள்ள தன்னுடைய சி.பி.ஐ. நண்பர் திருநாவுக்கரசைத் தொடர்பு கொண்டார்.

''திரு...! நான் கௌடா...''

''அடே...! அதிசயமா என்ன போன்... ஏதாவது ப்ரமோஷனா...?''

''அதெல்லாம் ஒண்ணும் இல்லை... நீ எனக்கு உடனடியா ஒரு உதவி பண்ணனும்...''

''சொல்லு... பண்ணிடுவோம்.''

''டெல்லியில் புரபசர் அரிஸ்டோவின் வீடு தெரியுமா?''

''தெரியும்...''

''உடனே நீ போய் அவரை சந்திக்கணும்...''

''என்ன விஷயம்...?''

கௌடா ஒரு ஐந்து நிமிஷ நேரத்தை செலவழித்து லட்சணாவைப்பற்றி சொல்லி முடிக்க அந்த திருநாவுக்கரசு சிரித்தார்.

''என்ன ஒரு ஆச்சர்யம் பார்த்தியா கௌடா?''

''ஆச்சர்யமா...?''

''ஆமா... நீ சொன்ன லட்சணா இப்போ எங்க சி.பி.ஐ. பாதுகாப்பில் இருக்கா...''

''லட்சணா உங்க பாதுகாப்பில் இருக்காளா?''

''ஆமா...''

''அப்போ அரிஸ்டோ...?''

''நேற்று ராத்திரி கைது செய்யப்பட்டு அவர் ரகசியமா போலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டு இருக்கார்...''

''அரிஸ்டோ கைதா...?''

''ம்...''

''என்ன தப்பு பண்ணினார்...?''

''நிறைய தப்புகள். தேசத்துரோகம். தீவிரவாதிகளோடு தொடர்பு. அழிவை ஏற்படுத்தும் விஞ்ஞானப் பொருட்கள் சப்ளை.''

''மைகுட்னஸ்! எப்படி மாட்டினார்...?''

''அமர்நாத்ன்னு ஒரு தீவிரவாதி. அவனுடைய போட்டோ போனவாரம்தான் டெல்லி சி.பி.ஐ. பிரிவுக்கு வந்தது. அவன் டெல்லியில் இருக்கிறதாக தகவல். வலையை விரிச்சு வெச்சோம். நேத்து ராத்திரி வேன்



ட்ரைவர் ஒருத்தன் அமர்நாத் மாதிரியே இருக்கிறதாக நிஜாமுதீன் செக்போஸ்ட்டிலிருந்து தகவல் வந்தது. உடனே சி.பி.ஐ. ஷேடோஸ்க்வாடைச் சேர்ந்த ரெண்டு பேர் அந்த வேனை ஃபாலோ பண்ணினாங்க... அந்த வேன் நுழைஞ்ச இடம் புரபசர் அரிஸ்டோவின் பங்களாவும் லேபும் இணைந்த வளாகம். அடுத்த பத்து நிமிஷத்துக்குள் அந்த வளாகத்தை போலீஸ் ரவுண்ட் அப் பண்ணி அதிரடியா உள்ளே நுழைஞ்சுட்டாங்க... அரிஸ்டோவும் அமர்நாத்தும் லேபைவிட்டு வெளியே வந்து, பங்களாவில் தூங்கிட்டிருந்த லட்சணாவைப் பார்க்க போகும்போது போலீஸ் கைது பண்ணிட்டாங்க.''

''லட்சணாவுக்கு எந்த ஆபத்தும் இல்லையே?''


''இல்லை... ஆனா சோர்வா இருக்கா...''

''அவகிட்டே நான் பேசணுமே.''

''ஒரு நிமிஷம் லைன்ல இரு... பேசலாம்.''

கௌடா சந்தோஷமாய்க் காத்திருந்தார்.

(முற்றும்)



ஜீயே பப்ளிகேஷனுக்காக ஜீயே பப்ளிகேஷனில் அச்சிட்டு (பிரஸ்) வெளியிடுபவர் மற்றும் உரிமையாளர் ஜி. அசோகன். முகவரி: 6/322, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை - 5.
ஆசிரியர்: ஜி.அசோகன். தொலைபேசி: 8544294